உ

ஆ. மாணிக்கம்,
மணவழகு தமிழகம்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

ஸ்ரீ

எட்டுத்தொகையுள்

நெடுந்தொகை

ஆகும்

அகநானூறு

மூன்றாவது

நித்திலக்கோவை

மூலம்

இது

ஸேதுசமஸ்தானம் வித்வான்

ஸ்ரீ உ. வே.

ரா. ராகவையங்கார்ஸ்வாமிகள்

பரிசோதித்துத்தந்தது

கம்பர் விலாசம்

ஸ்ரீவத்ஸ சக்ரவர்த்தி

ராஜகோபாலார்யன்

பதிப்பு

கம்பர் புஸ்தகாலயம்

மயிலாப்பூர், சென்னை

ஸ்ரீமுக௵ ஆவணி௴

1933

PRINTED AT THE
R. G. Press, G. T. Madras.

ஸ்ரீ:

இரண்டாம் பதிப்பின் முகவுரை

அகநானூற்றினை யான் சில வருஷங்களுக்கு முன் ஸேது ஸம்ஸ்தானம் மகா வித்வான் கவிசேகரர் ஸ்ரீ உ. வே. ராகவையங்கார் ஸ்வாமிகளின் பரிசோதனையையும் சென்னைத் தமிழ் லெக்ஸிகன் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ உ. வே. மு. ராகவையங்கார் ஸ்வாமிகளின் ஆராய்ச்சியையும் துணையாகக் கொண்டு அச்சிட்டபோது அதற்குப் பழைய உரையில்லாத பாடல்களுக்கு ஒரு குறிப்புரை எழுதி வெளியிட வேண்டுமென்னும் அவா மிகுதியுமுடையவனா யிருந்தேன். ஆயினும் அக்காலத்து எனக்குற்ற பல விபத்துக்களாலும் பொருள் முட்டுப்பாட்டாலும் அதை நிறைவேற்ற இயலாதவனாய் மூலத்தை மட்டும் வெளியிட்டேன். பின்னர் அன்றுதொட்டு இன்றளவும் அவ்வவா என் மனத்தினீங்காது பெருகிக்கொண்டே வந்ததேனும், கொடிய இருமல் இரைப்பு முதலிய நோய்களினால் யாதும் செய்யமாட்டாதவனாயினேன்.

இப்பால் திருக்குற்றாலம், நீலகிரி முதலிய ஸ்தலவாஸங்களாலும் சிறந்த மருத்துவர்களின் ஔஷதப் பிரயோகங்களாலும் பாகவதர்களின் அநுக்ரஹ விசேஷத்தாலும் ஸர்வேச்வரன் கிருபாகடாக்ஷத்தாலும் யான் ஒருவாறு நோய் தணிந்தேனாகி, முன்னர் இந்நூலை அச்சிடுங்காலத்து அவ்விராகவ ஸிம்ஹங்கள்பால் யான் பன்முறையுங் கேட்டு ஐயங்களைத் தெளிந்து கொண்டிருந்தமையாலும், பண்டு நற்றிணை யுரையாசிரியரும் என் மனத்தகத்து என்றும் நிலவும் வள்ளலும் ஆகிய காலஞ்சென்ற பின்னத்தூர் அ. நாராயணஸ்வாமி ஐயரவர்கள் இந்நூலைச் சோதித்து உரை எழுதி வந்தகாலத்து அவர்கள் திருவடி நீழலில் உறைந்திருந்த பாக்கியத்தாலும் இப்பெருநூற்கு உரை எழுதத் துணிந்து, என் சிற்றறிவிற் கெட்டியவண்ணம் ஒருவாறு எழுதி வந்து,

முதற் புத்தகமாகக் களிற்றியானைநிரையை உரையுடன் அறிஞர் திருமுன்னர்ச் சென்ற அக்ஷயவருஷம் ஸமர்ப்பித்தேன். அஃது இப்போது சென்னை யூனிவர்ஸிடியாரால் வித்வான் பட்டப் பரீக்ஷைக்குப் பாடமாக வைக்கப் பெற்றிருத்தலை யறிந்து மகிழ்ந்து அவர்கள்பால் என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

இப்பதிப்புப் பிறபட்டுக்கிடைத்த சில ஏட்டுப் பிரதிகளாலும், ஆராய்ச்சியாலும் சில திருத்தங்களை அடைந்துள்ளது. இஃது அச்சாகுங் காலத்து யான் படுத்தபடுக்கையாய்க் கிடக்கையைவிட்டெழ வியலாது கடுநோயுற்று ஸர்வேஸ்வரன் திருவடியை யடைவது இப்போதோ சிறிது அப்பாலோ வென்று நோக்கிக்கொண் டிருந்தமையால், இதனைச் சோதிக்கும் பொறுப்பைக் கருணையுடனும் பிரீதியுடனும் தாமே மேற்கொண்டும், அரிய பல உரை நயங்களை ஆங்காங்கு எடுத்துக் காட்டியும் பதிப்பினைப் பூர்த்திசெய்தருளிய சென்னை லெக்ஸிகன் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ உ. வே. மு. இராகவையங்கார் ஸ்வாமிகளின் திருவடிகளை என்றும் உபாஸிக்குங் கடப்பாடுடையேன். இவர்கள் கிருபை செய்திராவிடில் இப்பதிப்புத் தமிழ்மக்கட்குக் கிடைத்திராதென்பது ஒருதலையாதலால், இப்பெரியார்பால் அவர்கள் நன்றிபாராட்டற் குரியர்.

அறிவாற்றல்களில் மிகச் சிறியேனாகிய யான் பெரியார் பலர் உதவியைப் பெற்றிருப்பினும் பல பெரும் பிழைகள் செய்திருக்கக்கூடும். அறிஞர் அவற்றைப் பொறுத்துக் கொள்வாராக.

இப்பெருங் காரியத்திற்கு எவ்வாற்றானும் இயைபில்லாத என்னைக் கொண்டு இதனை முற்றுவித்துக் கொண்டருளிய ஸர்வேஸ்வரன் திருவடித் தாமரைகளை அநவரதம் உபாஸிக்கின்றேன்.

இங்ஙனம்

கம்பர் விலாஸம்
மயிலாப்பூர்
ஸ்ரீமுகஞு ஐப்பசிமீ

ஸ்ரீவத்ஸசக்ரவர்த்தி
ராஜகோபாலார்யன்

ஸ்ரீ:

அகநானூறு

முகவுரை

இந்நூல் கடைச்சங்க காலத்துப் பத்துப்பாட்டு, எட்டுத் தொகை பதினெண் கீழ்க்கணக்கு எனப் பெயர்சிறப்பித்துக் கொண் டாடப்பெற்ற பெருந்தமிழ்ப் பனுவல் வகையுள் எட்டுத்தொகையு ளொன்றாய் உலக நிகழ்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்பட்ட இல்லற நடாத்தற்கண் தலைவனுந் தலைவியும் 'ஓருயிர்ப் புள்ளி னிரு தலை' போன்று ஒற்றுமைப்பட்டு ஒழுகற்குரிய விழுமிய பேரன் பின் பயனாகிய இன்பப்பகுதியை நன்கு விளக்கும் நானூறு அகவற் பாக்களை யுடையதோர் அகத்திணை நூலாகும். எட்டுத் தொகை நூல்களின் பெயரினை

> " நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
> றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
> கற்றறிந்தார் கூறுங் கலியோ டகம்புறமென்
> றித்திறத்த வெட்டுத் தொகை "

என்னும் பழைய வெண்பாவால் றிக.

வடமொழியாளர் மக்கட் குறுதிபயப்பனவாகப் பாகுபடுத்துக் கொண்ட அறம் பொரு ளின்பம் வீடு என்னும் புருடார்த்தங்களைத் தமிழ்மொழியாளர் அகம் புறம் என இருபகுதிப்படுத்து வழங்கு வர். புருடார்த்தம் நான்கனுள் இன்பம் ஒன்றும் அகம் எனவும், அறம் பொருள் வீடு என்னும் மூன்றும் புறம் எனவும் வழங்கப் படும். இவை இங்ஙனம் பெயர்பெறுதற்குக் காரணம் " ஒத்த அன் பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின் பம் அக் கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், யாண் டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பம் உறுவதோர் பொருளாத லின் அதனை அகம் என்றார். எனவே, அகத்தே நிகழ்கின்ற இன்பத் திற்கு அகம் என்றது ஓர் ஆகுபெயராம்; இதனை யொழிந்தன ஒத்த அன்புடையார்தாமேயன்றி எல்லார்க்குந் துய்த்துணரப்படுத லானும் இவை இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுதலானும்

அவை புறம் எனவேபடும். இன்பமே யன்றித் துன்பமும் அகத்தே நிகழுமாலெனின் அதுவுங் காமங் கண்ணிற்றேல் இன்பத்துள் அடங்கும். ஒழிந்த துன்பம் புறத்தார்க்குப் புலனாகாமை மறைக்கப்படாமையிற் புறத்திணைப் பாலவாம்" என உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் அகத்திணையியன் முகத்துக் கூறியவாற்றால் நன்குணரலாகும். தலைவனுந் தலைவியும் அமுதமும் அதன்கட் கரந்த சுவையும்போல நெஞ்சத்தாற் கலப்புடைய காரணத்தால் வேறுபாடிலராயினும் இவ்வின்பந் துய்த்தற்பொருட்டு ஒருயிரே ஈருருவெடுத்து நின்றாற்போல அவனென்றும் அவளென்றும் வேறுபட்டுத் தோற்றி அன்பின் வழிச்செல்லும் இன்ப வெள்ளத்துத் திளைக்கும் பேரழகு அதனை அநுபவிக்கின்ற அவரகத்தான் உணரப்படுவதன்றி அவருள்ளும் ஒருவருக் கொருவர் வாயினால் இற்றெனக் கூறலாவதோர் பெற்றித் தன்றாதலின் இங்ஙனங் கூறினார்.

> "ஆனந்த வெள்ளத் தழுந்துமொ ராருயி ரீருருக்கொண்
> டானந்த வெள்ளத் திடைத்திளைத் தாலொக்கும்"

என்னும் (307) திருக்கோவையாரானும்,

"சொற்பா லமுதிவள் யான்சுவை யென்னத் துணிந்திங்ஙனே, நற்பால் வினைத்தெய்வந் தந்தின்று நானிவ ளாம்பகுதிப், பொற்பா ரறிவார்" (திருச்சிற்—8) என்பத னுரைக்கட் பேராசிரியர் "நல்வினைத் தெய்வம் களவின்கட் கூட்ட அமுதமும் அதன்கட் கரந்து நின்ற சுவையுமென்ன என்னெஞ்சம் இவள்கண்ணே யொடுங்க, யானென்பதோர் தன்மை காணாதொழிய, இருவருள்ளமும் ஒருவேமாமாறு கரப்ப, ஒருவேமாகிய ஏகாந்தத்தின்கட் பிறந்த புணர்ச்சிப் பேரின்ப வெள்ளம் (இதனை யநுபவிக்கின்ற யானே யறியினல்லது) யாவரானறியப்படுமென்று மகிழ்ந்துரைத்தான்" என்று விளக்கியதனாலும் இப்பெயர்க்காரணம் ஆராய்ந்து கொள்ளப்படும்.

மேலே காட்டிய எட்டுத் தொகை நூல்களுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலி, அகம் என்னும் ஐந்து நூல்களும் இவ்வின்பப் பகுதியை விளக்கும் அகப்பொருள் பற்றியனவாகும். இவ்வைந்து நூல்களும் அகமேயாக முதனூன்கற்கும் வேறு வேறு பெயர் கூறி, இறுதி யொன்றனையே அகம் என்று பெயரிட்டாண்டது மற்றவற்றினும் இதற்கு அப்பொருள்பற்றிய சிறப்புநோக்கி யென்று ஆராயப்படும்.

இந்நூற்கு நெடுந்தொகை எனவும் பெயர் வழங்குதலுண்டென்பது இந்நூலிறுதியிலுள்ள பாயிரச் செய்யுள்களில்

"ஆய்ந்த கொள்கைத் தீந்தமிழ்ப் பாட்டு
ணெடிய வாகி யடிநிமிர்ந் தொழுகிய
வின்பப் பகுதி யின்பொருட் பாடல்"

எனவும்,

"இயற்பட யாத்தான், றொகையி னெடியதனை" எனவும், இந்நூற் பிரதியின்கண் "நெடுந்தொகை நானூறுங் கருத்தினோடு முடிந்தன" எனவும் வந்தவாற்றாற் றெளியப்பட்டது.

மேலேகாட்டிய அகப்பொருட் பகுதிபற்றிய நூல்கள் ஐந்தனுள் கலிப்பாவா னியற்றப்பட்ட கலியொன்று நீங்கலாக அகவற்பாவா னியற்றப்பட்ட மற்றுள்ள நூல்கள் நான்கனுள் இவ் வகநானூறொன்றே அடியளவாற் சிறுமை பதின்மூன்றும் பெருமை முப்பத்தொன்றுமாக அடிநிமிர்ந்தொழுகிய காரணத்தால் நெடுந்தொகை எனப் பெயர்சிறந்ததென்று தெளியலாகும். இனி, அகவலானாகிய இந்நான்கனுள்ளும் ஐங்குறுநூறு ஒன்றே ஐந்திணைக்குந் தனித்தனியேயாகிய குறுமையான நூறு நூறு பாவா ஞயினமைபற்றி ஐந்நூறு பாடல்களையுடைய தொரு நூலாதலின் அதனை வேறாக வழங்கி, மற்றை நானூறு நானூறு பாடல்களையுடைய நூல்கள் மூன்றனுள் அடிகுறைந் தொழுகியதனைக் குறுந்தொகை யென்றும், அடிநிமிர்ந் தொழுகியதனை நெடுந்தொகை யென்றும், இறப்பக் குறைதலும் இறப்ப நிமிர்தலும் இன்றி இடைநிலைப் பட்டதனை வேறோர் பெயரான் நற்றிணை யென்றும் பெயரிட்டனர் எனினும் நன்கு பொருந்துவதேயாகும். இந்நூற்கே இப்பெயருண்மை யுணராமையின் அகநானூறும், நெடுந்தொகையும் என வேறு வேறு எண்ணினர் பிற்காலத் தொருசிலர் என்றறிக.

இந்நூற்பாடல்களைப் பாடியருளிய நல்லிசைப்புலவர் ஒருநூற்று நாற்பத்தைவரென்பர். இந்நூன்முகத்துள்ள "கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்" என்னுங் கடவுள் வாழ்த்தினைப் பாடியருளியவர் பாரதம்பாடிய பெருந்தேவனார் என்பார். இந்நூற் பிரதிகளுள் 114, 117, 165 இம்மூன்று பாடல்களுக்கும் ஆசிரியர் பெயர் எழுதப்படாமையால் இப்போது கிடைத்த ஒருநூற்று நாற்பத்திருவர் பெயருடன் கடவுள் வாழ்த்துப் பாடினார் பெயரையுஞ்

சேர்த்து ஒருநூற்று நாற்பத்துமூவர் பெயர்க்கே இப்பதிப்பின்கண் வரலாறு எழுதப்பட்டுள்ளது.

இந்நூல் தொகுத்தருளியவர் மதுரை உப்பூரிகுடிகிழான் மகனார் உருத்திரசன்மர் என்பர். இவர் குமரக்கடவு ளவதாரம் என்பதும், மூங்கைப்பிள்ளையார் என்பதும், ஐயாட்டைப் பிராயத்தே அறிவு வீற்றிருந்த செறிவுடைமனத்தராய் நுணுகிய செவிப்புல னுடைய ராயினார் என்பதும், இறையனார் களவியலுரை கேட்ட காரணிகர் என்பதும், பிறவும் அந்நூன்முகவுரையா னன்குணரப்படும். இவர் மூங்கையா யிருந்தே கேள்வி வன்மையான் மேம்பட்டு விளங்கினா ரென்பது "யாத்தான், ஞூங்கையி னெடியதனைத் தோலாச் செவி யான்" என இந்நூற் பாயிரத்துக் கூறியவாற்றானும் உணரலாம். சொல்வன்மை யுடையராயிற் றோலா மொழியான் என்பர் என்க.

இவர், ஐந்திணையொழுக்கம் பற்றிப்போந்த இந்நானூறு செய் யுட்களை 1 முதல் 120 இறுதியாகவுள்ளன களிற்றியானைநிரை என வும், 121 முதல் 300 இறுதியாகவுள்ளன மணிமிடைபவளம் என வும், 301 முதல் 400 இறுதியாகவுள்ளன நித்திலக்கோவை எனவும் முத்திறமாக வகைசெய்து, அம்மூன்று வகையுமுடையதனை அகம் எனவும் நெடுந்தொகை எனவும் பெயர்தந்து நிறுவுமிடத்து, மற்றை நூல்களிற் காணப்படாத சிறப்பு முறையாக இன்ன செய்யுள் இன்ன திணையாகுமென்று கற்பார் எளிதி னறிந்துகொள்ளற்கும், தாங் கோத்தமுறை பிறழாது நின்று நிலவற்கும் பெருந்துணையாகப் பாலைத்திணை யெல்லாம் ஒற்றை எண்பெற்ற செய்யுட்களாகவும், குறிஞ்சித்திணை யெல்லாம் இரண்டும் எட்டும் என்னும் எண்களைப் பெற்ற செய்யுட்களாகவும், முல்லைத்திணையெல்லாம் நான்கு என்னும் எண்பெற்ற செய்யுட்களாகவும் மருதத்திணை யெல்லாம் ஆறு என் னும் எண்பெற்ற செய்யுட்களாகவும், நெய்தற்றிணை யெல்லாம் பத்து என்னும் எண்பெற்ற செய்யுட்களாகவும் மிகவும் அழகியதோர் முறை வைப்பின் நிறுவியருளியது "வியமெல்லாம் வெண்டே ரியக்கம்", "ஒன்றுமூன் றைந்தேழொன் பான்பாலை", "பாலை வியமெல்லாம்" என்னும் வெண்பாக்களாற் புலனாகும். இக்கோப்பு முறைவைப்பே இந்நூ லாராய்ச்சியிற் றிணைவிளக்கி நிற்பது கற்றார்க்குப் பெருமகிழ் செய்வது. இதனால் இந்நூலுள் பாலைத்திணைக்கு இருநூறு, குறிஞ் சித்திணைக்கு எண்பது, மருதம் முல்லை நெய்தல் என்னு மூன்று

திணைகட்குந் தனித்தனி நாற்பது செய்யுட்களுள்ளன என்றுணர்ந்து கொள்ளலாம்.

இந்நூல் தொகுப்பித் துதவியவன் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி என்பான். இவன் பாண்டியர் குலத்து முடியுடைப் பேரரசன் என்பது இவன்பெயரானும், இவன் நல்லிசைப் புலமையு முடையான் என்பது இவன் பாடிய "கூர்முண் முள்ளி," (26) என்னும் அகத்திணைப் பாட்டை இந்நாலுண் மருதத்திணைக்கு ஆசிரியர் உருத்திரசன்மர் கோத்து நிறுவியதனுலும் உய்த்துணரலாகும். இவன் கடைச்சங்க காலத்திறுதி யரசன் என்பது "அவர்களைச் சங்க மிரீஇயினர் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி யீருக நாற்பத்தொன்பதின்ம ரென்ப. அவருட் கவியரங்கேறினர் மூவர் பாண்டிய ரென்ப." என இறையனர் களவியலுரை முகவுரைக்கண் வருதலா னறியப்படும். கவியரங்கேறிய மூவர் பாண்டியருள் இவனும் ஒருவனுவன்.

இத்துணையுங் கூறியவாற்ருன் நூற்று நாற்பத்து நால்வர் நல்லிசைப்புலவர் அவ்வப்போதுகளிற் பாடிய அடிநிமிர்ந் தொழுகிய முந்நூற்றுத்தொண்ணூற் ருென்பான் அகத்திணைச் செய்யுட்களுடன் பாண்டிய னுக்கிரப்பெருவழுதி செய்யு ளொன்றையுங் கூட்டி, அவன் வேண்டுகோட் கிணங்கி ஆசிரியர் உருத்திரசன்மராற் றிணைநிலைப் படுத்துக் கோத்துத் தொகுக்கப்பட்டது அகநானூருகிய நெடுந்தொகை என்பதாயிற்று. இங்ஙனந் தொகுக்கப்பட்ட இந்நாற்குப் பாரதம்பாடிய பெருந்தேவனுராற் கடவுள்வாழ்த்துப் பாடிச் சேர்க்கப்பட்ட தென்றுணர்ந்து கொள்க.

இந்நூல் வழக்கினை எடுத்தாளப்பெருத நூலாசிரியரேனும் உரையாசிரியரேனுந் தமிழிலில்லையென்று துணிந்து சொல்லலாகும். ஆளுடைய அடிகள் தாம் இயற்றியருளிய திருச்சிற்றம்பலக் கோவையின் கட் பல்விடத்தும் இந்நாற் சொல்லையும் பொருளையும் எடுத்தாளுதல் கண்டுகொள்க. உதாரணமாகக் "கோழிலை வாழை" (2) என்னும் இந்நாற் குறிஞ்சித்திணைப் பாட்டின் சொல்லையும் பொருளையுமே கொண்டு "மையார் கதலிவனத்து" (262) என்னுந் திருக்கோவை விளங்குதல் நோக்கிக்கொள்க. இந்நூல் பண்டைக்காலத்து இத்தமிழ் நாட்டுள்ள மக்களின் இயல்பு, வழக்கு, நாகரிகம், மணமுறை இவற்றை அறிதற்கு வாயிலாதலுடன், அக்காலத்து அரசர்பெருமை, கொடை, வீரம், நீதி முறைமை, நாடு, ஊர், மலை, யாறு, காடு

கடற்றுறைமுதலிய பலவற்றையும், வள்ளல்கள் புலவர்கள் இவர் புகழ் பெருமிதம் இவற்றையும் நன்கு தெளிந்துகோடற்குக் கருவி யாகவும் உள்ளதென்பது இதனைக் கற்பார் எளிதி னறியத்தக்கது. இந்நூலுட் கூறப்படும் அகத்திணை யொழுக்கம் நினைந்தவுடன் மணந்து சினந்தவுடன் தணவும் இக்காலத்துச் சிலர் வதுவை போலாது எப்படியானுந் தணப்பரியதோர் கூட்டம் என்பது.

"யாக்கைக், குயிரியைந் தன்ன நட்பி னவ்வுயிர்
வாழ்த லன்ன காதல்
சாத லன்ன பிரிவரி யோளே" (339)

எனவும்,

"பிரிவின் றியைந்த துவரா நட்பி
னிருதலைப் புள்ளி னோருயி ரம்மே" (12)

எனவும் வருமிடங்கள் நோக்கி உய்த்துணர்ந்து கொள்ளலாம். இவ் வகத்திணைநூல் ஒத்த தலைவனுந் தலைவியும் அடுப்பாருங் கொடுப் பாருமின்றித் தம்முட் டாமே கூடும் கந்தருவ வழக்கத்தையே மிகுத்துக் கூறுவதாயினும், இக்காலத்துப்போலப் பெண் தன் வேட்கையை வெளிப்படுத்து நிற்கும் நாணமிலாமைக்கு உடன்படா தென்க. இதனைச்

"செந்தார்ப் பைங்கிளி முன்கை யேந்தி
யின்றுவர லுரைமோ சென்றிசினோர் திறத்தெனு
வில்லவ ரறித லஞ்சி மெல்லென
மழலை யின்சொற் பயிற்று
நாணுடை யரிவை" (34)

என மணந்த மனைக்கிழத்தி யியல்பு கூறியவாற்றா னுணர்க. மணந்து இல்லின்கண் வாழுந் தலைவி இயல்பு இதுவாயின் மணவாதவள் நாணம் இத்தகைத்தென்று ஊகித்தலாகும். திருத்தக்கதேவரும்

"என்றா ணினைந்தா ளிதுபோலு மிவ்வேட்கை வண்ணஞ்
சென்றே படினுஞ் சிறந்தார்க்கு முரைக்க லாவ
தன்றா யரிதா யகத்தே சுட்டுருக்கும் வெந்தீ
யொன்றே யுலகத் துறுநோய் மருந்தில்ல தென்றாள்."

(சிந். விமலை. 74.) என்பதனு லிவ்வேட்கை குரவர்க்கும் மகளிராற் கூறலாகாத தென்று விளக்குதல் காண்க. கல்வியிற் பெரிய கம்பரும்

"தாமுறு காமத்தன்மை தாங்களே யுரைப்ப தென்ப
தாமென லாவதன்றா லருங்குல மகளிர்க் கம்மா."

(ஆரணி. சூர். 45.) என இக்கருத்தேபடக் கூறினார். பெண்டிர்க்கு

இவ்வடக்க முடைமை இயல்பாக இருக்கவேண்டியது என்பது பற்றியே ஆசிரியர் தொல்காப்பியனார், பொருளியலுள்

> " உடம்பு முயிரும் வாடியக் காலு
> மென்னுற் றனகொல் லிவையெனி னல்லது
> கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை." (9)

என்று ஆணை யிடுவாராயினர் என்க. இதன்கட் கணவனிடத்துள்ள வேட்கையால் உடம்பும் உயிரும் வாடிய விடத்தும் 'என்னுற்ற இவை' என்று மறைத்துக் கூறி யிருத்தலல்லது தானே வலியத் தலைவனைச் சென்று சேர்தல் களவு கற்பு என்னும் இரண்டு கைகோளினும் இல்லை என்பது காண்க.

இம்மகளிர் வேட்கை பசுமட் கலத்து ணீர் புறம்பொசிந்து அகத்து நீருண்மை புலப்படுத்தல்போல வறிதகத் தெழுந்த வாய் முறுவல் முதலிய குறிப்புவகையான் உணரப்படுதலல்லது சொல்லான் உணரப் படுதலில்லை என்க. இன்னும் ஆண் பெண் இருவரும் இல்வாழ்க்கை நடாத்தற்கண் ஒத்த பண்பு இன்றியமையாதென்பது இந்நூலுள்

> " அன்பு மடனுஞ் சாயலு மியல்பு
> மென்பு நெகிழ்க்குங் கிளவியும் பிறவு
> மொன்றுபடு கொள்கையொ டோராங்கு முயங்கி "

(225) என வருதலான் அறியப்படும். ஈண்டு அன்பு என்பது ஒருவரை ஒருவர் இன்றியமையாமை. மடன் என்பது ஒருவர் குற்றம் ஒருவர் தெரியாமை. சாயல் என்பது மென்மைத் தன்மை. இயல்பு என்பது ஒருவரை ஒருவர் ஒளித்தொழுகாமை. என்பு நெகிழ்க்குங் கிளவி என்பது உடலின் வலிதாகிய என்பையும் நெகிழ்விக்கும் ஆர்வ மொழி. இவையும் பிறவும் இருவர்க்கும் ஒரு தன்மைப்பட்ட கொள்கையுடன் இருவரும் ஒருவராகவே சேர்ந்திருத்தலைக் கூறுதலான் பண்டைக் காலத்து இல்வாழ்க்கை இயல்பு ஒருவாறு தெளியப்படும்.

இங்ஙனம் எத்துணையோ பல இன்பப் பகுதிகளுடன் அரிய பெரிய தமிழ் வழக்கங்களையும், தமிழ ரியல்புகளையும் புலப்படுத்தித் தமிழிற் குரையாணிபோன்று விளங்குகின்ற இந்நூலுரை முழுதிற்குமில்லாது கடவுள்வாழ்த்திற்கும் நூன்முதற்கண்ணுள்ள தொண்ணூறு செய்யுள்கட்குமே உள்ளது. இவ்வுரை ஒவ்வொரு செய்யுளிலுமுள்ள அரிசொற்கும் அருந்தொடர்க்கும் பொருள் புலப்படுத்தியும், அகத்திணைக்குச் சிறந்த உள்ளுறை யுவமம் இறைச்சிப்

பொருள் இவற்றை ஆங்காங்கு இனிது விளக்கியும், வேண்டிய விடங்களிற் சொன்முடிபு பொருண்முடிபு காட்டியும், முக்கியமான வை சிலவற்றிற்கு இலக்கணக் குறிப்புக்கள் கூறியும், கதைபொதிந்த விடத்து அவ்வக் கதைகளை எடுத்துணர்த்தியுஞ் சேறலாற் பலவழி யானுஞ் சிறந்து இனிது விளங்குவதாகும். இவ்வரிய உரையை இயற்றியுதவிய நல்லாசிரியர் பெயர் ஊர் முதலிய வரலாறு ஒன்றும் இப்போது அறிதற்கிடனின்று. இவ்வுரை யெழுதிய பழைய தோர் ஏட்டின்கட் கோல்லம் 460 என்று வரையப் பட்டிருந்தது கொண்டு இவ்வுரையாளர் இற்றைக்கு அறுநூற்று முப்பத்தெட்டு வருடங்கட்கு முற்பட்ட காலத்தவரென்பதுமட்டி லறியலாவது. நச்சினார்க்கினியர் காலம் கி. பி. 14 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட தாகாமையால் இவ்வுரைகாரர் நச்சினார்க்கினியர்க்கு முந்தியவர் என்று கொள்ளலாகும்.

இனி, இவ்வேட்டி னெழுதப்பட்ட "நின்றநேமி" என்னும் ஒரு பாயிரச் செய்யுளானும் அதன் பின்னுள்ள வசனத்தாலும் சோணாட்டைச் சேர்ந்த இடையள நாட்டு மணக்குடி என்னும் ஊரி லிருந்த பால்வண்ணன் றேவனான வில்லவதரையன் என்று பெயர் சிறந்தவர் இந்நெடுந்தொகைக்குக் கருத்து அகவலாற்பாடினார் என் பது புலனாவது. அவர் கருத்தினைப் புலப்படுத்திப் பாடிய அகவல் இப்போது கிடைத்திலது. மேலே கூறிய பழையவுரையுடனிவை யெல்லாம் அறியக் கிடந்த ஏட்டி னிறுதியில் "ஆறு நாட்டுக்குச் சேர்ந்த பெரும்பழனையிலிருக்கும் நல்லையப்புலவர் மகன் பொன்னை யன் நெடுந்தொகை" என்று எழுதப்பட்டிருந்தது. திருநெல் வேலியைச் சேர்ந்த நாங்குனேரிச் சேகரத்துப் பெரும்பழஞ்சி என்ற ஊரொன்றுள்ளது. அதுவே இவ்வூரென் றூகித்தலாகும்.

இப் பெரும்பழனையேடும் இந்நூல் 244 ஆம் பாட்டின் 13 ஆம் அடிமுதல் 292 ஆம்பாட்டு முதலடிவரை எழுதப்படாதத்தாகி வெள்ளிதழுடையதா யிருந்தது. இவ்வேடு பிங்கலநிகண்டு அச் சிட்ட ஸ்ரீமான் சிவன்பிள்ளை யவர்களாற் றேடி யெடுக்கப்பட்டது. இதனை மதுரைத் தமிழ்ச்சங்க ஸ்தாபனத்திற்கு முன்னே அந்நற்சங்க ஸ்தாபகருஞ் சிறந்த தமிழபிமானியும் *பால்வண்ணனத்தம் (பாலவ னத்தம்) ஜமீந்தாருமான ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்கள் ஷை சிவன்பிள்ளை குமாரரிடத்தினின்று விலைகொடுத்து வாங்கி என்

* பால்வண்ண ஈசுவரர் என்பது இவ்வூர்ச் சிவபிரான் பெயர்.

போற் பலரும் கற்றுத் தெளியுமாறு தம் முகவை அரண்மனைப் புத்தகசாலையில் நிலை பெறுவித்தனர். அக்காலத்து இப்போது சென்னை யூநிவேர்ஸிட்டி லெக்ஸிகன் ஆபீஸ்த் தமிழ்ப்பண்டிதரும் எனக்குப்பின் செந்தமிழ்ப் பத்திரிகையைச் சீர் பெற நடாத்திய ஆசிரியரும் என்னருமை அம்மான்சேயுமாகிய ஸ்ரீமான் மு. இராக வையங்காரவர்கள் நல்லுதவியால் இப்பெரும்பழனைப் பிரதியை ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்களினின்று பெற்று, என் ஆராய்ச்சியின் பொருட்டு ஒரு பிரதி செய்துகொண்டு, இதற்கு முன்னே எனக்குக் கிடைத்துள்ள சில பிரதிகளுடன் ஒப்பு நோக்கித் திருத்தஞ்செய்யத் தலைப்பட்டேன். இக்காலத்துத்தான் ஸ்ரீமான் தேவரவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தை இத்தமிழுல குய்ய ஸ்தாபனஞ்செய்து, தம்மிடத்தி லுள்ள இப்பெரும்பழனை யேடு முதலாகப் பலவற்றையும் தமிழபிமானிகள் பலரும் எளிய நிலையிற் கண்டு கற்றின்புறுமாறு அச்சங்கத்திற்குதவினார்கள். பெருந்தமிழ் வள்ளலும், பேரறிவாளரும், இத்தமிழ்ச்சங்க ஸ்தாபனத்திற்கு முக்கிய காரணரும், என்னை நன்னிலையில் நிறுவியருளியவரும் ஆகிய மாட்சிமை தங்கிய ஸ்ரீமான் பாஸ்கர ஸேதுபதி மஹாராஜரவர்களும், ஸ்ரீமான் தேவரவர்களும் விரும்பியவாறு யான் ஷை சங்கத்துப் பிரகடனாசிரியனாக அமர்ந்தபோது ஷை தேவரவர்கள் யான் அக நானூற்றை இச்சங்க ஸ்தாபனத்திற்கு முன்னேதொட்டு ஆராய்ந்து கொண்டிருத்தலைத் தெரிந்தவர்களாதலால், என்னையே இந்நூலை அச்சிட்டு வெளியிடும்படி வேண்டினார்கள். அவர்கள் வேண்டு கோட்படி இற்றைக்கு ஓரிருபது வருடங்கட்கு முன் மதுரைத் தமிழ்ச் சங்கத்து என்னால் இவ்வகநானூறு அச்சிடத் தொடங்கப் பட்டுச் சிறிது தூரம் நடைபெற்றது. அக்காலத்து எனக்கு உண்டாகிய நோயாலும் மற்றுஞ் சில இடையூறுகளாலும் நிறை வேறாம லின்றது. ஷை தமிழ்ச் சங்கத்தி னவ்வேலையினை யான் விட்ட சில ஆண்டுகளின்பின் என்னிடனிருந்த அச்சங்கத்துப் பிரதி களும் யான் அச்சங்கசம்பந்தமாகச் சோதித்தெழுதியவையும் ஷை தேவரவர்களால் திரும்ப வாங்கிக் கொள்ளப்பட்டன. அவை யெல்லாம் இவ்வுலகிற்குப் பண்டை நற்றமிழை இறவாது செவ்வனம் பாதுகாத்து வளர்க்கின்ற புண்ணியமே நாளுஞ் செய்து நிலவும் பெருங் கல்வி வள்ளலாகிய மஹாமஹோபாத்யாய ஸ்ரீமான் உ. வே. சாமிநாதையரவர்கள்பா லுள்ளன. அவர்கள் இது போன்ற எத்துணையோ பல பெரு நூல்களை ஆராய்ந்து வெளியிடுதலைப் புரிந்

3

தருளுகின்றதனாலே இந்நூல் அவர்களால் வெளியிடப் பலவருடங்களாக அவகாசம் பெறாததாயிற்று. அவர்கள் இந்நூலை அச்சிடின் அஃது இப்பதிப்பினும் எத்துணையோ பங்கு திருத்தமும் விளக்கமும் பெறுவதாகு மென்பதொருதலை. நிற்க,

இதன்பின் என் நண்பரும் பண்டைச் சங்கத்தமிழ்நூல்களை ஆராய்தலிலே ஊக்க மிகுத்தவரும், சங்ககாலத்து நிகழ்ச்சிகளைச் சிறுவரும் எளிதிலறியலாம்படி பலபல கதைநூல்களால் விளக்கியவரும் ஆகிய தமிழ்ப்பண்டிதர் கம்பர்விலாஸம் ஸ்ரீமான் வே. இராஜகோபாலையங்காரவர்கள் இந்நூல் அச்சிடுதலை மேற்கொண்டு அதற்காக வேண்டிய பரிசோதனையைச் செய்தளிக்குமாறு என்னை வேண்டினார்கள். அவர்களுக்கமும் பண்டைத்தமிழ் விருப்பமும் இப்பெருங்காரியத்தை இடையில் விடாது நிறைவேற்றல் கூடுமென்னும் எண்ணத்தையுண்டாக்கினமையாலும், எப்படியாயினும் நெடுங்காலமாக மறைந்துகிடக்கும் இவ்வரிய பெரியநூல் வெளிப்படல் வேண்டுமென்னும் வேணவாவாலும் என் சிற்றறிவிற் கியன்றவரை இந்நூலைப் பரிசோதித்துத்தர இணங்கினேன். ஷை ஐயங்காரவர்கள் என் பரிசோதனையுடன் என்னருமை அம்மான்சேய் ஷை மு. இராகவையங்கார் அவர்கள் அரிய இனிய ஆராய்ச்சியையுந் துணையாகக் கொண்டு, பாடினோர்வரலாறு, அரசர் முதலியோர் வரலாறு, ஆராய்ச்சிக்குறிப்பு, அபிதானக்குறிப்பு, பொருட்குறிப்பு முதலிய பலவற்றுடன் இந்நூலை அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள். ஈராயிரம் வருடங்கட்கு முற்பட்டு வழங்கிய சொல்வழக்கும் பொருள் வழக்கும் மலிந்த இப் பெருநூலினை, அவ்வழக்குகளை அறிதற்கேற்ற சாதனங்கள் குறைந்துள்ள இப்பிற்காலத்தே ஆராய்ந்து உள்ளவாறு காண்டல் மிகவும் அரியதொன்றாதலால், இப்பதிப்பில் நல்லறிவாளர்க்குப் பிழைகள் ஆங்காங்குத் தோன்றுதல் கூடுமாயினும், அவற்றைத் திருத்திக்கொண்டு நோக்கி, இப்பதிப்பில் இவர்கள் செய்த வேலையை மதித்துப் பாராட்டுவார்களென்றெண்ணுகிறேன். இந்நூல் வெளியிடுதற்கண் இவர்கட்குத் திரவிய ஸஹாயத்தையும் வாக் ஸஹாயத்தையும் அப்போதப்போது செய்தருளிய கனவான்கள் செந்தமிழ்வேந்தர் தலைவராகிய மாட்சிமை பொருந்திய ஸ்ரீமான் பா. ராஜராஜேச்வரஸேதுபதி மஹாராஜா அவர்களும், கனம் ஆண்டிப்பட்டி ஜமீன்தாரவர்களாகிய ஸ்ரீமான் பெத்தாச்சிச் செட்டியாரவர்களும், சென்னை ஐகோர்ட்டு மாஜி நீதிபதி ஆனரபிள் ஸ்ரீமான்

T. V. சேஷகிரி ஐயரவர்களும், மதுரை ஐகோர்ட் வக்கீல் ஸ்ரீமான் T. C. ஸ்ரீனிவாஸையங்காரவர்களும், யுநிவர்ஸிடி புரொபெஸர் ஸ்ரீமான் S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்களும், தஞ்சைவக்கீல் ராவ் பஹதூர் ஸ்ரீமான் K. S. ஸ்ரீநிவாஸ பிள்ளை அவர்களும், சென்னை School Book and Literary Society அங்கத்தினர் களும், சென்னை, C. குமாரசாமி நாயுடு கம்பெனியாரவர்களும், மேரிராணி கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் கா. ரா. நமச்சிவாய முதலியாரவர்களும் முதலிய உபகாரிகள் பலர் என்று தெரிகின்றேன்.

இந்த நூற்பரிசோதனைக்குத் துணையாயின பிரதிகள் :

சென்னை Oriental Manuscript Library பிரதியைப் பார்த்து எழுதிக்கொண்ட கையெழுத்துப் பிரதி ... ... 1.

(இது செந்தமிழ்ப் பத்திராசிரியர் ஸ்ரீ உ. வே. திரு. நாராயண ஐயங்கார் ஸ்வாமிகள் தமிழ்ச் சங்கத்திற்குத் தந்துதவிய தேவர் பிரான் கவிராயரவர்கள் வீட்டுப் பிரதியுடன் ஒப்புநோக்கித் திருத் தஞ் செய்யப்பட்டது.)

பெரும்பழனை ஏட்டைப்பார்த்து எழுதிக்கொண்ட கையெழுத் துப் பிரதி ... ... 1.

திருநெல்வேலி ஸ்ரீமான் நெல்லையப்பக் கவிராயரவர்கள் ஏடு 1.

காலஞ் சென்ற சென்னை ஸ்ரீமான் தி. த. கனகசுந்தரம் பிள்ளை அவர்கள் ஏடு ... ... 1.

ஷையார் காயிதப் பிரதி ... ... 1.

சென்னை மேரிராணியார் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் கா. ரா. நமச்சிவாய முதலியாரவர்கள் பிரதி ... ... 1.

திருமயிலை வித்வான் ஸ்ரீமான் சண்முகம் பிள்ளையவர்கள் ஏடு (இது குறை) ... ... 1.

இங்ஙனம் பொருளானுஞ் செல்வாக்கானும் பிரதிகளானும் இந்நூலச்சிடுதற்கண் உபகரித்த பெரியோர்கட்கும், பொருட் செல வையும் சிரமத்தையும் சிறிதும் பாராட்டாது இதனை வெளியிடு தலிலே கண்ணுங் கருத்து முடையராய் வேண்டிய வேலைகளைச் செய்து நிறைவேற்றிய ஷை ஐயங்காரவர்கட்கும் இத்தமிழ் நாடு நன்றி பாராட்டுங் கடப்பாடுடையதாகும்.

இங்ஙனம்

ரா. இராகவையங்கார்

ஸேதுஸம்ஸ்தான வித்வான்.

ஸ்ரீ :

ஒரு விஞ்ஞாபனம்

"அன்பே தகழியா வார்வமே நெய்யாக
வின்புருகு சிந்தை யிடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினே னாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்"

அகநானூறு அகநானூறு என்று கற்றோர் பலரும் பன்னெடுங் காலமாகப் பேராவலோடு எதிர் பார்த்திருந்த இந்நூலின் பதிப்பு இற்றைக்கு ஓரைந்தாண்டுகட்கு முன்னரே அச்சாகி முடிந்திருந்தும், எனது உடம்பின் நோயினாலும், பொருண் முட்டுப் பாட்டாலும், ஸமீப பந்துக்களின் வியோகங்களினாலும், பிறகாரணங்களாலும் பூர்ணமாக வெளிவரத் தடைப்பட்டு ஸர்வேச்வரன் கிருபையினால் இப்போது ஸம்பூர்ணமாக வெளிவந்துள்ளது. இந்நூலின் பெருமை முதலியவைகளை எடுத்துரைக்க யான் சிறிதும் பற்றேனென்பது ஒருதலையாதலால், ஸேது ஸம்ஸ்தான வித்வான் ஸ்ரீ உ. வே. ரா. இராகவையங்கார் ஸ்வாமிகளின் முகவுரையைப் படித்துத் தமிழறிவாளர்கள் பெருமகிழ் வெய்துவரென நம்பி, இந்நூற் பதிப்பை வெளியிடுதற்கண் எனக்குற்ற சில செய்திகளைமாத்திரம் ஈண்டு உரைக்கலாயினேன்.

இற்றைக்கு ஒரு பதினைந்து யாண்டுகட்குமுன் நற்றிணை புரையாசிரியரும் என் மனத்தே ஸர்வகாலங்களிலும் உறைந்து, "நீ ஸர்வாபீஷ்டமும் அடைந்து க்ஷேமமாக நீடூழி வாழ்க" என்று என்னை அநுக்ரஹித்து வருபவருமான காலஞ்சென்ற பின்னத்தூர் அ. நாராயணஸ்வாமி ஐயரவர்கள் இந்நூலைச் சோதித்து உரை வரைந்து கொண்டிருந்த காலத்து எனக்கு இதன்கண்ணுள்ள பலவகையான சிறப்புக்களையும் எடுத்துச் சொல்லிக்கொண்டு வருவதுண்டு. யானோ அக்காலத்து இச் சிறந்தநூலின் இன்பப்பகுதியையாவது, தடையின்றி யொழுகும் நடைப்போக்கினையாவது மனத்தைக் கவருமியற்கை வருணனைகளையாவது பிற பெருமைகளையாவது பாராட்டுந்

திறத்தேனல்லேனுய், இதன்கண்ணே பொதிந்து கிடக்கும் கதைக் குறிப்பினைமட்டும் பாராட்டி, அவற்றைத் தொகுத்தும் விரித்தும் சிறு கதைப்புத்தகங்களாக எழுதிவந்தேனுக, அவற்றைச் சென்னை க. குமாரசாமி நாயுடு ஸன்ஸ் கம்பெனியின் ஸொந்தக்காரர்களாகிய காலஞ் சென்ற ஸ்ரீமான் க. கன்னைய நாயுடு அவர்கள் அன்புடன் ஏற்று அச்சிட்டு வெளியிட்டனர். பின்னரவர்கள் அகநானூற்றினையே வெளியிடல் வேண்டுமென்று விரும்பி, “ நீர் இந் நெடுந்தொகையைக் குறிப்புகள் பலவற்ரோடு பதிப்பித்திடுக” என்று என்னைப் பலகாலும் தூண்டி, மழமழப்பான காகிதத்தில் காலிகோ பைண்ட் செய்த நோட்டுப் புஸ்தகங்கள் இருபது தந்து துரிதப்படுத்தினுர்கள். அப்போது சென்னை மேரிராணியார் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் கா. ரா. நமச்சிவாய முதலியாரவர்கள்பால் அகநானூற்றுப் பிரதி யொன்றிருக்கக் கண்டு, அதனை அவர்கள் அன்போடுங் கொடுக்கப் பெற்று, நளஞூ கார்த்திகைமீ 21-ஆம்தேதி ஒரு பிரதி செய்து கொண்டேன். இப்பெருந்தகையாளர்களின் அன்புக்கு நான் எழுமையும் கடமைப்பட்டுள்ளேன். அதன் பின்னர்க் காலஞ்சென்ற ஸ்ரீமான் தி. கனகசுந்தரம் பிள்ளையவர்கள்பால் இந்நெடுந்தொகைப் பிரதிகள் இரண்டு பெற்று, என் பிரதியை அவற்ரோடும் ஒப்பிட்டுக் கொண்ட பின்னர், சென்னை இராஜாங்கக் கையெழுத்துப் புத்தகசாலைக்குச் சென்று ஆங்குள்ள அகநானூற்றுப் பிரதியுடனும் ஒப்பிட்டுக் கொண்டு, பின்பு ஆசிரியர் வரலாறு, அரசர் முதலியோர் வரலாறு, அபிதானக் குறிப்புமுதலிய பலவகைக் குறிப்புக்களையும் எழுதி வைத்துக்கொண்டேன். ஆயினும் என் பிரதியோ 336-ஆம் பாடலின் கொளு முதலாக 343-ஆம் பாடலின் முற்பகுதி ஈருக ஆறு ஏழு பாடல்கள் முற்றுங் குறைந்தும், 91, 106, 107, 108, 111, 162, 223, 311, 400-ஆம் பாடல்களில் பலபல அடிகள் குறைந்தும், வேறு பல பாடல்களில் சொற்களும் தொடர்களும் சிதைந்தும், பிறழ்ந்தும், பொருட்பொருத்தமின்றியும், அடி நிரம்புருதும் காணப் பட்டமையால், அச்சிடத் தக்கதென்று தோன்றவில்லை. அதனுல் நான் பெரிதும் மனமழிந்து, எனக்குப் பரம குருவாய் அறிவு கொளுத்திவருபவர்களும், சென்னை லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைத் தமிழ்ப்பண்டிதருமாகிய ஸ்ரீ உ. வே. மு. இராகவையங்கார் ஸ்வாமிகள் பக்கல் விண்ணப்பம் செய்துகொண்டேன். அவர்கள் என் துன்பத்தைக் கண்டிரங்கி, அப்போது சென்னைக்கு எழுந்தருளி யிருந்த தமது அத்தைகுமாரரும், ஸேதுஸம்ஸ்தான வித்வானுமான

ஸ்ரீ உ. வே. ரா. இராகவையங்கார் ஸ்வாமிகள் திருவடிகளில் என்னை ஆற்றுப்படுத்தார்கள்.

சரணுகதனைக் கைவிடாதவர்களாகிய அப்பெரியார் என்னைப் பிரீதியுடன் அங்கீகரித்து, என் பிரதி குறிப்பு முதலியவற்றையும் கடாக்ஷித்து, தாம் பன்னெடுங்காலமுன்றொட்டு ஆழ்வார் திருநகரிப் பிரதி, பெரும்பழனைப் பிரதி நெல்லையப்பக்கவிராயரவர்கள் வீட்டுப் பிரதி முதலிய பல பிரதிகளைக்கொண்டு சோதித்துத் திருத்திவைத் திருந்த அகப்பாட்டின் சுத்தப்பிரதியையும், முதற்றுண்ணூறு பாட்டிற்குள்ள பழைய உரையையும் தந்து அநுக்ரஹித்தார்கள். இப் பெருங்கருணை வள்ளல்களுக்கு நான் ஜன்ம ஜன்மாந்தரங்களிலும் இவ்வாறே தாஸயனுகப் பிறந்து தொண்டுசெய்யும் பேற்றை ஸர்வேச்வரன் கிருபை செய்தருள்கவென்று பிரார்த்திப்பதல்லது மற்றென் செய்யவல்லேன்! நிற்க, நான் அச் சிறந்த சுத்தப் பிரதியோடு என் பிரதியை ஒப்பிட்டுச் சுத்தம் செய்துகொண்டு இராமநாதபுரத்திற்கே சென்று, அந்த ஸ்வாமிகளின் திருமாளிகையிலேயே ஒருமாதம் வரையில் தங்கி, அவர்கள் போனகஞ்செய்த சேடமுண்டு, புனிதனுகி, இந்நூலின் நானூறு பாடல்களையும் அவர்கள் முன்னிலையில் சோதித்துக்கொண்டு சென்னை வந்து, ஸ்ரீ உ. வே. மு. இராகவையங்கார் ஸ்வாமிகள் ஸந்நிதியில் எல்லாம் விண்ணப்பஞ்செய்தேன். கேட்ட அவர்கள் உவகையெய்தி நான் பிரார்த்தித்தபடி, இந்நூல் அச்சாகுங் காலத்துச் செய்யவேண்டிய சோதனைகளை யெல்லாம் செய்து தர, ஒவ்வொரு பாரம் புரூபையும் நான் இராமநாதபுரம் அனுப்பி, அது ஸேதுஸம்ஸ்தான வித்வான் ஸ்ரீ உ. வே. ரா. இராகவையங்கார் ஸ்வாமிகளால் கடைசியாகப் பார்வையிடப்பெற்ற பிறகு அச்சிடுவித்தேன். இவ்வா றிந்நூற்பதிப்பு இரண்டு வருஷகாலத்தில் பகவத் கிருபையால் மூலமுழுவதும் அச்சிட்டுமுடிந்தது.

பின்னர், என் சிற்றறிவிற் கெட்டியமட்டும் நான் எழுதிவைத் திருந்த பாடினோர் வரலாறு முதலிய பல குறிப்புக்களையும் அச்சிட்டு அநேகமாக முற்றுவித்துவிட்டேன். இக்காலத்து நான் கடுமையான மார்புநோயினுல் மெலிவுறவும் என் ஸமீப பந்துக்களிற் பலர் லோகாந்தரம் செல்லவும் ஸம்பவித்தமையால், நான் சென்னையி லிருக்க வியலாது என் கிராமத்திற்குப்போய் வஸிக்கும்படி நேரிட்டது. அங்கே என் நோய் அதிகரித்துவிட்டமையை நோக்கிய

அன்பர் பலரும் அகநானூற்றினை மூலமட்டிலாவது பைண்டுசெய்து வெளியிடல் அத்தியாவசியகமாகுமென்று வற்புறுத்தினமையாலும், உடல்வலிபெற்று மறுபடி சென்னைவந்து முழுப்புஸ்தகமாக அகநானூற்றை வெளியிடக்கூடுமென்னுந் தைரியமெனக்கும் உண்டாகாமையாலும், அவர்கள் விருப்பப்படியே குறைப் புத்தகமாக மூலமாத்திரம் வெளியிட்டேன். இப்போது ஸர்வேச்வரன் கடாக்ஷமும் பாகவதர்களின் ஆசீர்வாதமும் இக்குற்றுலவாஸமும், என்னைக் கூற்றத்தின் வாயினின்றும் மீட்டுக் கொணர்ந்துவிட்டமையால், இம் முழுப் புஸ்தகத்தைத் தமிழறிவாளிகள் ஸந்நிதியில் ஸமர்ப்பிக்கின்றேன்.

நிற்க, இப்பதிப்பு வெளிவரல் வேண்டுமென்னும் பேரவாவினால் எனக்கு வாக்ஸஹாயம், திரவியஸகாயம் முதலியன செய்த பெருந்தகையாளர்கள் சென்னை ரிடையர்ட் ஹைகோர்ட்டு நீதிபதி ஆனரபில ஸ்ரீமான் T. V. சேஷகிரி ஐயரவர்களும், மாட்சிமைதங்கிய ஸ்ரீமான் பா. ராஜராஜேச்வர ஸேதுபதி மகாராஜா அவர்களும், கனம் ஆண்டிப்பட்டி ஜமீன்தாரவர்களாகிய ஸ்ரீமான் பெத்தாச்சிச் செட்டியாரவர்களும், சென்னை யூனிவர்ஸிடி ப்ரொபஸர் டாக்டர் ஸ்ரீமான் S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்களும், மதுரைவக்கீல் ஸ்ரீமான் T. C. ஸ்ரீனிவாஸையங்காரவர்களும், தஞ்சை வக்கீல் ராவ்பகதூர், K. S. ஸ்ரீனிவாஸ பிள்ளையவர்களும், சென்னை மேரிராணி கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் கா. ரா. நமச்சிவாய முதலியாரவர்களும், சென்னை க. குமாரஸாமி நாயுடு ஸன்ஸ் தலைவர்களாகிய ஸ்ரீமான் க. ஜயராம நாயுடு அவர்களும், ஷை ஆபீஸ் மானேஜர் ஸ்ரீமான் ம. முருகேச முதலியாரவர்களும், சென்னை ஆதிகம்பெனி ஸ்ரீமான் ஆதிகேசவுலு நாயுடு அவர்களும், சென்னை ஸ்கூல் புக் அண்ட் விடிரரி ஸொஸைடி அங்கத்தினரவர்களும் பிறமகோபகாரிகளு மாவார்கள். இப்பெருந்தகையாளர்கள் ஸர்வாபீஷ்டமும் பெற்று, இவ்வாறே நன்கொடை யாளர்களாய் நீடூழி வாழ்கவென்று ஸர்வேச்வரனைப் பிரார்த்திப்பதல்லது என்னாற் செயற்பாலது மற்றென்னே! "மாரியை நோக்கிக் கைம்மா றியற்றுமோ வையம்!!"

நெடுந்தொகை நூலெங்கே! நானெங்கே! மகாவித்வான்களாகிய ஸ்ரீ உ. வே. ரா. ராகவையங்கார் ஸ்வாமிகள்பாலும். ஸ்ரீ உ. வே மு. ராகவையங்கார் ஸ்வாமிகள்பாலும் இந்நூலினை நான் பன்முறையும் சோதித்துக்கொண் டிருந்த போதும், அறிவில் மிகச் சிறியேனாகிய

இலமலரன்ன, 142.
இலையொழித் துலறிய, 293.
இழைநிலை ஞெகிழ, 398.
இன்பமுமிடும்பையும், 327.
இன்னிசை யுருமொடு, 58.
இனிப்பிறி துண்டோ, 313.
ஈயற்புற்றத், 8.
ஈன்றுபுறந்தந்த, 35.
உண்ணாமையி, 123.
உணர்குவெனல்லேன், 226.
உய்தகையின்றா, 341.
உயிர்கலந்தொன்றிய, 205.
உயிரினுஞ் சிறந்த, 245.
உருமுரறு கருவிய, 158.
உலகுகிளர்ந்தன்ன, 255.
உலகுட னிழற்றிய, 204.
உவக்குந ளாயினு, 203.
உவர்விளையுப்பின், 390.
உழுந்துதலைப் பெய்த, 86.
உழுவையொ டுழந்த, 308.
உள்ளல் வேண்டு, 129.
உள்ளாங் குவத்தல், 111.
உளைமான்றுப் பின், 102.
உறுகழி மருங்கி, 230.
உன்னங்கொள்கையொடு, 65.
ஊரலவ்வா, 326.
ஊருஞ்சேரியும், 220.
எம்வெங்காம, 15.
எரியகைந்தன்ன தாமரைப் பழனத்து, 106.
எரியகைந்தன்ன தாமரை யிடையிடை, 116.
எல்லையுமிரவு, 299.
எல்வளை ஞெகிழ, 185.
எவன்கொல் வாழி, 250.
என்மகள் பெருமடம், 397.
என்னாவதுகொ, 348.
என்னெனப் படுங்கொ, 206.
ஏனலுமிறங்குகுரல், 132.
ஒடுங்கீரோதி, 160.
ஒழித்தது பழித்த, 39.
ஒழியச் சென்மார், 285.
ஒறுப்ப வோவலை, 342.
ஓங்குதிரைப் பரப்பின், 320.
ஓங்குநிலைத்தாழி, 275.
ஓங்குமலைச் சிலம்பின், 147.
ஓடா நல்லேற்று, 334.
கடல்கண்டன்ன, 176.
கடல்பாடவிந்து, 50.
கடவுட்கற்பொடு, 184.
கடன்முகந்துகொண்ட, 43.
கடுந்தே ரிளையரொடு, 310.
கண்டிசின் மகளே, 369.
கதிர்கையாக, 164.
கயந்தலை மடப்பிடி, 165.
கரைபாய் வெண்டிரை, 199.
கழிப்பூக் குற்றுங், 330.
கழியே, சிறுகுர னெய்த, 350.
கள்ளியங் காட்ட, 97.
களவும் புளித்தன, 394.
களையுமிடனாற், 64.
கறங்கு வெள்ளருவி, 118.
காணினிவாழி, 232.
காய்ந்துசெலற்கனலி, 55.
கார்பயம் பொழிந்த, 234.
கார்விரி கொன்றை (கட).
கானப் பாதிரி, 261.
கானமானதர், 318.
கானலுங் கழறாது, 170.
கானன் மாலை, 40.
கானுயர் மருங்கி, 193.
கிளியும்பந்து, 49.
கிளைபா ராட்டுங், 218.
குடுமிக் கொக்கின், 290.
குணகடன் முகந்த, 278.
குவளை யுண்கண், 183.
குழற்காற்சேம்பின், 336.
குறியிறைக்குரம்பை, 210.
குன்றியன்ன, 133.
குன்றோங்குவைப்பி, 338.
கூர்முண்முள்ளி, 26.
கூழையுங்குறுநெறி, 315.
கூறாய்செய்வது, 292.
கூறுவங்கொல்லோ, 198.
கூனலெண்கின், 112.
கேள்கேடூன்றவுங், 93.
கேளாய்வாழியோ, 63.
கேளாயெல்லதோழிவாலிய, 211.

கேளாயெல்லதோழிவேலன், 114.
கொடுந்தாண்முதலை, 80.
கொடுந்திமிற்பரதவர். 70.
கொடுமுளீங்கை, 357.
கொடுவரியிரும்புலி, 27.
கொல்வினைப்பொலிந்த, 9.
கொளக்குறைபடா, 162.
கோடுயர்பிறங்கன், 393.
கோடுறநிவந்த, 266.
கோடைநீடலின், 377.
கோதையிணர, 296.
கோழிலைவாழை, 2.
சாரல்யாஅத், 337.
சிமையக்குரல, 399.
சிலம்பிற்போகிய, 302.
சிலையேறட்ட, 289.
சிறியிலைநெல்லி, 284.
சிறுகரும்பிடவின், 34.
சிறுநுதல்பசந்து, 307.
சிறுபுன்சிதலை, 149.
சிறுபைந்தூவி, 57.
சீர்கெழுவியனகர், 219.
செய்வதுதெரிந்திசின், 281.
செய்வினைப்பிரி, 143.
செல்கபாக, 224.
செல்லன்மகிழ்நநிற், 376.
செவ்வீஞாழற், 240.
செறுவோர்ச்செம்மல், 231.
சென்மதிசிறக்கநின், 288.
சென்றுநீடுந, 375.
சேற்றுநிலைமுனைஇய, 46.
தண்கதிர்மண்டிலம், 277.
தண்கயத்தமன்ற, 59.
தண்கயம்பயந்த, 395.
தந்நயந்துறைவோர், 151.
தயங்குதிரைப் பெருங்கடல், 263.
தற்புரந்தெடுத்த, 383.
தன்கடற்பிறந்த, 13.
தன்னோரன்ன, 385.
தாவினன்பொன், 212.
தாழ்சினைமருதம், 366.
தாழ்பெருந்தடக்கை, 392.
திதலைமாமை, 135.
திருந்திழைஞெகிழ்ந்து, 387.
திரையுழந்தசைஇய, 190.
தீந்தயிர்கடைந்த, 87.
துஞ்சுவதுபோல, 139.
துறைமீன்வழங்கு, 316.
துன்னருங்கானம், 181.
துனியின்றியைந்த, 241.
தூதுஞ்சென்றன, 251.
தூமலர்த்தாமரை, 361.
தெண்கழிவிளைந்த, 159.
தெறுகதிர்ஞாயிறு, 89.
தேம்படுசிமைய, 94.
தேர்சேணீக்கி, 380.
தொடங்குவினைதவிரா, 29.
தொடிதோளிவர்க, 269.
தொடியணிமுன்கை, 287.
தொடுத்தென்மகிழ்ந, 396.
தொடுதோற்கானவன், 368.
தொன்னலஞ்சிதைய, 177.
தோட்பதனமைத்த, 79.
தோள்புலம்பகல, 187.
தோளுந்தொல்கவின்றொலைந்தன, 209.
தோளுந்தொல்கவின்றொலைய, 347.
நகைநன்றம்மதானேயவனொடு, 400.
நகைநன்றம்மதானேயிறைமிசை, 346.
நகைநனியுடைத்தாற், 180.
நகைநீகேளாய், 248.
நகையாகின்றே, 56.
நட்டோரின்மையு, 279.
நந்நயந்துறைவி, 379.
நரைவிராவுற்ற, 254.
நறவுண்மண்டை, 96.
நன்கலங்களிற்றொடு, 124.
நன்மரங்குழீஇய, 166.
நன்றல்காலையு, 113.
நன்னனுதியன், 258.
நன்னுதல்பசப்பவும்பெரு 85.
நன்னுதல்பசப்பவுமாள்வினை, 77.
நன்னெடுங்கதுப்பொடு, 283.
நனந்தலைக்கானத்து, 78.
நனைவிளைநறவின், 221.
நாண்கொணுண்கோ, 216.

நாநகையுடைய, 121.
நாயுடைமுதுநீர், 16.
நாள்வலைமுகந்த, 300.
நாளுலாவெழுந்த, 81.
நிதியந்துஞ்சு, 378.
நிரைசெலவிவுளி, 363.
நிலநீரற்று, 295.
நிலாவினிலங்கு, 200.
நிழலறுநனந்தலை, 103.
நிறைந்தோர்த்தேரு, 71.
நின்வாய்செத்து, 126.
நீசெலவயர, 107.
நீடுநிலையரைய, 331.
நீர்நிறங்கரப்ப, 18.
நீலத்தன்னநிறங்கிள, 358.
நீலத்தன்னநீர்பொதி, 314.
நீளிரும்பொய்கை, 276.
நுதல்பசந்தன்றே, 227.
நுதலுந்தோளு, 119.
நுதலுநுண்பசப், 171.
நெஞ்சுடம்படுதலி, 312.
நெஞ்சுநடுங்கரும்படர், 152.
நெஞ்சுநெகிழ்தகுந, 267.
நெடுங்கயிறுவலந்த, 30.
நெடுங்கரைக்கான்யாற்று, 25.
நெடுங்கொடிநுடங்கு, 196.
நெடுமலையடுக்கம், 92.
நெடுவேண்மார்பி, 120.
நெருநலெல்லை, 32.
நெருப்பெனச்சிவந்த, 31.
நோகோயானே, 153.
நோற்றோர்மன்ற, 61.
பகல்செய்பல்கதிர், 229.
பகலினுமகலாதாகி, 305.
பகுவாய்வராஅல், 36.
பசித்தயானை, 321.
பசும்பழப்பலவின், 189.
பசைபடுபச்சை, 244.
படுமழைபொழிந்த, 154.
பயங்கெழுதிருவிற், 298.
பல்பூந்தண்பொழிற், 360.
பல்லிதழ்மென்மலர், 109.
பன்னாளெவ்வம், 340.
பனிவரைநிவந்த, 98.
பனிவாருண்கணு, 359.
பனைத்திரளன்ன, 148.
பாம்புடைவிடர, 362.
பார்வல்வெருகின், 391.
பானாட்கங்குலும், 297.
பிணங்கரில்வள்ளை, 256.
பிணர்மோட்டுநந்தின், 246
பிரசப்பல்கிளை, 228.
பிரிதல்வல்லிய, 223.
பிறருறுவிழுமம், 382.
பின்னுவிடநெறித்த, 150.
பின்னொடுமுடித்த, 73.
புகையிற்பொங்கி, 265.
புணர்ந்தோர்புன்க, 108.
புன்காற்பாதிரி, 237.
பூங்கண்வேங்கை, 182.
பூங்கணுநுதலு, 329.
பெய்துபுலந்திறந்த, 217.
பெருங்கடல்வேட்ட, 140.
பெருங்கடற்பரப்பி, 60.
பெருங்கடன்முகந்த, 188.
பெருநீரழுவத்து, 20.
பெரும்பெயர்மகிழ்ந, 306.
பெருமலைச்சிலம்பின், 282.
பேருறைதலைஇய, 194.
பைப்பயப்பசந்த, 95.
பொய்கைநீர்நாய், 386.
பொறிவரிப்புறவின், 271.
பொன்னடர்ந்தன்ன, 280.
மங்குன்மாமழை, 294.
மண்கண்குளிர்ப்ப, 23.
மண்கனைமுழவமொடு, 76.
மண்டிலமழுங்க, 260.
மண்ணாமுத்த, 247.
மணிமருண்மலர, 236.
மணிவாய்க்காக்கை, 319.
மதவலியானை, 354.
மதியிருப்பன்ன, 192.
மரந்தலைகரிந்து, 169.
மலிபெயற்கலித்த, 42.
மலைமிசைக்குலைஇய, 84.
மழையில்வான, 264.
மறந்தவணமையா, 37.
மன்றுபாடவிந்து, 128.

மனையிளநொச்சி, 21.
மாக்கடன்முகந்து, 374.
மாகவிசும்பின், 317.
மாதிரம்புதைய, 364.
மாமலர்வண்ண, 197.
மாவும்வண்டளி, 355.
மான்றமையறியா, 238.
முடவுமுதிர்பலவின், 352.
முதைச்சுவற்கலித்த, 88.
முதைபடுபசுங்காட், 262.
முரசுடைச்செல்வர், 156.
முல்லைவைந்நுனை, 4.
முலைமுகஞ்செய்தன, 7.
முளைவளர்முதல, 332.
முனைகவர்ந்துகொண்டென, 373.
மூத்தோரன்ன, 90.
மெய்யிற்றீரா, 28.
மேற்றுறைக்கொளீஇய, 356.
மைப்பறப்புழுகி, 136.
மௌவலொடுமலர்ந்த, 117.
யாஅவொண்டளி, 333.
யாமநும்மொடு, 168.
யாமவிரவின், 208.
யாயேகண்ணினுங், 12.
யானெவன்செய்கோ, 67.
வண்டுபடத்ததைந்த, 1.
வந்துவினைமுடித்தனன், 44.
வயங்குமணிபொருத, 167.
வயங்குவெயின்ஞெமிய, 322.
வயங்குவெள்ளருவி, 202.
வயவாளெறிந்து, 309.
வயிரத்தன்ன, 178.
வருதுமென்ற, 144.
வலஞ்சுரிமராஅத்து, 83.
வலந்தவள்ளி, 52.
வலிமிகுமுன்பின், 146.
வழையமலடுக்கத்து, 328.
வளங்கெழுதிருநகர், 17.
வளமழைபொழிந்த, 344.
வளைவாய்க்கோதையர், 370.
வறனுறுசெய்தியின், 301.
வாங்கமைபுரையும், 343.
வாடலுழிஞ்சில், 45.
வாரணமுரறு, 172.
வாள்வரிவயமான், 99.
வான்கடற்பரப்பிற், 10.
வானம்பெயல்வளம், 291.
வானம்வாய்ப்ப, 134.
வானம்வேண்டா, 186.
வானமூர்ந்த, 11.
வானுறநிவந்த, 222.
விசும்புதளிபொழிந்து, 345.
விசும்புவிசைத்தெழுந்த, 273.
விசும்புறநிவந்த, 131.
விண்டோய்சிமைய, 179.
விண்ணதிர்புதலைஇய, 163.
விரியிணர்வேங்கை, 38.
விருந்தின்மன்னர், 54.
விருந்தும்பெறுகுநள், 324.
விலங்கிருஞ்சிமைய, 215.
விளங்குபகலுதவிய, 91.
வினைநவில்யானை, 213.
வினைநன்றாதல், 33.
வினைவயிற்பிரிதல், 161.
வினைவலம்படுத்த, 74.
வீங்குவிளிம்புரீஇய, 175.
வீங்குவிசைப்பிணித்த, 339.
வெள்ளிவிழுத்தொடி, 286.
வேந்துவினைமுடித்த 104.
வேர்முழுதுலறி, 145.
வேலும்விளங்கின, 259.
வேளாப்பார்ப்பான், 24.
வேற்றுநாட்டுறையுள், 351.
வேனிற்பாதிரி, 257.
வைகறுேறும், 253.
வைகுபுலர்விடியல், 41.

ஸ்ரீ :

அபிதானக்குறிப்புமுதலியன

[எண்கள், பாட்டின் எண்கள்]

அஃதை (அகுதை) ஒரு கொடையாளி, 76, 113, 208: சோழன் மகள், 96.
அக்கினி நக்ஷத்திரம் 89.
அஞ்சி, 115, 352, 372.
அஞ்சியத்தை மகளுகையார், 352.
அஞ்சி லாந்தைமகனர் 352 (பா.)
அட்டவாயில், 326.
அண்டர்மகளிர், 59
அண்டர்மகன் குருவழுதியார், 150, 228.
அண்டிரன், 69, 152, 198.
அத்தி (ஆட்டன்), 76, 222, 236, 376, 396.
அத்தி (சேரன் சேஞதிபதி), 44.
அதகன், 162. (பா.)
அதிகன், 142, 162, 325.
அதியவன் வண்ணத்தினர், 301 (பா.)
அதியன் விண்ணத்தனர், 301.
அந்தணன் (கட.)
அந்தி யிளங்கீரனர், 71.
அந்துவனர் (நல்லந்துவன்), 43, 59.
அம்மூவனர், 10, 140, 280, 370, 390.
அமரர், (கட.)
அயிரியாறு, 177, 253.
அரங்கம், 137.
அரிமணவாயில், 266.
அருந்ததி, 16, 73.
அலைவாய், 266.
அவியன், 271.
அழுந்தூர், 246.
அழுந்தை, 196.
அழும்பில், 44.
அள்ளூர், 46.
அள்ளூர் நன்முல்லையார், 46.
அளக்கர்ஞாழல், 33, 144, 174, 314, 344, 353.
அறுமீன், 141.
அறுவைவாணிகன் இளவேட்டனர், 56, 124, 230, 254, 272, 302.
அன்னி, 45, 126, 145.
அன்னி மிஞிலி, 196, 262.
ஆஅய் அண்டிரன், 69, 152, 198.
ஆஅய் எயினன். 148, 181, 208, 396.
ஆட்டனத்தி, 45, 76, 222, 236, 376, 396.
ஆதனெழினி, 216.
ஆதிமந்தி, 45, 76, 135, 222, 236, 396.
ஆமூர், 159, 169.
ஆமூர்க்கௌதமன் சாதேவனர், 159.
ஆர்க்காடு, 64.
ஆர்க்காடுகிழார்மகனர் வெள்ளைக்கண்ணத்தனர், 64.
ஆரியப்பொருநன், 386.
ஆரியர், 276, 336, 386, 396, 398.
ஆரியர்பொன்படுநெடுவரை, 398.
ஆரியவேந்தர், 396.
ஆலங்கானம், 36, 175, 209.
ஆலங்குடிவங்கனர், 106,
ஆலம்பேரி, 47, 87, 143, 175.
ஆலம்பேரிசாத்தனர், 47, 81, 143, 175.
ஆலமுற்றம், 181.

ஆவூர், 202.
ஆவூர்கிழார்மகனார்கண்ணனார், 202.
ஆவூர்மூலங்கிழார், 24, 156, 341.
ஆவூர்மூலங்கிழார்மகனார் பெருந்தலைச்சாத்தனார், 13, 224.
ஆவூர்மூலம், 13, 24, 156, 224, 341.
ஆன்குன்று, 168.
ஆன்பொருநை, 93.
ஆன்றோருலகம், 213.
இடைக்காடனார், 139, 194, 274, 284, 304, 374.
இடையளநாடு, (பாயிரம்).
இடையன் சேந்தங் கொற்றனார், 375.
இடையன் நெடுங்கீரனார், 166.
இடையாறு, 141.
இம்மென் கீரனார், 398
இமயம், 127, 265, 396, 398, 399.
இரநாடு, 133.
இராமன், 70.
இருங்கோவேண்மான், 36.
இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனார், 279.
இருபெருந்தெய்வம் 360.
இளங்கண்ணனார் (உம்பற்காடு),264.
இளங்கீரனார் (அந்தி), 71; (எயினந்தை மகனார்) 3, 225, 239, 289, 299, 361, 371, 395, 399.
இளங்கோசர் 216.
இளங்கௌசிகனார், 381.
இளம்பெருஞ் சென்னி, 375.
இளவேட்டனார், 56. 124, 230, 254, 272, 302.
இறங்குகுடிக் குன்றநாடன், 215.
ஈரெழுவேளிர், 135.
ஈழம், 88, 231, 307.
உக்கிரப்பெருவழுதி, 26, (இறுதிக்க)
உதியஞ்சேரல், 65, 168, 233.
உதியன் அட்டில், 168.
உப்பூரிகுடிகிழார்மகனுவார் உருத்திரசன்மனார், (இறுதிக்க.)
உம்பற்காட்டிளங்கண்ணனார், 264.
உம்பற்காடு, 264, 357.
உமட்டேர், 69.
உமட்டேர்கிழார்மகனார் பரங்கொற்றனார், 69.
உமை (கட).
உருத்திரங்கண்ணனார் (கடியலூர்), 167.
உரோகிணி, 141.
உரோடோகக் கவுணியன்சேந்தன், 191, (பா).
உரோடோகம், 191.
உலோச்சனார், 19 (பா), 20, 100, 190, 200, 210, 300, 330, 400.
உவர்க்கணூர், 146.
உவர்க்கணூர்ப் புல்லங்கீரனார், 146.
உள்ளிவிழா, 368.
உறத்தூர், 266.
உறந்தை, 4, 6, 93, 122, 137, 226, 237, 369, 385.
உறந்தை அறங்கெழு நல்லவை, 93.
உறந்தைப்புறங்காடு, 122.
உறந்தைப் பேரியாறு, 137.
உறந்தை விழவு, 4.
உறையூர்ச்சல்லியங்குமரனார், 44, (பா).
உறையூர் மருத்துவன் தாமோதரனார், 133, 257,
உறையூர்முதுகூத்தனார், 137, 329.
ஊட்டியார், 68, 388.
ஊணூர், 220, 227.
எயில், 381, 392.
எயினந்தைமகனாரிளங்கீரனார், 3, 225. 239, 289, 299, 361, 371, 395, 399.
எயினன், (ஆஅய்), 148, 181, 208, 396.
எருக்காட்டோர்த்தாயங்கண்ணனார், 105, 132, 149, 213, 237, 319, 357.
எருமை (ஒருபாகரி), 36, 115,
எருமை நாடு, 253.
எருமையூர், 36.
எருமையூரன், 36.
எருமைவெளி, 72, 73.

எருமைவெளியனார், 73.
எருமை வெளியனார்மகனார் கடலனார், 72.
எவ்வி, 115, 126, 266, 366.
எழினி (அஞ்சி), 105, 211.
எழினி (ஆதன்), 216.
எழினி (ஐம்பெருவேளிருள் ஒருவன்), 36.
எழூஉப்பன்றி நாகன்குமரனார், 138, 240.
எழில்மலை, 152, 345, 349.
ஏற்றை, 44.
ஐயூர் முடவனார், 216.
ஐயை, 6.
ஒக்கூர் மாசாத்தனார், 14.
ஒக்கூர் மாசாத்தியார், 14, 324, 384,
ஒடுங்காடு, 91.
ஒரோடோகத்துக் கந்தரத்தனார், 23, 95, 191.
ஒல்லையூர், 25, 279.
ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன், 25.
ஒள்வாளமலை, 142.
ஓடைக்குன்றம், 111.
ஓரம்போகியார், 286, 316.
ஓரி, 208, 209.
ஔவையார், 11, 147, 273, 303.
கங்கன், 44.
கங்கை, 265.
கட்டி, 44, 226
கட்டூர் 212, (பா), (பதிற் 90 பார்).
கடமூர், 44, (பா).
கடல்கெழுசெல்வி, 370.
கடலன், 81.
கடியலூர்உருத்திரங்கண்ணனார், 167.
கடுகுபெருந்தேவனார், 51, (பா).
கடுந்தொடைக்காவினார், 109.
கடுவல், 70, 256, 354.
கண்ணபிரான், 59.
கண்ணனார் (ஆலூர்கிழார் மகனார்), 202.
கண்ணனெழினி, 197.
கணையன், 44, 386.
கந்தரத்தனார் (ஒரோடோகத்துக்), 23, 95, 191.
கபிலன், 2, 12, 18, 42, 78, 82, 118, 128, 158, 182, 203, 218, 238, 248, 278, 292, 318, 332, 382.
கயமனார், 7, 17, 145, 189, 195, 219, 221, 259, 275, 321, 383, 397.
கரிகால்வளவன், 55, 125, 141, 246, 376.
கந்திலுறைகடவுள், 307.
கருவூர், 50, 63, 93, 180, 183, 263, 277, 309.
கருவூர்க்கண்ணம்பரணனார் 180, (பா)
கருவூர்க்கண்ணம்பாளனார், 180, 263.
கருவூர்க் கண்ணம்புல்லனார், 63.
கருவூர்க்கந்தப்பிள்ளைசாத்தனார், 309.
கருவூர்க் கலிங்கத்தார், 183.
கருவூர் நன்மார்பன், 277.
கருவூர்ப் பூச்சாத்தனார், 50. (பா)
கருவூர்ப் பூதஞ்சாத்தனார், 50.
கருவூர்ப் பூதனார் மகனார் கொற்றனார், 50 (பா)
கல்லாடனார், 9, 83, 113, 171, 199, 209, 333. இவரூர் வேங்கடமலைக்கு வடபுலமாகும் (புறம், 391.)
கவிரமலை, 198.
கவுரியர், 70, 342.
கழாஅர், 6, 222, 226, 376.
கழார்க் கீரனெயிற்றியார், 163, 217, 235, 294.
கழார்ப் பெருந்துறைவிழவு, 222.
கழார் மருதத்துறை, 22, 376.
கழுமலம், 44, 270.
கழுவுள், 135, 365.
கள்ளிற்கடை, 170
கள்ளூர், 256.
கள்ளூரவை, 256.
களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், 199.
கன்மாமலை, 262.
காட்டூர்கிழார்மகனார் கண்ணனார், 85.
காடுகெழுநெடுவேள், 382.
காமூர், 135, 365.

காமூர்ப் பூதம், 365.
கார்த்திகைவிழா, 141.
காரி, 35, 209.
காவட்டனார் (கவாடனார்), 378,
காவன்முல்லைப்பூதரத்தனார், 151, (பா).
காவன்முல்லைப்பூதனார், 21, 151, 241, 293, 391. [(பா.)
காவன்முல்லை மழுக்கரத்தனார், 151.
காவிரி, 6, 62, 76, 123, 126, 137, 166, 177, 181, 186, 205, 213, 222, 226, 326, 341, 376, 385, 396.
காவிரிக்கடற்றுறை, 123.
காவிரிப்பட்டினம், 103, 107, 123, 205, 271, 285.
காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், 107, 123, 285.
காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார், 103, 271.
காமூர், 135, 365.
காமூர்ப் பூதம், 365.
கானப்பேரெயில், 26.
கானமர் செல்வி, 345.
கிள்ளிவளவன், 346.
கீரனார், (இம்மென்) 398.
குட்டுவன், 91, 212, 270, 290, 376.
குடந்தை, (குடவாயில்) 44, 60.
குடநாடு, 91, 115.
குடபுலம், 340.
குடவர், 393.
குடவாயில், (குடந்தை) 44, 60.
குடவாயிற் கீரத்தனார், 35, 44, 60, 79, 119, 129, 287, 315, 345, 366, 385.
குடவாயின்மிளை, 44.
குடவுழுந்தனார், 97. (பா.).
குதிரைமலை, 143, 372.
குதிரைமலை, (அஞ்சியினது) 372.
குதிரைமலை, (பிட்டனது) 143.
குமிழிஞாழலார் நப்பசலையார், 160.
குழுமூர், 168.
குறுக்கை, 45, 145.
குறுங்குடிமருதனார், 4.
குறும்பியன், 262.
குறும்பொறை, 159.
குறுவழுதியார், 150, 228, (பா.)
குன்றியனார், 40, 41.
கூடல், 93, 116, 149, 231, 253, 296, 315, 346.
கூடல் நாளங்காடி, 93
கூடல்விழா, 116
கூடற் பறந்தலை, 116, 346.
கொங்கர், 79, 253, 368.
கொடுங்காலூர், 35.
கொடுமுடி, 159.
கொல்லி, 33, 62, 208, 209, 213, 303, 338.
கொல்லிப்பாவை, 62, 209.
கொள்ளன் (இவனை அதியன் பணித்தான்), 325.
கொற்கை, 27, 130, 201, 296, 350.
கோசர், 15, 90, 113, 196, 205, 216, 251, 262.
கோசர் நாடு, 15, 113.
கோசர் நியமம், 90.
கோட்டம்பலத்துத்துஞ்சிய சேரமான், 168.
கோட்டேர், 13.
கோடிமங்கலம் வாதுளி நற்சேந்தன், 179, 232.
கோடியூர்கிழார்மகனார்நெய்தற்றத்தனார், 243.
கோடை (கோட்டேர்), 13.
கோடைச்சிலம்பு, 249.
கோதை, 93, 263.
கோதை மார்பன், 346.
கோவல், 35.
கௌதமன் சாதேவன், 159.
கௌரியர், 70, 342.
சல்லியங்குமரனார், (உறையூர்) 44.
சாகலாசனார், 16, 270.
சாமவேதம் (கட.)
சாய்க்கானம், 220.
சிராப்பள்ளிமலை, 4.
சிறுகுடி, 54, 117, 204, 269.

சிறுமலை, 47.
சுவர்ப்பாவை, 369.
சுள்ளியாறு, 149.
சூர், 59.
சூரரமகளிர், 32, 162, 198.
செங்கண்ணனார், 279.
செங்கொற்றன், (இடையன்) 375. (பா).
செம்பியன், 36.
செய்யோள், 316.
செயலூர்இளம்பொன்சாத்தன்கொற்றனார், 177.
செல்வி, 216.
செல்விக்கோமான், 216.
செல்லூர், 66, 90, 216, 220, 250.
செல்லூர்க் கோசங் கண்ணனார், 66 (பா.)
செல்லூர்க் கோசிகன் கண்ணனார், 66.
செல்லூர்கிழார்மகனார் பெரும்பூதங்கொற்றனார், 250.
செழியன், 36, 46, 47, 57, 106, 116, 137, 149, 175, 209, 256, 335.
சேந்தங்கண்ணனார், 350.
சேந்தன் கூத்தனார், 102, 348.
சேந்தங் கொற்றன், 375.
சேரமானந்தையார், 41. (பா)
சேரமானிளங்குட்டுவன், 153.
சேரல், 36.
சேரலர், 149, 209.
சேரலாதன், 55, 127, 347.
சோழர், 60, 93, 96, 123, 137, 201, 213, 326, 336, 338, 356, 369, 375, 385.
சோழர் பாக்கம், 338.
சோழர்மருகன் வல்லங்கிழவோன், 356.
சோழர் மறவன் பழையன், 326.
ஞிமிலி, 142, 148, 181, 208, 396.
தகட்டூர், 212 (பா)
தண்கால், 48, 108, 355.
தண்காற்பொற்கொல்லனார், 48, 108, 355.
தமிழ் (= தமிழ் நாடு), 227.
தமிழ்கெழுமூவர், 31.
தமிழ்மொழிபெயர் தேயம், 31.
தலையாறு, 152.
தழும்பன், 227.
தனுஷ்கோடி, 70.
தாமோதரனார் (உறையூர் மருத்துவன்), 133, 257.
தாயங்கண்ணனார் (எருக்காட்டூர்), 105, 132, 149, 213, 237, 319, 357.
தித்தன், 6, 122, 152, 188, 226.
தித்தன் வெளியன், 152, 226.
தித்தனுறந்தை, 6, 122.
திதியன் (ஐம்பெருவேளிருள் ஒருவன்), 36, 45, 126, 145, 196. 262, 331.
திதியன் (பொதியிற்செல்வன்), 25, 322.
திரிசிராப்பள்ளி மலை, 4.
திரு, 21.
திருக்கோவலூர், 35.
திருமருதக்கா, 36.
திருமால், 59.
திருவணைக்கரை, 70.
திரையன், 85, 340.
துளுநாடு, (கோசரது,) 15.
தூங்கல், 227.
தென்னவன், 13, 138, 342.
தையங்கண்ணன், 105, 132, 213, 237. (பா).
தொடை விழவு, 187.
தொண்டி, 10, 60, 169, 290.
தொண்டி ஆமூர்ச் சாத்தனார், 169.
தொண்டையர், 213
தொல்கபிலர், 12 (பா.), 282.
தொழுநை, 59.
தொன்முதிர் வேளிர், 258.
நக்கண்ணையார், 252.
நக்கீரனார், 36, 57, 78, 93, 120, 126, 141, 205, 227, 249, 253, 290, 310, 340, 346, 369, 389.
நந்தர், 265.

நந்தன், 251.
நம்பிழுத்தபிரான், 59.
நரைமுடிநெட்டையார், 339.
நல்லந்துவன், 43, 59.
நல்லாவூர்கிழார், 86.
நல்லொளியார், 32. (பா).
நல்வெள்ளியார், 32.
நள்ளி, 152, 238.
நள்ளியடுக்கத்துச்சூர், 152, 238.
நன்பலூர்ச் சிறுமேதாவியார், 94, 394.
நன்னன், 15, 44, 97, 142, 152. 173, 199, 208, 258, 349, 356, 392, 396.
நன்னன் ஆஅய், 356.
நன்னன் உதியன், 258.
நன்னன் வேண்மான், 97.
நாகன்குமரனார்(எழூஉப்பன்றி) 138, 240.
நான்மறை, 181.
நிரைமுடி நெட்டையார், 339 (பா).
நிரையப் பெண்டிர், 95.
நீரேர், 266.
நீரேர் கிழவோன், 266.
நீழல், 366.
நேடியோன் குன்றம், 149.
நெடுங்கிரன், (இடையன்) 166.
நெடுமிடல், 266.
நெடுவேள், 22, 98, 120, 382.
நெடுவேளாவி, 1, 61.
நெய்தற்சாய்த்துய்த்த ஆவூர்கிழார், 112.
நெவியன், 175.
நேமியஞ் செல்வன், 175.
நொச்சிநியமங்கிழார், 52.
நொய்ப்பாடியார், 67 (பா.)
நோய்பாடியார், 67.
பங்குனி விழவு, 137.
பசும்பூட் பாண்டியன், 162, 231. 253, 266, 338.
பசும்பூட் பொறையன், 303.
பசும்பூண், 266.
பட்டினப்பாக்கம், 338.
பண்ணன், 54, 177.
பண்ணி, 13.
பதின்மூன்கு வேளிர், 135.
பதினொரு வேளிர், 246.
பதுக்கைக் கடவுள், 35.
பரங்குன்றம், 59, 149.
பரங்குன்ற விழவு, 149.
பரங்கொற்றனார் (உமட்டூர் கிழார் மகனார்), 69.
பரசுராமன் வேள்வியில்நட்டதூண், 220.
பரணர், 6, 62, 76, 116, 122, 125, 135, 142, 148, 152, 162, 178, 181, 186, 196, 198, 208, 212, 222, 226, 236, 246, 258, 262, 266, 276, 322, 326, 356, 367, 372, 376, 386, 396.
பருவூர்ப்பறந்தலை, 96.
பவத்திரி, 340.
பழையன், 44, 186, 326.
பழையன்மாறன், 346.
பறநாட்டுப் பெருங்கொற்றனார், 323.
பறநாடு, 323.
பறம்பு, 303, 356.
பாக்கம், 338.
பாடலி, 265.
பாண்டியர், 27.
பாண்டியன், 201.
பாண்டியன் கானப்பேரெயில்தந்த உக்கிரப்பெருவழுதி, 26, (இறு திக்க.)
பாண்டிய னறிவுடைநம்பி, 28.
பாண்டியனேனாதி நெடுங்கண்ணன், 373.
பாணன், 113, 226, 325, 386.
பாணனூடு, 113, 325.
பாரதம்பாடிய பெருந்தேவனார்(கட.)
பாரம், 152.
பாரி, 78, 303.
பால்வண்ணதேவனைவில்லவதரை யன், (பாயி).
பாலைபாடிய பெருங்கடுகோ, 5, 99, 111, 155, 185, 223, 261, 267, 291, 313, 337, 379.

பாவைக்கொட்டிலார், 336.
பாழி, 15, 142, 152, 208, 258, 372, 375, 396.
பாழி அணங்கு, 15, 142, 372.
பாழியில் சேமித்த பொருள், 258, 372.
பிசிராந்தையார், 308.
பிட்டன், 77, 143.
பிண்டன், 152.
பிரம்பு, 356.
பின்னை (கண்ணபிரான்), 59.
புகார், 110, 181, 205.
புகார்த்தெய்வம், 110.
புகார்நாடு, 181.
புல்லங்கீரனார் (உவர்க்கண்ணூர்), 146.
புல்லி, 61, 83, 209, 295, 311, 359, 393.
புல்லிவேங்கடம், 61, 83, 393.
புறந்தை, 100.
புன்றுறை, 44.
புன்னாடு, 396.
பூக்கோட்டண்ணுமை, 174.
பூசற்றுடி, 62.
பூதப்பாண்டியன் (ஒல்லையூர்தந்த), 25.
பூந்தொடைவிழவு, 187.
பூழியர், 6.
பெண்ணையாறு, 35.
பெரியன், 100.
பெருங்குன்றூர் கிழார், 8.
பெருந்துறைச்செரு, 199.
பெருந்தேவனார், 51 ; (கடுகு), 51 (பா).
பெரும்பூட்சென்னி, 44.
பேகன், 262.
பேகன் கன்மாமலை, 262.
பேய்க்கூடு, 142.
பேயனார், 234.
பேரூர், 382.
பொதியில், 25, 138, 251, 322.
பொதினி, 1, 61.
பொதும்பில், 130, 154, 192.
பொதும்பில் கிழான் வெண்கண்ணனார், 130, 192.
பொதும்பிற் புல்லாளங்கண்ணியார், 154.
பொருந்தில், 19, 351.
பொருந்திலிளங்கீரனார், (19, 20 பா.), 351.
பொருநன், 36.
பொலம்பூட்கிள்ளி, 205.
பொலம்பூட்டிரையன், 340.
பொறையன், 60, 62, 338.
போஒர், 186, 326.
போந்தை, 110. (ஒரூர் புறம். 338),
போந்தைப்பசலையார், 110.
மணக்குடி: (பாயி).
மணற்குன்று, 181.
மத்தி, 6, 211, 226.
மதுரை அளக்கர்ஞாழலார் மகனார் மள்ளனார், 33, 144, 174, 314, 344, 353.
மதுரை அறுவை வாணிகனிளவேட்டனார், 56, 124, 230, 254, 272, 302.
மதுரை ஆசிரியன் நல்லந்துவனார், 43, 59.
மதுரை இளங்கௌசிகனார், 381.
மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தன், 102, 348.
மதுரை இளம்பாலாசிரியன் செங் கூத்தன் 102 (பா.)
மதுரை இளம்பாலாசிரியன் சேனங் கூத்தன், 102 (பா.)
மதுரை ஈழத்துப் பூதன்றேவனார், 88, 231, 307.
மதுரை எழுத்தாளன், 84.
மதுரை எழுத்தாளன் சேந்தம்பூதனார், 84, 207.
மதுரைக் கண்ணத்தனார், 360.
மதுரைக் கணக்காயனார், 27, 338, 342.
மதுரைக் கவுணியன் பூதத்தனார், 74.
மதுரைக்கள்ளிற்கடையத்தன் வெண்ணாகனார், 170.
மதுரைக்காஞ்சிப்புலவர், 89.
மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார், 204.

மதுரைக்கூத்தனார், 334.
மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், 53, 134, 229, 306, 320.
மதுரைச் செங்கண்ணனார், 39.
மதுரைத் தத்தங்கண்ணனார், 335.
மதுரைத் தமிழ்க்கூத்தன் கடுவன் மள்ளனார், 70, 256, 354.
மதுரைத் தமிழ்க்கூத்தன் நாகன் தேவனார், 164.
மதுரைப் பண்டவாணிக னிளந் தேவனார், 58, 298, 328.
மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார், 172.
மதுரைப்பாலாசிரியர்நற்றமனார், 92.
மதுரைபுல்லங்கண்ணனார், 161.
மதுரைப்பேராலவாயார், 87, 296.
மதுரைப்பொன்செய்கொல்லன் வெண்ணாகனார், 363.
மதுரைப்போத்தனார், 75.
மதுரை மருதங்கிழார்மகனார் பெருங் கண்ணனார், 247, 364.
மதுரை மருதனிள நாகனார், 34, 59, 77, 90, 104, 121, 131, 184, 193, 206, 220, 245, 255, 269, 283, 297, 312, 343, 358, 365, 368, 380, 387.
மதுரை.....மள்ளனார், 244.
மந்தி (ஆதிமந்தி), 396.
மருங்கூர்கிழார்பெருங்கண்ணனார், 80.
மருங்கூர்ப்பட்டினம், 227.
மருங்கூர்ப்பாகைச்சாத்தன் பூதனார், 327.
மருத்துவன் றாமோதரனார் (உறையூர்), 133, 257.
மருதம்பாடிய இளங்கடுங்கோ, 96, 176.
மருதி, 222.
மழநாட்டார், 35.
மழபுலம், 61.
மழவர் 1, 35, 61, 91, 101, 119, 121, 127, 129, 187, 249, 269, 309, 337.
மழுவாணெடியோன், 220.
மா, 21.
மாஅல், 59.
மாங்காடு, 288.
மாசாத்தனார் (ஒக்கூர்), 14.
மாசாத்தியார் (ஒக்கூர்), 14, 324, 384.
மாடத்துச்சுவரிற் றீட்டிய கடவுள், 167, 369.
மாந்தரம்பொறையன்கடுங்கோ, 142.
மாந்தை, 127, 376.
மாமிதிக்கிழவன், 66.
மாமூலனார், 1, 15, 31, 55, 61, 65, 91, 97, 101, 115, 127, 187, 197, 201, 211, 233, 251, 265, 281, 295, 311, 325, 331, 347, 349, 359, 393.
மாற்றூர்கிழார் மகனார் கொற்றங் கொற்றனார், 54.
மாறோக்கத்துக் காமக்கணி நப்பாலத்தனார், 377.
மிஞிலி, 142, 148, 181, 208, 396.
முக்கட்செல்வன், 181.
முசிறி, 57, 149.
முசிறி முற்றிய செழியன், 57, 149.
முசுண்டை, 249.
முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன், 30.
முதுகுன்றம், 197.
முதுகூத்தனார் (உறையூர்), 137, 329.
முதுகோசர், 262.
முதுநூல், 181.
முதுபதி, 7.
முருகன், 1, 22, 59, 98, 118, 120, 149.
முள்ளியூர்ப் பூதியார், 173.
முள்ளூர், 209.
முனிவர், (கட.)
மூதூர், 165. ('ஆதி அருமன் மூதூரன்ன' குறுந். 293.)
மூவேந்தர், 31, 78.
மோகமானக்கடலார், 72, (பா.)
மோகூர், 251.

மோசி, 392.
மோசிக்கரை, 260.
மோசிக்கரையனார், 260.
மோசிகீரனார், 392.
மோரியர், 69, 251, 281.
மோரியர் குறைத்தமலை, 69, 251, 281.
மோனகர்க்கற்றையனார், 260 (பா.)
யவனர், 149.
யாழ்கெழுமணிமிடற்றந்தணன், (கடவுள்).
வங்கனார், 106.
வஞ்சி, 263, 396.
வடமவண்ணக்கன் பேரிசாத்தனார், 38, 214, 242, 268, 305.
வடமோதங்கிழார், 317.
வடமோதம், 317.
வடவர், 340.
வடவரை, (இமயம்) 396.
வடுகர், 107, 213, 253, 281, 295, 375, 381.
வடுகர்தேயம், 213.
வண்ணப்புறக்கந்தரத்தனார், 49.
வரையரமகளிர், 342.
வல்லம், 336, 356.
வல்லங்கிழவோன், 356.
வல்லத்துப்புறமிளை, 336.
வல்வில் ஓரி, 208, 209.
வழுதி, 93, 130, 204, 312, 315.
வாகைப்பறந்தலை, 125.
வாகைப்பெருந்துறைச்செரு, 199.
வாணன், 117, 204, 269.
வானவரம்பன், 45, 359, 389.
வானவன், 33, 77, 143, 159, 213, 309, 381.
விண்ணத்தனார், (அதியன்) 301.
விண்பொருதசோழன், 338.
வியலூர், 97.
வில்லவதரையன், (பாயிரம்).
விளங்கில், 81.
விற்றூற்றுமூதெயினனார், 37, 136, 288.
வீரசுவர்க்கம், 55.
வீரை 188, 206.
வீரை முன்றுறை, 206.
வீரைவெளியன் தித்தன், 188.
வீரைவேளிர், 206.
வெண்கண்ணனார், 130.
வெண்ணிப்பறந்தலை, 55, 246.
வெண்மணிவாயில், 211.
வெண்மணிவாயிற்றுறை, 211.
வெண்வட்டியார், 29 (பா.)
வெள்ளாடியனார், 29.
வெள்ளிவீதியார், 45, 147, 362.
வெள்ளைக்கண்ணத்தனார், 64.
வெளியம், 359.
வெளியன் தித்தன், 152, 226.
வெளியன்வேண்மான் ஆஅய் எயினன், 208.
வெறிபாடிய காமக்கண்ணியார், 22, 98.
வேங்கடம், 27, 61, 83, 85, 141, 209, 211, 213, 265, 393.
வேங்கடவிழவு, 61.
வேங்கை வெற்பு, 162 (புறம் 336).
வேண்மகளிர், 208.
வேண்முதுமாக்கள், 372.
வேம்பற்றூர், 157.
வேம்பற்றூர்க்குமரனார், 157.
வேம்பி, 249.
வேல்விழவு, 113.
வேளாவட்டன், 29 (பா.)
வேளிர், 135, 206, 258, 331, 372.
வேளூர், 166.
வேளூர்வாய்த்தெய்வம், 166.
வையை, 36, 256, 296.
வையை மருதத்துறை, 36.

ஸ்ரீ:

இலக்கணக்குறிப்பு

[எண், பாட்டெண்]

அசைச்சொல் :—*அந்தில்*, 76 ; *ஆங்கு*, 16, 44 ; *ஆல்*, 39 ; *இன்*, 32 ; *ஓ*, 43, 63 ; *ஓர்*, 86 ; *ஓரும்*, 12 ; *குரை*, 33 ; *சின்*, 7 ; *தெய்ய*, 90, 220 ; *மற்று*, 26 ; *மார்*, 100 ; *மாள*, 16 ; *யாழ*, 39.

அடுக்கு விரைவின் கண் வந்தது :—*அளியரோ வளியர்*, 43.

அம்ம கேட்பித்தற்பொருளில் வருதல் :—101 ; 130 ; 141.

அல்வழிச்சாரியை :—இன், 13.

ஆகுபெயர் :—*அரண்*, 55 ; *அலங்கல்* ; 13 ; *ஆலம்*, 70 ; *உதைப்பு*, 24 ; *எழிலி*, 43 ; *சினம்*, 75 ; *தலை*, 83 ; *நிறை*, 37 ; *புளி*, 60 ; *முடை*, 30.

ஆசிரியம் ஓகாரத்தான் இற்றது :—*யாரோ*, 46.

இசின் :—*மறந்திசின்*, 38 (*தன்மைக்கண்வந்தது*) ; *ஆன்றிசின்*, 69 (*முன்னிலைக்கண்வந்தது*).

இடைக்குறை :—*ஓம்*, 26 ; *ஓதி*, 125.

இடைச்சொல் :—*உவக்காண்*, 204 ; *உதுக்காண்*, 4 ; *மாறு*, 42.

ஈற்றசை ஏகாரம் :—*படர்தந்தோளே*, 7 ;

ஈறுதிரிதல் :—*உருவ*, 1 ; 137. *அதை*, 38.

எச்ச உம்மை :—*வேலும்*, (*கட*). *பிரியினும்*, 50 ; *கிழவனும்*, 66.

எழுத்துப்பேறு :—*சென்றீ*, 46 (*ஏவற்கண் வந்தது*).

ஒருசொன்னீர்மைப்படுதல் :—*பிறங்கல்* 8 ; (*பிறங்கு*+*கல்*)

ஓகாரம் குறிப்பின்கண் வருதல் :—43 ; *ஒழியிசைக் கண் வருதல்*, 55.

கடைக்குறை :—*நீல் நிறப் பெருங்கடல்*, 40.

சிறப்பும்மை :—*மாலையும்*, 41 ; *மந்தியும்*, 92.

தேயவழக்கு :—*கம்மென*, 11.

தில் :—*அசை*, 33 ; *விழைவு*, 6.

பிரிநிலை ஏகாரம் :—*நீயே*, 33.

மன்—*அது மாட்டாமை*, 33, 74 ; *கழிவு*, 8, 11, 17, 37, 49, 50, 70 ; *மிகுதி*, 87.

மாறு என்னும் இடைச்சொல் ஏதுப்பொருளில் வருதல் :—*வந்தமாறே*, 42.

மெலிந்து நிற்றல் :—*புலங்கடை*, 31 ; *தலையின்று*, 54.

வடமொழித் திரிவு :—*படியோர்*, 22.

விகாரம் :—*பிறங்கல்* 8. (*பிறங்கு*+*கல்*).

வினையெச்சத்திரிபு :—*சாய்பு*, 1 ; *பரீஇ*, 21 ; *தாஅய்*, 53 ; *உருஅ*, 39.

வினைமுற்று எச்சமாதல் :—*மோயினள்*, 5 ; *இழிந்தனன்*, 66.

ஸ்ரீ :

இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர் முதலியவற்றின் முதற்குறிப்பு விளக்கம்

அகப். விள. உரை - அகப்பொருள் விளக்க உரை ; உரைகாரர்
அகம் - அகநானூறு
அரங்கு - அரங்கேறுகாதை
இரா - இராச பாரம்பரியம்
இறுதிக்க - இறுதிக்கட்டுரை
இறை. களவு - இறையனார் களவியல்
இடை - இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்
எ - து - என்பது ; என்றது
எ - று - என்றவாறு
எழுத்து - எழுத்ததிகாரம்
ஐங்கு - ஐங்குறுநூறு
கட - கடவுள்வாழ்த்து
கலி - கலித்தொகை
கலிங் - கலிங்கத்துப்பரணி
குறுந் - குறுந்தொகை
சம் - சம்பந்தமூர்த்திநாயனார்
சிலப் - சிலப்பதிகாரம்
சிறுபாண் - சிறுபாணாற்றுப்படை
சிந் - சீவகசிந்தாமணி
சூ, சூத் - சூத்திரம்
செந் - செந்தமிழ்
சேன - சேனவரையர் ; சேனவரையம்
சொல் - சொல்லதிகாரம்
திருவிளை - திருவிளையாடற் புராணம்
தேவா - தேவாரம்
தொகு - தொகுதி
தொகை - தோகைப் படலம்
தொல் - தொல்காப்பியம்
நச் - நச்சினார்க்கினியர் ; நச்சினார்க்கினியம்
நள - நளவெண்பா
நற் - நற்றிணை
பக் - பக்கம்
பகு - பகுதி
பதிற் - பதிற்றுப்பத்து
பரி - பரிபாடல்
பழ - பழமொழி
பாயி, பாயிர—பாயிரம்
பி - ம் - பிரதிபேதம்
புறத் - புறத்திணையியல்
புறம் - புறநானூறு
பேரா - பேராசிரியர் ; பேராசிரியம்
பொருள் - பொருளதிகாரம்
மரபு - மரபியல்
மலை - மலைபடுகடாம்
முருகு - திருமுருகாற்றுப்படை
யா. வி - யாப்பருங்கலவிருத்தி
வஞ்சின - வஞ்சினமாலை
வள். மா - திளவள்ளுவமாலை
வீர - வீரசோழியம்
வேளிர்வ - வேளிர் வரலாறு

ஸ்ரீ:

மூன்றாவது

நித்திலக்கோவை

301. பாலை

வறனுறு செய்தியின் வாடுபு வருந்திப்
படர்மிகப் பிரிந்தோ ருள்ளுபு நினைதல்
சிறுநனி யான்றிக மென்றி தோழி
நல்குந ரொழித்த கூலிச் சில்பத
மொடிவை யின்றி யோம்பா துண்டு
நீர்வாழ் முதலை யாவித் தன்ன
வாரை வேய்ந்த வறைவாய்ச் சகடத்
தூரிஃ தென்னு ஊறில் வாழ்க்கைச்
சுரமுதல் வருத்த மரமுதல் வீட்டிப்
பாடின் றெண்கிணை கறங்கக் காண்வரக்
குவியிண ரெருக்கின் றதர்பூங் கண்ணி
யாடூஉச் சென்னித் தகைபப மகடூஉ
முளரித் தீயின் முழங்கழல் விளக்கத்துக்
களரி யாவிரைக் கிளர்பூங் கோதை
வண்ண மார்பின் வனமுலைத் துயல்வரச்
செறிநடைப் பிடியொடு களிறுபுணர்ந் தென்னக்
குறுநெடுந் தூம்பொடு முழவுப்புணர்ந் திசைப்பக்
கார்வான் முழக்கி னீர்மிசைத் தெவுட்டுந்
தேரை யொலியின் மானச் சீரமைத்துச்
சில்லரி கறங்குஞ் சிறுபல் லியத்தொடு
பல்லூர் பெயர்வன ராடி யொல்லெனத்
தலைப்புணர்த் தசைத்த பஃறுகைக் கலப்பைய

ரிரும்பே ரொக்கற் கோடிய ரிறந்த
புன்றலை மன்றங் காணின் வழிநா
ளழுங்கன் மூதூர்க் கின்னா தாகு
மதுவே மருவின மாலை யதனாற்
காதலர் செய்த காத
னீடின்று மறத்தல் கூடுமோ மற்றே.

என்பது: *பிரிவிடை வேறுபட்ட தலைமகள் வற்புறுத்துந் தோழிக்குச் சொல்லியது.

—†அதியன் விண்ணத்தனார்.

பி-ம்: 8. தூஉரிதென்னத்தீதில். 11. ததர்பெருங்கண்ணி. 18. தெவிட்டுந். *பிரிவின்கண்; †அதியவன் வண்ணத்தினார்.

302. குறிஞ்சி

சிலம்பிற் போகிய செம்முக வாழை
யலங்க லந்தோ டசைவளி யுறுதொறும்
பள்ளி யானைப் பரூஉப்புறந் தைவரு
நல்வரை நாடனொ டருவி யாடியும்
பல்லிதழ் நீலம் படுசுனைக் குற்று
நறுவீ வேங்கை யினவண் டார்க்கும்
வெறிகமழ் சோலை நயந்துவிளை யாடலு
மரிய போலுங் காதலந் தோழி
யிருங்க லடுக்கத் தென்னைய ருழுத
கரும்பெனக் கவினிய பெருங்குர லேனல்
கிளிபட விளைந்தமை யறிந்துஞ் செல்கென
நம்மவண் விடுநள் போலாள் கைம்மிகச்
சில்சுணங் கணிந்த செறிந்துவீங் கிளமுலை
மெல்லிய லொலிவருங் கதுப்பொடு
பல்கா னோக்கு மறனில் யாயே.

என்பது: பகலேசிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

—மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார்.

இப்பாட்டின் கருத்து இன்பத்தலைமகன் என்றவாறு.

303. பாலை

இடைபிற ரறித லஞ்சி மறைகரந்து
பேஎய் கண்ட கனவிற் பன்மா
ணுணணிதி னியைந்த காமம் வென்வேன்
மறமிகு தானைப் பசும்பூட் பொறையன்
கார்புகன் றெடுத்த சூர்புக னனந்தலை
மாயிருங் கொல்லி யுச்சித் தாஅய்த்
ததைந்துசெல் லருவியி னலரெழப் பிரிந்தோர்
புலங்கந் தாக விரவலர் செலினே
வரைபுரை களிற்றொடு நன்கல னீயு
முரைசால் வண்புகழ்ப் பாரி பறம்பி
னிரைபறைக் குரீஇயினங் காலைப் போகி
முடங்குபுறச் செந்நெற் றரீஇய வோராங்
கிரைதேர் கொட்பின வாகிப் பொழுதுபடப்
படர்கொண் மாலைப் படர்தந் தாங்கு
வருவரென் றுணர்ந்த மடங்கெழு நெஞ்ச
மையந் தெளியரோ நீயே பலவுடன்
வறன்மரம் பொருந்திய சிள்வீ டுமணர்
கணநிரை மணியி னார்க்குஞ் சுரனிறந்
தழிநீர் மீன்பெயர்ந் தாங்கவர்
வழிநடைச் சேறல் வலித்திசின் யானே.

என்பது: தலைமகன்பிரிவின்கண் வேட்கைமீதூர்ந்த தலைமகள் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—ஔவையார்.

பி - ம்: 2. பொய்கண்ட. 4. மாமிகுதானை. 10. வண்மகிழ்ப்.
19. திழிநீர்.

304. முல்லை

இருவிசும் பிவர்ந்த கருவி மாமழை
நீர்செறி நுங்கின் கண்சிதர்ந் தவைபோற்
சூர்பனிப் பன்ன தண்வர லாலியொடு
பரூஉப்பெய லழிதுளி தலைஇ வானவின்று
குரூஉத்துளி பொழிந்த பெரும்புலர் வைகறை
செய்துவிட் டன்ன செந்நில மருங்கிற்
செறித்துநிறுத் தன்ன தெள்ளறல் பருகிச்
சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
வலந்திரி மருப்பி னண்ணா விரலையொ
டலங்குசினைக் குருந்தி னல்குநிழல் வதியச்
சுரும்பிமிர் பூதப் பிடவுத்தளை யவிழ
வரும்பொறி மஞ்ஞை யால வரிமணன்
மணிமிடை பவளம் போல வணிமிகக்
காயாஞ் செம்ம ரூஅய்ப் பலவுட
னீயன் மூதா யீர்ம்புறம் வரிப்பப்
புலனணி கொண்ட காரெதிர் காலை
யேந்துகோட் டியானை வேந்தன் பாசறை
வினையொடு வேறுபுலத் தல்கி நன்று
மறவ ரல்லர்நம் மருளா தோரென
நந்நோய் தன்வயி னறியா
ளெந்நொந்து புலக்குங்கொன் மாஅ யோளே.

என்பது: *பாசறைக்கட் டலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—இடைக்காடனார்.

பி-ம்: 2. சிதர்த்தவைபோல். 12. விரும்பொறி; விரிமணன். 13. மணியிடை. ~~19.~~ நந்நோய் தன்மையி; *பாசறைப்பிரிந்த.

305. பாலை

பகலினு மகலா தாகி யாமந்
தவலி னீத்தமொ டையெனக் கழியத்
தளிமழை பொழிந்த தண்வரல் வாடையொடு
பனிமீக் கூரும் பைதற் பானாட்
பல்படை நிவந்த வறுமையில் சேக்கைப்
பருகு வன்ன காதலொடு திருகி
மெய்புகு வன்ன கைகவர் முயக்கத்
தோருயிர் மாக்களும் புலம்புவர் மாதோ
வருளி லாளர் பொருள்வயி னகல
வெவ்வந் தாங்கிய விடும்பை நெஞ்சத்
தியானெவ னுளனோ தோழி தானே
பராரைப் பெண்ணைச் சேக்குங் கூர்வா
யொருதனி யன்றி லுயவுக்குரல் கடைஇய
வுள்ளே கனலு முள்ள மெல்லெனக்
கனையெரி பிறப்ப ஊதும்
நினையா மாக்க ளீங்குழல் கேட்டே.

என்பது: பிரிவுணர்த்தப்பட்டதோழிக்குத் தலைமகள் சொல்லியது. தலைமகன்பிரிவின்கண் தோழி தலைமகட்குச் சொல்லியதூஉமாம்.

—வடமவண்ணக்கன் †பேரிசாத்தனார்.

பி-ம்: 1. யிரவந். †பெருஞ்சாத்தன்.

306. மருதம்

பெரும்பெயர் மகிழ்ந பேணா தகன்மோ
பரந்த பொய்கைப் பிரம்பொடு நீடிய
முட்கொம் பீங்கைத் தூய்த்தலைப் புதுவீ
யீன்ற மாத்தி னிளந்தளிர் வருட

---

† இது பெருமணலுலகத்துப் பாலைவந்தது என்பர் நச். (தொல், பொருள். 13.)

வார்குரு குறங்கு நீர்சூழ் வளவயற்
கழனிக் கரும்பின் சாய்ப்புற மூர்ந்து
பழன யாமை பசுவெயிற் கொள்ளு
நெல்லுடை மறுகி னன்ன வூர
விதுவோ மற்றுநின் செம்மன் மாண்ட
மதியே ரொண்ணுதல் வயங்கிழை யொருத்தி
யிகழ்ந்த சொல்லுஞ் சொல்லிச் சிவந்த
வாயிதழ் மழைக்கண் ணோயுற நோக்கித்
தண்ணறுங் கமழ்தார் பரீஇயின ளும்மொ
டூடினள் சிறுதுனி செய்தெம்
மணன்மலி மறுகி னிறந்திசி னோளே.

என்பது : தோழி தலைமகற்கு வாயின்மறுத்தது.

—†மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார்.

இதன்கருத்துக் குறியாவின்பத்திணைப் பெறுவான் என்றவாறு.

பி - ம். 5. நீர்சூழ்நல்வயல். 10—11. யொத்தநிகந்த. 13. பரீஇயினை ணம்மொ. 14. டேவி. † மதுரைக் கந்தரருகன்.

307. பாலை

சிறுநுதல் பசந்து பெருந்தோள் சாஅ
யகலெழி லல்கு லவ்வரி வாடப்
பகலுங் கங்குலு மயங்கிப் பையெனப்
பெயலுறு மலரிற் கண்பனி வார
வீங்கிவ ளுழக்கு மென்னது வினைநயந்து
நீங்க லொல்லுமோ வைய வேங்கை
யடுமுரண் டொலைத்த நெடுநல் யானை
மையலங் கடாஅஞ் செருக்கி மதஞ்சிறந்
தியங்குநர்ச் செகுக்கு மெய்படு நனந்தலைப்
பெருங்கை யெண்கினங் குரும்பி தேரும்
புற்றுடைச் சுவர புதலிவர் பொதியிற்
கடவுள் போகிய கருந்தாட் கந்தத்

துடனுறை பழமையிற் றுறத்தல் செல்லா
திரும்புறாப் பெடையொடு பயிரும்
பெருங்கல் வைப்பின் மலைமுத லாறே.

என்பது: பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகனைச் செலவுவிலக்கியது.

—மதுரை ஈழத்துப் பூதன்றேவனார்.

308. குறிஞ்சி

உழுவையொ டுழந்த வுயங்குநடை யொருத்த
னெடுவகிர் விழுப்புண் கழாஅக் கங்கு
லாலி யழிதுளி பொழிந்த வைகறை
வால்வெள் ளருவிப் புனன்மலிந் தொழுகலி
னிலங்குமலை புதைய வெண்மழை கவைஇக்
கலஞ்சுடு புகையிற் றோன்று நாட
விரவின் வருத லெவனோ பகல்வரிற்
றொலையா வேலின் வண்மகி ழெந்தை
களிறணந் தெய்தாக் கன்முகை யிதணத்துச்
சிறுதினைப் படுகிளி யெம்மொ டோப்பி
மல்ல லறைய மலிர்சுனைக் குவளைத்
தேம்பா யொண்பூ நறும்பல வடைச்சிய
கூந்தன் மெல்லணைத் துஞ்சிப் பொழுதுபடக்
காவலர்க் கரந்து கடிபுனந் துழைஇய
பெருங்களிற் றொருத்தலிற் பெயர்குவை
கருங்கோற் குறிஞ்சிநும் முறைவி னூர்க்கே.

என்பது: இரவு வருவானைப் பகல் வருகென்றது.

—பிசிராந்தையார்.

பி-ம்: 15. போகுவை. 16. மிறையினூர்.

309. பாலை

வயவா ளெறிந்து வில்லி னீக்கிப்
பயநிரை தழீஇய கடுங்கண் மழவ
ரம்புசேட் படுத்து வன்புலத் துய்த்தெனத்
தெய்வஞ் சேர்ந்த பராரை வேம்பிற்
கொழுப்பா வெறிந்து குருதி தூஉய்ப்
புலவுப் புழுக்குண்ட வான்க ணகலறைக்
களிறுபுற முரிஞ்சிய கருங்கா லிலவத்
தரலை வெண்கா ழாலியிற் றூஉங்
காடுமிக நெடிய வென்னார் கோடியர்
பெரும்படைக் குதிரை நற்போர் வானவன்
றிருந்துகழற் சேவடி நசைஇப் படர்ந்தாங்கு
நாஞ்செலி னவனே தோழி காம்பின்
வனைகழை யுடைந்த கவண்விசைக் கடியிடிக்
கனைசுட ரமையத்து வழங்கல் செல்லா
திரவுப்புன மேய்ந்த வுரவுச்சின வேழந்
தண்பெரும் படாஅர் வெரூஉம்
குன்றுவிலங் கியவினவர் சென்ற நாட்டே.

என்பது; பிரிவிடை வேறுபட்ட தலைமகளது வேறுபாடுகண்டு வேறுபட்ட தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—†கருவூர்க் கந்தப்பிள்ளை சாத்தனார்.

பி-ம்: 2. மறவர். 10. பசும்படை. 11. னிருங்கழற். 13. விளைகழை யடைந்த கனைவிசை. 14, சுடர்வையத்து. 15. விரவுப்புன.

† கந்தப்பிள்ளை.

310. நெய்தல்

கடுந்தே ரிளையரொடு நீக்கி நின்ற
நெடுந்தகை நீர்மையை யன்றி நீயுந்
தொழுதகு மெய்யை யழிவுமுந் துறுத்துப்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றலிற்

குவளை யுண்கண் கலுழ நின்மாட்
டிவளும் பெரும்பே துற்றன ளோருந்
தாயுடை நெடுநகர்த் தமர்பா ராட்டக்
காதலின் வளர்ந்த மாத ராகலிற்
பெருமட முடையரோ சிறிதே யதனாற்
குன்றிற் றோன்றுங் குவவுமணற் சேர்ப
வின்றிவண் விரும்பா தீமோ சென்றப்
பூவிரி புன்னை மீதுதோன்று பெண்ணைக்
கூழுடங்க ணஃதே தெய்ய வாங்க
ணுப்பொய் யுமண ரொழுகையொடு வந்த
விளைப்படு பேடை யிரியக் குரைத்தெழுந்
துருமிசைப் புணரி யுடைதரும்
பெருநீர் வேலியெஞ் சிறுநல் லூரே.

என்பது: தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி சொல்லியது.

—நக்கீரனார்.

பி-ம்: 7. தாயுறை வியனகர். 9. முடையள் சிறிதே. 11. சென்றிப்.

311. பாலை

இரும்பிடிப் பரிசிலர் போலக் கடைநின்
றருங்கடிக் காப்பி னகன்க ணொருசிறை
யெழுதி யன்ன திண்ணிலைக் கதவங்
கழுதுவழங் கரைநாட் காவலர் மடியத்
திறந்துநப் புணர்ந்து நம்மிற் சிறந்தோ
ரிம்மை யுலகத் தில்லெனப் பன்னாட்
பொம்ம லோதி நீவிய காதலொடு
பயந்தலை பெயர்ந்து மாதிரம் வெம்ப
வருவழி வம்பலர்ப் பேணிக் கோவலர்
மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளி
செவியடை தீரத் தேக்கிலைப் பகுக்கும்
புல்லி நன்னாட் டும்பர்ச் செல்லருஞ்

சுரமிறந் தேகினு நீடல
ரருண்மொழித் தேற்றிநம் மகன்றிசி னோரே.

என்பது: பிரிவின்கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

—மாமூலனார்.

பி-ம்: 2. குடிகாப். 4. கழுதுயங்; மடிந்தெனத் 5. புணர்ந்த நும்மிற். 8. மழைதலை

312. குறிஞ்சி

நெஞ்சுடம் படுதலி னொன்றுபுரிந் தடங்கி
யிரவின் வருஉ மிடும்பை நீங்க
வரையக் கருது மாயிற் பெரிதுவந்
தோங்குவரை யிழிதரும் வீங்குபெய னீத்தங்
காந்தளஞ் சிறுகுடிக் கௌவை பேணா
தரிமதர் மழைக்கண் சிவப்ப நாளைப்
பெருமலை நாடன் மார்புபுணை யாக
வாடுகம் வம்மோ காதலந் தோழி
வேய்பயி லடுக்கம் புதையக் கால்வீழ்த்
தின்னிசை முரசி னிரங்கி யொன்னா
ரோடுபுறங் கண்ட தாடோய் தடக்கை
வெல்போர் வழுதி செல்சமத் துயர்த்த
வடுபுக ழெஃகம் போலக்
கொடிபட மின்னிப் பாயின்றான் மழையே.

என்பது: தலைமகன் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது. தலைமகள் சொல்லியதூஉமாம்.

—மதுரை மருதனிளநாகனார்.

பி-ம்: 2. நீர. 4. வீங்கிய நீத். 6. சேப்ப. 8. வாடுகமன்றே.

313. பாலை

இனிப்பிறி துண்டோ வஞ்ச லோம்பென
வணிக்கவின் கவான்வர முயங்கி நெஞ்சம்

பிணித்தோர் சென்ற வாறுநினைந் தல்கலும்
* குளித்துப்பொரு கயலிற் கண்பனி மல்க
வைய வாக வெய்ய வுயிரா
விரவு மெல்லையும் படரட வருந்தி
யரவுநுங்கு மதியி னுதலொளி கரப்பத்
தம்மல தில்லா நம்மிவ ணொழியப்
பொருள்புரிந் தகன்றன ராயினு மருள்புரிந்து
வருவர் வாழி தோழி பெரிய
நிதியஞ் சொரிந்த நீவி போலப்
பாம்பூன் றேம்பும் வறங்கூர் கடத்திடை
நீங்கா வம்பலர் கணையிடத் தொலைந்தோர்
வசிபடு புண்ணின் குருதி மாந்தி
யொற்றுச்சென் மாக்களி னொடுங்கிய குரால
வில்வழிப் படூஉங் காக்கைக்
கல்லுயர் பிறங்கன் மலையிறந் தோரே.

என்பது: பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.
இப்பாட்டினுள் நீவி என்பது பை.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

பி-ம்: 2. கலவா வளர; 3. நினைத்தலும். 15. கால. 16. படரும்.

314. முல்லை

† நீலத் தன்ன நீர்பொதி கருவி
னமர்விசும் பதிர முழங்கி யாலியி
னிலந்தண் ணென்று கானங் குழைப்ப
வினந்தே ருழவ ரின்குர லியம்ப
மறியுடை மடப்பிணை தழீஇப் புறவிற்

* இஃது உவமஉருபின்றி இன்னுருபு தன்பொருட்கண்ணும் வந்தது. † இதுமுன்பு தலைவிக்கு நிகழ்ந்த ஆற்றாமையும் அதுகண்டு தான் கலங்கியவாறும் தலைவற்குக் கூறியது என்பர் நச். (தொல். பொருள். 150.)

றிரிமருப் பிரலை பைம்பயி ருகள
வார்பெய லுதவிய கார்செய் காலை
நூனெறி நுணங்கிய கானவில் புரவி
கல்லெனக் கறங்குமணி யியம்ப வல்லோன்
வாய்ச்செல வணக்கிய தாப்பரி நெடுந்தே
ரீர்ம்புற வியங்குவழி யறுப்பத் தீந்தொடைப்
பையு ணல்யாழ் செவ்வழி பிறப்ப
விந்நிலை வாரா ராயிற் றந்நிலை
யெவன்கொல் பாண வுரைத்திசிற் சிறிதெனக்
கடவுட் கற்பின் மடவோள் கூறச்
செய்வினை யழிந்த மைய னெஞ்சிற்
றுனிகொள் பருவர றீர வந்தோ
யினிதுசெய் தனையால் வாழ்கநின் கண்ணி
வேலி சுற்றிய வால்வீ முல்லைப்
பெருந்தார் கமழும் விருந்தொலி கதுப்பி
னின்னகை யிளையோள் கவவ
மன்னுக பெருமநின் மலர்ந்த மார்பே.

என்பது: வினைமுற்றிப் புகுந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

—மதுரை அளக்கர்ஞாழார்மகனார் அம்மள்ளனார்.

பி-ம். 4. வினத்தே. 6—7. க்கார்பெய. 11. யிமைப்ப. 12. மறப்ப

315. பாலை

கூழையுங் குறுநெறிக் கொண்டன முலையுஞ்
சூழி மென்முகஞ் செப்புட னெதிரின
பெண்டுணை சான்றன ளிவளெனப் பன்மாண்
கண்டுணை யாக நோக்கி நெருநையு
மயிர்த்தன்று மன்னே நெஞ்சம் பெயர்த்து
மறியா மையிற் செறியேன் யானே
பெரும்பெயர் வழுதி கூட லன்னதன்
னருங்கடி வியனகர்ச் சிலம்புங் கழியாள்

சேணுறச் சென்று வறுஞ்சுனைக் கொல்கிப்
புறவுக்குயின் றுண்ட புன்காய் நெல்லிக்
கோடை யுதிர்த்த குவிகட் பசுங்கா
யறுநூற் பளிங்கின் றுளைக்காசு கடுப்ப
வறுநிலத் துதிரு மத்தங் கதுமெனக்
கூர்வேல் விடலை பொய்ப்பப் போகிச்
சேக்குவள் கொல்லோ தானே தேக்கி
னகலிலை கவித்த புதல்போல் குரம்பை
யூன்புழுக் கயரு முன்றிற்
கான்கெழு வாழ்நர் சிறுகுடி யானே.

என்பது : மகட்போக்கிய தாய் செல்லியது.

—குடவாயிற்கீரத்தனார்.

பி - ம். 9. சுனைக்கோங்கி. 12. துளைக்காசு. 13. வறனிலத். 16. குவித்த.

316. மருதம்

* துறைமீன் வழங்கும் பெருநீர்ப் பொய்கை
யரிமல ராம்பன் மேய்ந்த நெறிமருப்
பீர்ந்த ணெருமைச் சுவல்படு முதுபோத்துத்
தூங்குசேற் றள்ளற் றுஞ்சிப் பொழுதுபடப்
பைந்நிணம் வராஅல் குறையப் பெயர்தந்து
குரூஉக்கொடிப் பகன்றை சூடி மூதூர்ப்
போர்செறி மள்ளரிற் புகுதரு மூரன்
றேர்தர வந்த தெரியிழை நெகிழ்தோ

* "உணர்ப்புவயின்வாரா ஊடல்உற்றோள்வயின் உணர்த்தல் வேண்டிய கிழவோன்பால் நின்று தான் வெகுண்டு ஆக்கியதகுதிக் கண்" தோழிக்குக் கூற்றுநிகழும் என்பதற்கு இப்பாட்டினை உதாரணமாகக் கொண்டு, 'இது தோழி தலைவியைவெகுண்டு ஆக்கியவாறுகாண்க என்றும், "அதுபுலந் துறைதல்வல்லியோரே........துடனுமோரே" எனப் புலவியால் நின் இல்வாழ்க்கை குறைவுபடுமெனத் தோழி கூறியவாறுகாண்க" என்றும்கூறுவர் நச். (தொல்.பொருள்150, 226)

ஞூர்கொள் கல்லா மகளிர் தரத்தரப்
பரத்தைமை தாங்கலோ விலனென வறிதுநீ
புலத்த லொல்லுமோ மனைகெழு மடந்தை
யதுபுலந் துறைதல் வல்லி யோரே
செய்யோ ணீங்கச் சில்பதங் கொழித்துத்
தாமட் டுண்டு தமிய ராகித்
தேமொழிப் புதல்வர் திரங்குமுலை சுவைப்ப
வைகுந ராகுத லறிந்து
மறியா ரம்மவஃ துடனு மோரே.

என்பது: தலைமகற்கு வாயில்நேர்ந்த தோழி தலைமகளை நெருங்கிச் சொல்லியது.

—ஓரம்போகியார்.

பி - ம்: 5. போதந்து. 6. பரூஉக்கொடி. 7. போர்ச் செறி. 8. நெகிழ்த்தோர்.

317. பாலை

மாக விசும்பின் மழைதொழி லுலந்தெனப்
பாஅ யன்ன பகலிருள் பரப்பிப்
புகைநிற வுருவி னற்சிர நீங்கக்
குவிமுகை முருக்கின் கூர்நுனை வையெயிற்று
நகைமுக மகளி ரூட்டுகிர் கடுக்கு
முதிராப் பல்லித ழுதிரப் பாய்ந்துடன்
மலருண் வேட்கையின் சிதர்சிதர்ந் துகுப்பப்
பொன்செய் கன்னம் பொலிய வெள்ளி
நுண்கோ லறைகுறைந் துதிர்வன போல
வரவ வண்டின மூதுதொறுங் குரவத்
தோங்குசினை நறுவீ கோங்கல ருறைப்பத்
துவைத்தெழு தும்பித் தவிரிசை விளரி
புதைத்துவிடு நரம்பி னிம்மென விமிரு
மானே முற்ற காமர் வேனில்
வெயிலவிர் புரையும் வீததை மராஅத்துக்

குயிலிடு பூச லெம்மொடு கேட்ப
வருவே மென்ற பருவ மாண்டை
யில்லை கொல்லென மெல்ல நோக்கி
நினைந்தன மிருந்தன மாக நயந்தாங்
குள்ளிய மருங்கி னுள்ளம் போல
வந்துநின் றனரே காதலர் நந்துறந்
தென்னுழி யதுகொ றுனே பன்னு
என்னையு மறிவுற வணங்கி
நன்னுதற் பாஅய பசலை நோயே.

என்பது: தலைமகன் வரவுணர்ந்ததோழி தலைமகட்குச் சொல்லியது.

—வடமோதங்கிழார்.

இப்பாட்டினுட் கன்னமென்றது தட்டார் சின்னத்தட்டை.

பி - ம். 12. தவரிசை. 14. மரனேமுற்ற. 16. எம்மொடு கொட்ப. 21. நத்துறந்

318. குறிஞ்சி

* கான மானதர் யானையும் வழங்கும்
வான மீமிசை யுருமுநனி யுரறு
மரவும் புலியு மஞ்சுதக வுடைய
விரவழுங்கு சிறுநெறி தமியை வருதி
வரையிழி யருவிப் பாட்டொடு பிரச
முழவுசேர் நரம்பி னிம்மென விமிரும்
பழவிற னனந்தலைப் பயமலை நாட
மன்றல் வேண்டினும் பெறுகுவை யொன்றோ
வின்றுதலை யாக வாரல் வரினே

*"ஆற்றது தீமை அறிவுறுகலக்கம்" என்ற பகுதியினுட் கலக்கம் எனப் பொதுப்படக் கூறியவதனால், ஆற்றிடை ஏதமின்றிச் சென்றமைதோன்ற ஆண்டு ஓர்குறி செய்க எனக் கூறுவனவுங் கொள்க எனக்கூறி, "வரினே,...யெம்முறு துயரமொ டியாமிவ ணொழிய... நின்னுய்யயிர் குறிநிலை கொண்டகோ" ட்டை ஊதல் வேண்டுமோற் சிறிது என்றவாறு காண்க என்பர் நச். (தொல். பொருள். 114).

வெம்முறு துயரமொ டியாமிவ ணொழிய
வெற்கண்டு பெயருங் காலை யாழநின்
கற்கெழு சிறுகுடி யெய்திய பின்றை
யூதல் வேண்டுமாற் சிறிதே வேட்டொடு
வேய்பயி லழுவத்துப் பிரிந்தநின்
னாய்பயிர் குறிநிலை கொண்ட கோடே.

என்பது: இரவுக்குறிவந்த தலைமகனை வரவுவிலக்கி வரைவுகடாயது.

—கபிலர்.

இதன்கருத்து வேண்டியது முடிக்கும் என்பது.

பி - ம்: 4. வாரவழுங். 6. மென்மெல. 10. யேமுறுதுயர நாமிவ.

319. பாலை

மணிவாய்க் காக்கை மாநிறப் பெருங்கிளை
பிணிவீ ழாலத் தலங்குசினை யேறிக்
கொடுவி லெயினர் குறும்பிற் கூக்குங்
கடுவினை மறவர் வில்லிடத் தொலைந்தோர்
படுபிணங் கவரும் பாழ்படு நனந்தலை
யணங்கென வுருத்த நோக்கி னையென
நுணங்கிய நுசுப்பி னுண்கேழ் மாமைப்
பொன்வீ வேங்கைப் புதுமலர் புரைய
நன்னிறத் தெழுந்த சுணங்கணி வனமுலைச்
சுரும்பார் கூந்தற் பெருந்தோ ளிவள்வயிற்
பிரிந்தனி ரகறல் சூழி னரும்பொரு
ளெய்துக மாதோ நுமக்கே கொய்தழைத்
தளிரே ரன்ன தாங்கரு மதுகையள்
மெல்லிய ளிளைய ளனிபே ரன்பினள்
செல்வே மென்னு நும்மெதி
ரொழிகவே மென்னு மொண்மையோ விலளே.

என்பது: செலவுணர்த்திய தலைமகற்குத் தோழி செலவழுங்கச் சொல்லியது.

—எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்.

பி-ம்: 1. மானிற. 8. புரையு. 12. - 13. கொய்குழைத் தளிரோரன் ன தாங்கரு மங்கையள். 14. மெல்லியல். 16. ரொழியோமே.

320. நெய்தல்

ஓங்குதிரைப் பரப்பின் வாங்குவிசைக் கொளீஇத்
திமிலோன் றந்த கடுங்கண் வயமீன்
றழையணி யல்குற் செல்வத் தங்கையர்
விழவயர் மறுகின் விலையெனப் பகரும்
கானலஞ் சிறுகுடிப் பெருநீர்ச் சேர்ப்ப
மலரே ருண்கணெந் தோழி யெவ்வ
மலர்வாய் நீங்கநீ யருளாய் பொய்ப்பினு
நெடுங்கழி துழைஇய குறுங்கா லன்ன
மடும்பம ரெக்க ரஞ்சிறை யுளருந்
தடவுநிலைப் புன்னைத் தாதணி பெருந்துறை
நடுங்கயிர் போழ்ந்த கொடுஞ்சி நெடுந்தேர்
வண்டற் பாவை சிதைய வந்துநீ
தோள்புதி துண்ட ஞான்றைச்
சூளும் பொய்யோ கடலறி கரியே.

என்பது: பகற்குறிக்கண்வந்த தலைமகனைத் தோழி வரைவுகடாயது.

—மதுரைக் கூலவாணிகன் *சீத்தலைச்சாத்தனார்

பி-ம்: 3. செல்வர்தங்கை. 4. நுவலு. 9. கடும்பூ ரெக்க ரொரு சிறை. 14. கடலறி கடனே. * சீதங்கஞ்சாத்தன்.

321. பாலை

பசித்த யானைப் பழங்கண் ணன்ன
வறுஞ்சுனை முகந்த கோடைத் தெள்விளி
விசித்துவாங்கு பறையின் விடரகத் தியம்பக்
கதிர்க்கா லம்பிணை யுணீஇய புகலேறு
குதிர்க்கா லிருப்பை வெண்பூ வுண்ணூ
தாண்குரல் விளிக்குஞ் சேண்பால் வியன்சுரைப்
படுமணி யினநிரை யுணீஇய கோவலர்

விடுநில முடைத்த கலுழ்கட் கூவற்
கன்றுடை மடப்பிடி களிறொடு தடவரும்
புன்றலை மன்றத் தங்குடிச் சீறூர்த்
துணையொடு துச்சி லிருக்குங் கொல்லோ
கணையோ ரஞ்சாக் கடுங்கட் காளையொ
டெல்லி முன்னுறச் செல்லுங் கொல்லோ
வெவ்வினை செய்யுங்கொ னோகோ யானே
யரிபெய்து பொதிந்த தெரிசிலம்பு கழீஇ
யாயறி வுறுத லஞ்சி
வேயுயர் பிறங்கன் மலையிறந் தோளே.

என்பது: மகட்போக்கிய செவிலி சொல்லியது.

—கயமனார்.

பி-ம்: 6. வியன்சுவற். 8. கற்கூவல். 16. யாயறிந் துணர்த லஞ்சி.

322. குறிஞ்சி

வயங்குவெயின் ஞெமியப் பாஅய் மின்னுவசிபு
மயங்குதுளி பொழிந்த பானாட் கங்கு
லாராக் காம மடூஉநின் றலைப்ப
விறுவரை வீழ்நரி னடுங்கித் தெறுவரப்
பாம்பெறி கோலிற் றமியை வைகித்
தேம்புதி கொல்லோ நெஞ்சே யுருமிசைக்
களிறுகண் கூடிய வாண்மயங்கு ஞாட்பி
னொளிறுவேற் றானைக் கடுந்தேர்த் திதியன்
வருபுன லிழிதரு மரம்பயி லிறும்பிற்
பிறையுறழ் மருப்பிற் கடுங்கட் பன்றிக்
குறையார் கொடுவரி குழுமுஞ் சார
லறையுறு தீந்தேன் குறவ ரறுப்ப
முயலுநர் முற்றா வேற்றரு நெடுஞ்சிமைப்
புகலரும் பொதியில் போலப்
பெறலருங் குரையளெம் மணங்கி யோளே.

என்பது: அல்லகுறிப்பட்டுப் போகின்ற தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—பரணர்.

பி - ம். 10 - 11. பன்றி குறையாக். 11. - 12. சோலை யறையறு. 14. போலும். 15. பெறலருங் குரையணம்.

323. பாலை

இம்மென் பேரல ரிவ்வூர் நம்வயிற்
செய்வோ ரேச்சொல் வாடக் காதலர்
வருவ ரென்பது வாய்வ தாக
லைய செய்ய மதனில சிறியநின்
னடியில னுறுத லஞ்சிப் பையத்
தடவர லொதுக்கந் தகைகொள வியலிக்
காணிய வம்மோ கற்புமேம் படுவி
பலவுப்பல தடைஇய வேய்பயி லடுக்கத்
தியானைச் செல்லினங் கடுப்ப வானத்து
வயங்குகதிர் மழுங்கப் பாஅய்ப் பாம்பின்
பைபட விடிக்குங் கடுங்குர லேற்றொ
டாலி யழிதுளி தலைஇக்
கால்வீழ்த் தன்றுநின் கதுப்புறழ் புயலே.

என்பது: பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

—பறநாட்டுப் பெருங்கோற்றனார்.

இப்பாட்டு எதிர்காலநோக்கிற்று.

பி - ம்: 4.—5. வாய்வதாக வைய. 9. செலவினங்.

324. முல்லை

*விருந்தும் பெறுகுநள் போலுந் திருந்திழைத்
தடமென் பணைத்தோண் மடமொழி யரிவை

---

* தலைவன் மீளுங்கால் விருந்து பெறுகுவள்கொல்லென இளையோர் தலைவிநிலையுரைத்தலுக்கு இப்பாட்டினை உதாரணமாகக் காட்டி, "வளராப்பிள்ளை" - அவர்கள் தங்களுக்கு வளராப்பிள்ளையென்றலு மாம்' என்றும் கூறுவர் நச். (தொல். பொருள். 170.)

தளிரியற் கிள்ளை யினிதினி னெடுத்த
வளராப் பிள்ளைத் தூவி யன்ன
வுளர்பெயல் வளர்த்த பைம்பயிர்ப் புறவிற்
பறைக்க ணன்ன நிறைச்சுனை தோறுந்
துளிபடு மொக்கு டுள்ளுவன சாலத்
தொளிபொரு பொகுட்டுத் தோன்றுவன மாய
வளிசினை யுதிர்த்தலின் வெறிகொள்பு தாஅய்ச்
சிரற்சிற கேய்ப்ப வறற்கண் வரித்த
வண்டு ணறுவீ துமித்த நேமி
தண்ணில மருங்கிற் போழ்ந்த வழியு
ணிரைசெல் பாம்பின் விரைபுநீர் முடுகச்
செல்லு நெடுந்தகை தேரே
முல்லை மாலை நகர்புக லாய்ந்தே.

என்பது: வினைமுற்றிய தலைமகன் கருத்துணர்ந்து உழையர் சொல்லியது.

—ஒக்கூர் மாசாத்தியார்.

பி-ம்: 1. பெறுகுவள். 2. மடமா வரிவை. 4. வளரிளம் பிள்ளை. 13. விரையு நீர்.

325. பாலை

அம்ம வாழி தோழி காதலர்
வெண்மணி யிவந்த பொலங்கடை நெடுநகர்
நளியிருங் கங்குற் புணர்குறி வாய்த்த
களவுங் கைம்மிக வளர்ந்தன் றன்னையு
முட்கொண் டோவாள் காக்கும் பிற்பெரி
திவணுறை பெவனோ வளியனென் றருளி
யாடுநடைப் பொலிந்த புகற்சியி னாடு
கொள்ளணைப் பணித்த வதியன் பின்றை

வள்ளுயிர் மாக்கிணை கண்ணவிந் தாங்கு
மலைகவி னழிந்த கனைகடற் றருஞ்சுரம்
வெய்ய மன்றநின் வைவெயி றுணீஇய
தண்மழை யொருநாட் டலையுக வொண்ணுத
லொல்கிய லரிவை நின்னொடு செல்கஞ்
சின்னா ளான்றனை யாகெனப் பன்னா
ளுலைவி னுள்ளமொடு வினைவலி யுறீஇ
யெல்லாம் பெரும்பிறி தாக வடாஅது
நல்வேற் பாண னன்னாட் டுள்ளதை
வாட்கண் வானத் தென்றூழ் நீளிடை
யாட்கொல் யானை யதர்பார்த் தல்குஞ்
சோலை யத்த மாலைப் போகி
யொழியச் சென்றோர் மன்ற
பழியெவ னுங்கொ ணோய்தரு பாலே.

என்பது: * கொண்டு நீங்கக்கருதி யொழிந்த தலைமகன் பிரிவின்கட் டலைமகள் தோழிக்குச் சொல்லியது.

—மாமூலனார்.

இப்பாட்டுக் † களவின்வழிப் பாலை.

பி-ம்: 4. வலர்ந்தன்றன்னையு. 6. ணுறை வெவ. 7—8. னுடுகொ, ளள்ளனைப்பணி; வள்ளைப் பிணித்த. 9. கண்ணவிந்தன்ன. 15. யுறீ 17. பல்வேற்பாணர் நன்னாட். * தலைமகன் குறிப்பறிந்ததோழி இய தலைமகட்கு. † களவில்வழிப்பாலை.

326. மருதம்

ஊர லவ்வா யுருத்த தித்திப்
பேரமர் மழைக்கட் பெருந்தோட் சிறுநுத
னல்ல ளம்ம குறுமகள் செல்வர்
கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்க
ணெடுங்கொடி நுடங்கு மட்ட வாயி
லிருங்கதிர்க் கழனிப் பெருங்கவி னன்ன
நலம்பா ராட்டி நடையெழிற் பொலிந்து

விழவிற் செலீஇயர் வேண்டும் வென்வே
லிழையணி யானைச் சோழன் மறவன்
கழையளந் தறியாக் காவிரிப் படப்பைப்
புனன்மலி புதவிற் போஒர் கிழவோன்
பழைய னோக்கிய வேல்போற்
பிழையல கண்ணவ ணோக்கியோர் திறத்தே.

என்பது: தோழி தலைமகனை வாயின்மறுத்தது.

—பரணர்.

ப் - ம்: 1. ஊரலவ்வா; ஊறலவ்வா. 9. சோழர் மறவன். 11. புறவிற் கிழவோன்.

327. பாலை

இன்பமு மிடும்பையும் புணர்வும் பிரிவு
நன்பக லமையமு மிரவும் போல
வேறுவே றியல வாகி மாறெதிர்ந்
துளவென வுணர்ந்தனை யாயி னொரூஉ
மின்னு வெஞ்சுர நன்னசை துரப்பத்
துன்னலுந் தகுமோ துணிவி னெஞ்சே
நீசெல வலித்தனை யாயின் யாவது
நினைதலுஞ் செய்தியோ வெம்மே கனைகதி
ராவி யவ்வரி நீரென நசைஇ
மாதவப் பரிக்கு மரறிரங்கு நனந்தலைக்
களர்கால் யாத்த கண்ணகன் பரப்பிற்
செவ்வரைக் கொழிநீர் கடுப்ப வரவி
னவ்வரி புரிவை யணவரு மருங்கிற்
புற்றரை யாத்த புலர்சினை மரத்த
மைந்நிற வுருவின் மணிக்கட் காக்கை
பைந்நிணங் கவரும் படுபிணக் கவலைச்
சென்றோர் செல்புறத் திரங்கார் கொன்றோர்
கோல்கழி பிரங்கு மதர
வேய்பயி லழுவ மிறந்த பின்னே,

ஆ. மாணிக்கம்,
மணவழகு தமிழகம்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

என்பது: பொருள்கடைக் கூட்டிய *நெஞ்சினைக் கழறியது.

—மருங்கூர்ப்பாகைச் சாத்தன் பூதனார்.

பி - ம்: 5. சுரநசைதுரந்தியக்க 8. வினைதலு வினைதியோ. 9. நசைஇய. 11. பாம்பிற். *நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.

328. குறிஞ்சி

வழையம லடுக்கத்து வலனேர்பு வயிரியர்
முழவதிர்ந் தன்ன முழக்கத் தேறோ
டிரவுப்பெயல் பொழிந்த நள்ளென் யாமத்
தரவின் பைந்தலை யிடறிப் பானா
ளிரவின் வந்தெம் மிடைமுலை பொருந்தித்
துணிக ணகல வளைஇக் கங்குலி
னினிதி னியைந்த நண்பவர் முனிதோ
றிற்று குதன்ற் கறிந்தன மாயி
னிலங்குவளை நெகிழப் பரந்துபட ரலைப்பயா
முயங்குதொறு முயங்குதொறு முயங்க முகந்து
டடக்குவ மன்னே தோழி மடப்பிடி [கொண்
மழைதவழ் சிலம்பிற் கடுஞ்சூ லீன்று
கழைதின் யாக்கை விழைகளி றுதைவர
வாழையஞ் சிலம்பிற் றுஞ்சுஞ்
சார னாடன் சாயன் மார்பே.

என்பது: இரவுக்குறிச் சிறைப்புறமாகத் *தோழி சொல்லெடுப்பத் தலைமகள் சொல்லியது.

—மதுரைப் பண்ட†வாணிக னிளன்றேவனார்.

பி - ம்: 1. வழையமைய; வரையமல. 3. டிரவுப் பெயல். 5. முயங்கித். 6. துணிக்கண்ணகல. 7. னீதலினியைந்த நண்பர். 7-8. முனிதறேற்று. 10. முயங்கு தோறு முயங்க. *தோழிக்குத் தலைமகள். †வாணிக னீழன்றேவனார்; னிளான்றேவ.

329. பாலை

பூங்கணு நுதலும் பசப்ப நோய்கூர்ந்
தீங்கியான் வருந்தவு நீங்குத றுணிந்து
வாழ்தல் வல்லுந ராயிற் காதலர்
குவிந்த குரம்பை யங்குடிச் சீறூர்ப்
படுமணி யியம்பப் பகலியைந் துமணர்
கொடுநுகம் பிணித்த செங்கயிற் றொழுகைப்
பகடயாக் கொள்ளும் வெம்முனைத் துகடொகுத்
தெறிவளி சுழற்று மத்தஞ் சிறிதசைந்
தேகுவர் கொல்லோ தாமே பாய்கொள்
புறுவெரி நொடிக்குஞ் சிறுவரிக் குருளை
நெடுநல் யானை நீர்நசைக் கிட்ட
கைகறித் தூரறு மைதூங் கிறும்பிற்
புலிபுக் கீனும் வறுஞ்சுனைப்
பனிபடு சிமையப் பன்மலை யிறந்தே.

என்பது: பிரிவிடைவேறுபட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது. பிரிவுணர்த்தியதோழிக்குத் தலைமகள் சொல்லியதூஉமாம்.

—உறையூர் *முதுகூத்தனார்.

பி-ம்: 3. ரேழி. 7. பகடசாக்கொள். 10. புறவெரி. 14. பயன்மலை. *முதுகூற்றன்.

330. நெய்தல்

* கழிப்பூக் குற்றுங் கான லல்கியும்
வண்டற் பாவை வரிமண லயர்ந்து

* இப்பாட்டில் "அறியாமையின் அயர்ந்த நெஞ்சமொடு" என்பது தன்வயினுரிமை என்றும், 'இகந்து மாயும்' என்பது அவன்வயிற்பரத்தைமை என்றும், "கழிப்பூக் குற்றுங் கான லல்கியும்" என்றாற்போலச் சிலபொருளை ஒழித்துச் சில பொருண்மேனிற்றல் உரையிற்கொள்க" என்றுங் கூறுவர் நச். (தொல். பொருள். 111., சொல். 53.)

மின்புறப் புணர்ந்து மிளிவரப் பணிந்துந்
தன்றுயர் வெளிப்படத் தவறி நந்துய
ரறியா மையி னயர்ந்த நெஞ்சமொடு
செல்லு மன்னோ மெல்லம் புலம்பன்
செல்வோன் பெயர்புறத் திரங்கி முன்னின்று
தகைஇய சென்றவெ னிறையி னெஞ்ச
மெய்தின்று கொல்லோ தானே யெய்தியுங்
காமஞ் செப்ப நாணின்று கொல்லோ
வுதுவ காணவ ரூர்ந்த தேரே
குப்பை வெண்மணற் குவவுமிசை யானு
மெக்கர்த் தாழை மடல்வயி னானு
மாய்கொடிப் பாசடும்பு பரிய வூர்பிழிபு
சிறுகுடிப் பரதவர் பெருங்கடன் மடுத்த
கடுஞ்செலற் கொடுந்திமில் போல
நிவந்துபடு தோற்றமொ டிகந்துமா யும்மே.

என்பது: தலைமகற்குக்குறைநேர்ந்த தோழி தலைமகட்குக் குறை நயப்பக்கூறியது.

—உலோச்சனார்.

பி - ம்: 4. வெளிப்படவிரீஇ; நொந்துயிர். 5. னயர்ந்தெநெஞ். 7. தியங்கி. 11. வுதுக்காண்.

331. பாலை

நீடுநிலை யரைய செங்குழை யிருப்பைக்
கோடுகழைடந் தன்ன கொள்ளை வான்பூ
வாடுபரந் தன்ன வீனை லெண்கின்
சேடுசினை யுரீஇ யுண்ட மிச்சில்
பைங்குழைத் தழையர் பழையர் மகளிர்
கண்டிர ணீளமை கடிப்பிற் றொகுத்துக்
குன்றகச் சிறுகுடி மறுகுதொறு மறுகுமஞ்
சீறூர் நாடு பலபிறக் கொழியச்
சென்றோ ரன்பிலர் தோழி யென்று

மருந்துறை முற்றிய கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாண ரார்ப்பப் பலகல முதவி
நாளவை விருந்த நனைமகிழ்த் திதியன்
வேளிரொடு பொரீஇய கழித்த
வாள்வா யன்ன வறுஞ்சுர மிறந்தே.

என்பது: தலைமகன் பிரிவின்கண் தோழிக்குத் தலைமகள் சொல்லியது. இப்பாட்டிற் பழையர்மகளிரென்பது வேட்டுவிச்சியரையும் உழத்தியரையும்.

—மாமூலனார்.

பி - ம்: 3. வாடியர்ந்தன்ன. 4. ஞெருடு சினையுரைஇ. 5. தழை யரம்பழையர். 6. ணீடமைகதியிற். 7-8. மறுகு, மஞ்சி லூர நாடுபிறக். 12. மகிழ்திதியன். 13. பொரீஇக்கழித்த. 14. வருஞ்சுர.

332. குறிஞ்சி

முளைவளர் முதல மூங்கின் முருக்கிக்
கிளையொடு மேய்ந்த கேழ்கிளர் யானை
நீர்நசை மருங்கி னிறம்பார்த் தொடுங்கிய
பொருமுர ணுழுவை தொலைச்சிக் கூர்நுனைக்
குருதிச் செங்கோட் டழிதுளி கழாஅக்
கன்முகை யடுக்கத்து மென்மெல வியலிச்
செறுபகை வாட்டிய செம்மலொ டறுகால்
யாழிசைப் பறவை யிமிரப் பிடிபுணர்ந்து
வாழையஞ் சிலம்பிற் றுஞ்சு நாட
னின்புரைத் தக்க சாயல னெனநீ
யன்புரைத் தடங்கக் கூறிய வின்சொல்
வாய்த்தன வாழி தோழி வேட்டோர்க்
கமிழ்தத் தன்ன கமழ்தார் மார்பின்
வண்டிடைப் படாஅ முயக்கமுந்
தண்டாக் காதலுந் தலைநாட் போன்மே.

என்பது: இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழிக்குத் *தலைமகள் இயற்பட மொழிந்தது.

—கபிலர்.

பி - ம்: 1. முழைவளர். 3. நிரம்பாதொடுங்கிய. 5. செங்கோடழி. 6. கணமுகை. 7. வாட்டியச் செம்மல். 10. சாய லெனக். 15. நாள்போன் *தலைமகள்சொல்லியது.

333. பாலை.

யாஅ வொண்டளி ரரக்குவிதிர்த் தன்னநின்
னாக மேனி யம்பசப் பூர
வழிவுபெரி துடையை யாகி யவர்வயிற்
பழிதலைத் தருதல் வேண்டுதி மொழிகொண்டு
தாங்க லொல்லுமோ மற்றே யாங்குநின்
னெவ்வம் பெருமை யுரைப்பிற் செய்பொருள்
வயங்கா தாயினும் பயங்கெடத் தூக்கி
நீடலர் வாழி தோழி கோடையிற்
குருத்திறு புக்க வருத்தஞ் சொலாது
தூம்புடைத் துய்த்தலை கூம்பு திரங்கிய
வேனில் வெளிற்றுப்பனை போலக் கையெடுத்
தியானைப் பெருநிரை வானம் பயிரு
மலைசே ணிகந்தன ராயினு நிலைபெயர்ந்து
நாளிடைப் படாது வருவர் நமரெனப்
பயந்தரு கொள்கையி னயந்தலை திரியாது
நின்வா யின்மொழி நன்வா யாக
வருவ ராயினோ நன்றே வாரா
தவணர் காதல ராயினு மிவணம்
பசலை மாய்த லெளிதுமற் றில்ல
சென்ற தேஎத்துச் செய்வினை முற்றி
மறுதர லுள்ளத்த ரெனினுங்
குறுகுபெரு நசையொடு தூதுவரப் பெறினே.

என்பது: பிரிவிடைவற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—கல்லாடனார்.

பி - ம்: 7. தாயினுமயங். 10. தூம்பிடை. 13. மலைச்சே; நிலைப் பெயர். 14. நாளிடைப்படாமை. 15. திரியா. 17. வருவா. 18. தவணராகு காதல. 22. குறுவெரு.

334. முல்லை

ஓடா நல்லேற் றுரிவை தைஇய
வாடுகொண் முரச மிழுமென முழங்க
நாடுதிறை கொண்டன மாயிற் பாக
பாடிமிழ் கடலி னெழுந்த சும்மையொடு
பெருங்களிற்றுத் தடக்கை புரையக் கால்வீழ்த்
திரும்பிடித் தொழுதியி னீண்டுவன குழீஇ
வணங்கிறை மகளி ரயர்ந்தன ராடுங்
கழங்குற ழாலியொடு கதழுறை சிதறிப்
பெயறொடங் கின்றால் வானம் வானின்
வயங்குசிறை யன்னத்து நிரைபறை கடுப்ப
நால்குடன் பூண்ட கானவில் புரவிக்
கொடிஞ்சி நெடுந்தேர் கடும்பரி தவிரா
தினமயி லகவுங் கார்கொள் வியன்புனத்து
நோன்சூட் டாழி யீர்நிலந் துமிப்ப
வீண்டே காணக் கடவுமதி பூங்கேழ்ப்
பொலிவன வமர்த்த வுண்க
ணொலிபல் கூந்த லாய்சிறு நுதலே.

என்பது: வினைமுற்றியதலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

—*மதுரைக் கூத்தனார்.

பி - ம்: 2. மெழுமென. 5. கால்வீழ்ந் 7. ரமர்ந்தன. 10. வயங் குபிறை யன்னத். 14. நீந்துறி ணொலிப்ப; யீர்த்துறி ணொலிப்ப.
*மதுரைக்கடாரத்தனார்; மதுரைக் கந்தரத்தனார்; மதுரைக் கோடரத்தனார்.

335. பாலை

இருள்படு நெஞ்சத் திடும்பை தீர்க்கு
மருணன் குடைய ராயினு மீதல்
பொருளில் லோர்க்கஃ தியையா தாகுதல்
யானு மறிவென் மன்னே யானைதன்
கொன்மருப் பொடியக் குத்திச் சினஞ்சிறந்
தின்னா வேனி லின்றுணை யார
முளிசினை மராஅத்துப் பொளிபிளந் தூட்டப்
புலம்புவீற் றிருந்த நிலம்பகு வெஞ்சுர
மரிய வல்லமன் னமக்கே விரிதா
ராடுகொண் முரசி னடுபோர்ச் செழியன்
மாட மூதூர் மதிற்புறந் தழீஇ
நீடுவெயி லுழந்த குறியிறைக் கணைக்காற்
றொடையமை பன்மலர்த் தோடுபொதிந் தியாத்த
குடையோ ரன்ன கோளமை யெருத்திற்
பாளை பற்றழிந் தொழியப் புறஞ்சேர்பு
வாள்வடித் தன்ன வயிறுடைப் பொதிய
நாணுறத் தோன்றிய நயவரு வனப்பி
னாரத் தன்ன வணிகிளர் புதுப்பூ
வாருறு கவரியின் வண்டுணை விரிய
முத்தி னன்ன வெள்வீ தாஅ
யலகி னன்ன வரிநிறத் தாலி
நகைநனி வளர்க்குஞ் சிறப்பிற் றகைமிகப்
பூவொடு வளர்ந்த மூவாப் பசுங்காய்
நீரினு மினிய வாகிக் கூரெயிற்
றமிழ்த மூறுஞ் செவ்வா
யொண்டொடிக் குறுமகட் கொண்டனஞ் செலினே.

என்பது: தலைமகன் பொருள்கடைக்கூட்டிய நெஞ்சினைக்கழறிச் செலவழுங்கியது.

—மதுரைத் தத்தங்கண்ணனார்.

பி - ம்: 5. கோண்மருப். 8. நிலம்படு. 9. வல்ல நமக்கே. 13. றுடையமை பலமலர் கொடு. 19. வாடுறுகவரி. விரீஇய.

336. மருதம்

* குழற்காற் சேம்பின் கொழுமட லகலிலைப்
பாசிப் பரப்பிற் பறழொடு வதிந்த
வுண்ணாப் பிணவி னுயக்கஞ் சொலிய
நாளிரை தரீஇய வெழுந்த நீர்நாய்
வாளையொ டுழப்பத் துறைகலுழ்ந் தமையிற்
றெண்கட் டேறல் மாந்தி மகளிர்
நுண்செய லங்குட மிரீஇப் பண்பின்
மகிழ்நன் பரத்தைமை பாடி யவிழிணர்க்
காஞ்சி நீழற் குரவை யயருந்
தீம்பெரும் பொய்கைத் துறைகே ழூரன்
றேர்தர வந்த நேரிழை மகளி
ரேசுப வென்பவென் னலனே யதுவே
பாக னெடிதுயிர் வாழ்தல் காய்சினக்
கொல்களிற் றியானை நல்கன் மாறே
தாமும் பிறகு முளர்போற் சேறன்
முழவிமிழ் துணங்கை தூங்கும் விழவின்

---

* தானும் உரிமைபூண்டமைபற்றி மனையோளொடுதானும் ஒத்தாளாகக்கருதுதலின், தன்னை ஒக்கும் ஏனைமகளிரின் தன்னை விசேடமுண்டாகக் குறித்துக்கொண்ட கோட்பாட்டின்கண் காமக்கிழத்தி புலந்து கூறுவள் என்பதற்கு இப்பாட்டினைக்கொண்டு, "இதனுள் யானவண் வாரா மாறே எனத் தான் மனையோளைப்போல இல்லுறைதல்கூறி, ஆண்டுச்செல்லிற் சுடரொடு திரியும் நெருஞ்சிபோல ஏனைமகளிரை யான் செல்வுழிச் செல்லும் சேடியர்போலத்திரியும்படி பண்ணிக்கொள்வல் எனக்கூறியவாறு காண்க" என்பர் நச். உவமிக்கப்படும் பொருள் இழிந்துவரல்வேண்டும் என்றதற்கு "மாரி யம்பின் மழைத்தோற் சோழர்" என்ற அடியினை உதாரணங் காட்டுவர் பேரா. (தொல், பொருள். 151., 278.)

யானவண் வாரா மாறே வரினே, வானிடைச்
சுடரொடு திரிதரு நெருஞ்சி போல
வென்னொடு திரியே னாயின் வென்வேன்
மாரி யம்பின் மழைத்தோற் சோழர்
வில்லீண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை
யாரியர் படையி னுடைகவென்
னேரிறை முன்கை வீங்கிய வளையே.

என்பது: நயப்புப்பரத்தை இற்பரத்தைக்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது. இப்பாட்டில் மழைத்தோல் என்பது தோற்கிடுகு.

—பாவைக்கொட்டிலார்.

பி-ம்: 1. புழற்காற்; நூற்காற். 2. பாசிலைப்பரப்பின்; 4. தழீஇய, 5. டுழப்பது துறை. 7. குட மரீஇ. 8. பரத்தை பாடிய;பாடிய வீழிணர். 17—18. வரினே, சுடரொடு. 21. வல்லத்துக் குறுமிளை.

337. பாலை

சாரல் யாஅத் துயர்சினை குழைத்த
மாரி யீர்ந்தளி ரன்ன மேனிப்
பேரமர் மழைக்கண் புலம்புகொண் டொழிய
வீங்குப்பிரிந் துறைத லினிதன் றாகலி
னவண தாக பொருளென் றுமணர்
கணநிரை யன்ன பல்காற் குறும்பொறைத்
தூதொய் பார்ப்பான் மடிவெள் ளோலைப்
படையுடைக் கையர் வருதொடர் நோக்கி
யுண்ணு மருங்கு லின்மையின் கையது
பொன்னு குதலு முண்டெனக் கொன்னே
தடிந்துடன் வீழ்த்த கடுங்கண் மழவர்
திறனில் சிதாஅர் வறுமை நோக்கிச்
செங்கோ லம்பினர் கைந்நொடியாப் பெயரக்
கொடிவிடு குருதித் தூங்குகுடர் கறீஇ

வரிமரா லியவி னொருநரி யேற்றை
வெண்பர லிமைக்குங் கண்பறி கவலைக்
கள்ளி நீழற் கதறுபு வதிய
மழைகண் மாறிய வெங்காட் டாரிடை
யெமியங் கழிதந் தோயே பனியிருட்
பெருங்கலி வானந் தலைஇய
விருங்குளிர் வாடையொடு வருந்துவ ளெனவே.

என்பது: முன்னொருகாலத்துப் பொருள்வயிற் பிரிந்துவந்த தலைமகன் பின்னும் பொருள்கடைக் கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

பி-ம்: 8. கையர் தேரநோக்கி. 11. கடிந்துடன் வீழ்ந்த 14. தழீஇ; கதீஇ. 18. மழைக்கணமாறிய. 21. வருந்துவனெனவெ

338. குறிஞ்சி

குன்றோங்கு வைப்பி நாடுமீக் கூறு
மறங்கெழு தானை யரச ருள்ளு
மறங்கடைப் பிடித்த செங்கோ லுடனமர்
மறஞ்சாய்த் தெழுந்த வலனுயர் திணிதோட்
பலர்புகழ் திருவிற் பசும்பூட் பாண்டிய
னணங்குடை யுயர்நிலைப் பொருப்பிற் கவாஅன்
சினையொண் காந்த ணாறு நறுநுதற்
றுணையீ ரோதி மாஅ யோள்வயி
னுண்கோ லவிர்தொடி வண்புறஞ் சுற்ற
முயங்க லியையா தாயினு மென்றும்
வயவுறு நெஞ்சத் துயவுத்துணை யாக
வொன்னார் தேஎம் பாழ்பட நூறுந்
துன்னருந் துப்பின் வெண்வேற் பொறைய
னகலிருங் கானத்துக் கொல்லி போலத்
தவாஅ லியரோ நட்பே யவள்வயி
னறாஅ லியரோ தூதே பொரூஅர்

விண்பொரக் கழித்த திண்பிடி யொள்வாட்
புனிற்றான் றரவி னிளையர் பெருமகன்
தொகுபோர்ச் சோழன் பொருண்மலி பாக்கத்து
வழங்க லானாப் பெருந்துறை
முழங்கிரு முந்நீர்த் திரையினும் பலவே.

என்பது: அல்ல குறிப்பட்ட தலைமகன் றன்னெஞ்சிற்குச் சொல்லி யது.

—மதுரைக் கணக்காயனார்.

பி - ம். 9. வன்பிற்சுற்ற; யன்புறச்சுற்ற. 17. கணம்பொரக் கழித்த; விண்பெறக்கழித்த.

339. பாலை

வீங்குவிசைப் பணித்த விரைபரி நெடுந்தேர்
நோன்கதிர் சுமந்த வாழியாழ் மருங்கிற்
பாம்பென முடுகுநீ ரோடக் கூம்பிப்
பற்றுவிடு விரலிற் பயறுகா யூழ்ப்ப
அற்சிர நின்றன்றாற் பொழுதே முற்பட
வாள்வினைக் கெழுந்த வசைவி லுள்ளத்
தாண்மை வாங்கக் காமந் தட்பக்
கவைபடு நெஞ்சங் கட்க ணகைய
விருதலைக் கொள்ளி யிடைநின்று வருந்தி
யொருதலைப் படாஅ வுறவி போன்றனெ
னோங்கொ லளிய டானே யாக்கைக்
குயிரியைந் தன்ன நட்பி னவ்வுயிர்
வாழ்த லன்ன காதல்
சாத லன்ன பிரிவரி யோளே.

என்பது: போகாநின்றதலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—†நரைமுடி நெட்டையார்.

பி-ம்: 6. வசையிலுள்ள. 12 குயிரீந்தன்ன. குயிரிட்டு

†விரைமுடி நெட்டையார்.

340. நெய்தல்

* பன்னா ளெவ்வந் தீரப் பகல்வந்து
புன்னையம் பொதும்பி னின்னிழற் கழிப்பி
மாலை மால்கொள நோக்கிப் பண்ணாய்ந்து
வலவன் வண்டே ரியக்க நீயுஞ்
செலவுவிருப் புறுத லொழிகதில் லம்ம
செல்லா நல்லிசைப் பொலம்பூட் டிரையன்
பல்பூங் கானற் பவத்திரி யனவிவ
ணல்லெழி லிளநலந் தொலைய வொல்லெனக்
கழியே யோத மல்கின்று வழியே
வள்ளெயிற் றரவொடு வயமீன் கொட்குஞ்
சென்றோர் மன்ற மான்றின்று பொழுதென
நின்றிறத் தவலம் வீட வின்றிவட்
சேப்பி னெவனோ பூக்கேழ் புலம்ப
பசுமீ னொடுத்த வெண்ணெென் மாஅத்
தயிர்மிதி மிதவை வார்த்துவ நினக்கே
வடவர் தந்த வான்கேழ் வட்டங்
குடபுல வுறுப்பிற் கூட்டுபு நிகழ்த்திய
வண்டிமிர் நறுஞ்சாந் தணிகுவந் திண்டிமி
லெல்லுத்தொழின் மடுத்த வல்வினைப் பரதவர்
கூர்வளிக் கடுவிசை மண்டலிற் பாய்ந்துடன்
கோட்சுறாக் கிழித்த கொடுமுடி நெடுவலை
தண்கட லசைவளி யெறிதொறும் வினைவிட்டு
முன்றிற் றாழைத் தூங்குந்
தெண்கடற் பரப்பினெம் முறைவி னூர்க்கே.

---

* "வேளாண் பெருநெறி வேண்டிய விடத்தும்" என்னும் பகுதிக்கு இப்பாட்டினை உதாரணமாகக் காட்டி, 'இதனுள் தனக்கும் புரவிக்கும் கொடுப்பனகூறித் தடுத்தவாறு காண்க' என்பர் நச். (தொல். பொருள். 114.) உலகியன் மேம்பட விருந்து விலக்கலுக்கு இப்பாட்டினைக் கொள்வர், (அகப். விள. உரை. 149.)

என்பது: பகற்குறிக்கண் தோழி தலைமகற்குச் சொல்லியது

—நக்கீரர்.

பி - ம். 2. னின்னிழறழீஇ. 5. செலவிரு 8. ணல்லெழிலின் னலங் 15. தயிர்மிதி மாஅவார்குவ. 16. வான்கேழ் சாந்தம். 18. சாந்தயர்குவங். 20. கூருளிக் கடுவிசை மாட்டலிற் பாய் புடன். 24. தெண்டிரைப் பரப்பினெம் முறைவி னூரே.

341. பாலை

உய்தகை யின்றாற் றோழி பைப்பயக்
கோங்குங் கொய்குழை யுற்றன குயிலுந்
தேம்பாய் மாஅத் தோங்குசினை விளிக்கு
நாடார் காவிரிக் கோடுதோய் மலிர்நிறைக்
கழையழி நீத்தஞ் சாஅய வழிநாள்
மழைகழிந் தன்ன மாக்கான் மயங்கறல்
பதவுமேய லருந்து துளங்கிமி னல்லேறு
மதவுடை நாக்கொ டசைவீடப் பருகிக்
குறுங்காற் காஞ்சிக் கோதை மெல்லிணர்ப்
பொற்றகை நுண்டா துறைப்பத் தொக்குடன்
குப்பை வார்மண லெக்கர்த் துஞ்சும்
யாணர் வேனின் மன்னிது
மாணல நுகருந் துணையுடை யோர்க்கே.

என்பது: பிரிவின்கட் டோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—ஆலூர் மூலங்கிழார்.

பி - ம். 4. தோடுதோய். 6. மழைமகிழ்ந்தன்ன. 8. நாட்கோளசை.

342. குறிஞ்சி

ஒறுப்ப வோவலை நிறுப்ப நில்லலை
புணர்ந்தோர் போலப் போற்றுமதி நினக்கியான்
கிளைஞ னல்லனோ நெஞ்சே தெறுஅது
வெல்போர்க் கவுரியர் நன்னாட் டுள்ளதை

மண்கொள் புற்றத் தருப்புழை திறப்பி
னுகொண் மூதூர்க் கள்வர் பெருமக
னேவ லிளையர் தலைவன் மேவா
ரருங்குறும் பெறிந்த வாற்றலொடு பருந்துபடப்
பல்செருக் கடந்த செல்லுறழ் தடக்கைக்
கெடாஅ நல்லிசைத் தென்னன் றொடாஅ
நீரிழி மருங்கிற் கல்லளைக் கரந்தவவ்
வரையர மகளிரி னரிய
ளவ்வரி யல்கு லணையாக் காலே.

என்பது: அல்லகுறிப்பட்ட தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லி யது. இப்பாட்டிற் 'செல்'என்பது மேகம்.

—மதுரைக் கணக்காயனுர்.

பி - ம்: 4. கவிரியர். 10. றொடர.

343. பாலை

வாங்கமை புரையும் வீங்கிறைப் பணைத்தோட்
சில்சுணங் கணிந்த பல்பூண் மென்முலை
நல்லெழி லாகம் புல்லுத னயந்து
மரங்கோ ளுமண்மகன் பேரும் பருதிப்
புன்றலை சிதைத்த வன்றலை நடுகற்
கண்ணி வாடிய மண்ணா மருங்குற்
கூருளி குயின்ற கோடுமா யெழுத்தவ்
வாறுசெல் வம்பலர் வேறுபயம் படுக்குங்
கண்பொரி கவலைய கானத் தாங்க
ணனந்தலை யாஅத் தந்தளிர்ப் பெருஞ்சினை
யில்போ னீழற் செல்வெயி லொழிமார்
நெடுஞ்செவிக் கழுதைக் குறுங்கா லேற்றைப்
புறநிறை பண்டத்துப் பொறையசாஅக் களைந்த
பெயர்படை கொள்ளார்க் குயவுத்துணை யாகி
யுயர்ந்த வாள்வினை புரிந்தோய் பெயர்ந்துநின்
றுள்ளினை வாழியென் னெஞ்சே கள்ளின்
மகிழின் மகிழ்ந்த வரிமதர் மழைக்கட்

சின்மொழிப் பொலிந்த துவர்வாய்ப்
பன்மாண் பேதையிற் பிரிந்த நீயே.

என்பது: தலைமகன் இடைச்சுரத்து மீளக்கருதிய நெஞ்சினைக் கழறிப்போயது.

—மதுரை மருதனிளநாகனுர்.

பி-ம். 4. மரங்கொலுமண். 7. கொடுமரபெழுத்த 14. படைகொளாளர்க். 18. செவ்வாய் 19. பெயர்ந்தநீயே.

344. முல்லை

வளமழை பொழிந்த வானிறக் களரி
யுளர்தரு தண்வளி யுறுதொறு நிலவெனத்
தொகுமுகை விரிந்த முடக்காற் பிடவின்
வையேர் வாலெயிற் றொண்ணுதன் மகளிர்
கைமாண் டோளி கடுப்பப் பையென
மயிலினம் பயிலு மரம்பயில் கான
மெல்லிடை யுருஅ வளவை வல்லே
கழலொலி நாவிற் றெண்மணி கறங்க
நிழலொளிப் பன்ன நிமிர்பரிப் புரவி
வயக்குறு கொடிஞ்சி பொலிய வள்பாய்ந்
தியக்குமதி வாழியோ கையுடை வலவ
பசப்புறு படாட வருந்திய
நயப்பின் காதலி நகைமுகம் பெறவே.

என்பது: வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

—மதுரை அளக்கர்ஞாழலார்மகனுர் * மள்ளனுர்.

பி-ம். 3. முதுகாற்பிடவி. 5. கைபாண்டோணி, கையாடோளி. 8. சுழலொலி. 9. நிழலொழிப். *அம்மள்ளனுர்.

345. பாலை

விசும்புதளி பொழிந்து வெம்மை நீங்கித்
தண்பதம் படுதல் செல்கெனப் பன்மா
ணுஞ்செல விழைந்தன மாக வோங்குபுகழ்க்

கானமர் செல்வி யருளலின் வெண்காற்
பல்படைப் புரவி யெய்திய தொல்லிசை
நுணங்குநுண் பனுவற் புலவன் பாடிய
வினமழை தவழு மேழிற் குன்றத்துக்
கருங்கால் வேங்கைச் செம்பூம் பிணைய
லேதேந் தல்குல் யாமணிந் துவக்குஞ்
சின்னாள் கழிக வென்று முன்னா
ணம்மொடு பொய்த்தன ராயினுந் தம்மொடு
திருந்துவே லிளையர் சுரும்புண மலைமார்
மாமுறி யீன்று மரக்கொம் பகைப்ப
வுறைகழிந் துலந்த பின்றைப் பொறைய
சிறுவெள் ளருவித் துவலையின் மலர்ந்த
கருங்கா லுணவின் பெருஞ்சினை வான்பூச்
செம்மணற் சிறுநெறி கம்மென வரிப்பக்
காடுகவின் பெறுக தோழி யாடுவளிக்
கொல்குநிலை யிற்றி யொருதனி நெடுவீழ்
கல்கண் சீக்கு மத்த
மல்குவெயி னீழ லசைந்தனர் செலவே.

என்பது: தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—குடவாயிற் கீரத்தனார்.

பி - ம். 1. நீங்க. 21. மல்குபய நீழ லசைந்தவர்.

346. மருதம்

* நகைநன் றம்ம தானே யிறைமிசை
மாரிச் சுதையி னீர்ம்புறத் தன்ன
கூரற் கொக்கின் குறும்பறைச் சேவல்

* "பிழைத்து வந்திருந்த கிழவனை நெருங்கி, யிழைத்தாங்காக்கிக் கொடுத்தற்கண்" அஃதாவது பரத்தையர் மனைக்கண் தங்கிவந்தான் அகனகர் புகுதாது புறத்திருந்ததலைவனை மிகக்கழறிச்சில மொழிகளைக்கூறி இதனானேதலைவி மனத்தின்கண்ஊடல் நீங்குந்தன்மை உள்ளதாகிக்கூட்டுதற்கண் தோழிக்குக் கூற்றுநிகழும் என்பதற்கு இப்பாட்டினை உதாரணமாகக் காட்டினர் நச். (சொல். பொருள். 150.)

வெள்ளி வெண்டோ டன்ன கயல்குறித்துக்
கள்ளா ருவகைக் கலிமகி ழுழவர்
காஞ்சியங் குறுந்தறி குத்தித் தீஞ்சுவை
மென்கழைக் கரும்பி னன்பல மிடைந்து
பெருஞ்செய் நெல்லின் பாசவல் பொத்தி
வருத்திக் கொண்ட வல்வாய்க் கொடுஞ்சிறை
மீதழி கடுநீர் நோக்கிப் பைப்பயப்
பார்வ லிருக்கும் பயங்கே ழூர
யாமது பேணின்றோ விலமே நீநின்
பண்ணமை நல்யாழ்ப் பாணனொடு விசிபிணி
மண்ணார் முழவின் கண்ணதிர்ந் தியம்ப
மகிழ்துணைச் சுற்றமொடு மட்டு மாந்தி
யெம்மனை வாரா யாகி முன்னா
ளும்மனைச் சேர்ந்த ஞான்றை யம்மனைக்
குறுந்தொடி மடந்தை யுவந்தன ணெடுந்தே
ரிழையணி யானைப் பழையன் மாறன்
மாடமலி மறுகிற் கூட லாங்கண்
வெள்ளத் தானையொடு வேறுபுலத் திறுத்த
கிள்ளி வளவ னல்லமர் சாஅய்க்
கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி
யேதின் மன்ன னூர்கொளக்
கோதை மார்ப னுவகையிற் பெரிதே.

என்பது: தோழி தலைமகற்கு வாயின் மறுத்தது.

—நக்கீரர்.

இப்பாட்டின் கருத்துப் பிறரைப் பார்ப்பான் என்றவாறு.

பி - ம்: 3. குறும்பொறை. 21. வேண்டுபுலத்திறுத்த.

347. பாலை

தோளுந் தொல்கவின் றொலைய நாளு
நலங்கவர் பசலை நல்கின்று நலியச்

சால்பெருந் தானைச் சேர லாதன்
மால்கட லோட்டிக் கடம்பறுத் தியற்றிய
பண்ணமை முரசின் கண்ணதிர்ந் தன்ன
கவ்வை தூற்றும் வெவ்வாய்ச் சேரி
யம்பன் மூது ரலர்நமக் கொழியச்
சென்றன ராயினுஞ் செய்வினை யவர்க்கே
வாய்க்கதில் வாழி தோழி வாயாது
மழைகரந் தொளித்த கழைதிரங் கடுக்கத்
தொண்கேழ் வயப்புலி பாய்ந்தெனக் குவவடி
வெண்கோட் டியானை முழக்கிசை வெரீஇக்
கன்றொழித் தோடிய புன்றலை மடப்பிடி
கைதலை வைத்த மையல் விதுப்பொடு
கெடுமகப் பெண்டிரிற் றேரு
நெடுமர மருங்கின் மலையிறந் தோரே.

என்பது: தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லி யது.

—மாமூலனார்.

348. குறிஞ்சி

என்னா வதுகொ றானே முன்றிற்
றேன்றேர் சுவைய திரளரை மாஅத்துக்
கோடைக் கூழ்த்த கமழ்நறுந் தீங்கனி
பயிர்ப்புறப் பலவி னெதிர்ச்சுளை யளைஇ
யிறாலொடு கலந்த வண்டுமூ சரிய
னெடுங்க ணாடமைப் பழுநிக் கடுந்திறற்
பாப்புக்கடுப் பன்ன தோப்பி வான்கோட்டுக்
கடவு ளோங்குவரைக் கோக்கிக் குறவர்
முறித்தழை மகளிர் மடுப்ப மாந்தி
யடுக்க லேன லிரும்புன மறந்துழி

யானை வவ்வின தினையென நோனா
திளையரு முதியருங் கிளையுடன் குழீஇச்
சிலையாய்ந்து திரிதரு நாட
னிலையா நன்மொழி தேறிய நெஞ்சே.

என்பது: தலைமகன் *சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லெடுப்பத் தலைமகள் சொல்லியது.

மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன்கூத்தனார்.

இதன் கருத்து ஒன்றுசிதைய ஒன்றுசெய்வான் என்றவாறு.

பி - ம்: 2. மாஅத்து. 10. யடுக்கவேனை. 11. தினையெனவேறுனது. 14. நிலையா நின்மொழி. *சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

349. பாலை

அரம்போ ழவ்வளை செறிந்த முன்கை
வரைந்துதாம் பிணித்த தொல்கவின் றொலைய
வெவ்வனுய்ந் தனர்கொ றோழி ஞெமன்ன்
றெரிகோ லன்ன செயிர்தீர் செம்மொழி
யுலைந்த வொக்கல் பாடுநர் செலினே
யுரன்மலி யுள்ளமொடு முனைபா ழாக
வருங்குறும் பெறிந்த பெருங்கல வெறுக்கை
சூழாது சுரக்கு நன்ன னன்னாட்
டேழிற் குன்றத்துக் கவாஅற் கேழ்கொளத்
திருந்தரை நிவந்த கருங்கால் வேங்கை
யெரிமருள் கவள மாந்திக் களிறுதன்
வரிநுதல் வைத்த வலிதேம்பு தடக்கை
கல்லூர் பாம்பிற் றோன்றுஞ்
சொல்பெயர் தேஎத்த சுரனிறந் தோரே.

என்பது: தலைமகன் பிரிவின்கண் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—மாமூலனார்.

பி-ம்: 9. கேழ்கிளரத்.

350. நெய்தல்

கழியே, சிறுகுர னெய்தலொடு காவி கூம்ப
வெறிதிரை யோதந் தரலா னாதே
துறையே, மருங்கிற் போகிய மாக்கவை மருப்பி
னிருஞ்சேற் றீரளை யலவ னிவப்ப
வழங்குந ரின்மையிற் பாடான் றன்றே
கொடுநுக நுழைந்த கணைக்கா லத்திரி
வடிமணி நெடுந்தேர் பூண வேவா
தேந்தெழின் மழைக்க ணிவள்குறை யாகச்
சேர்ந்தனை சென்மோ பெருநீர்ச் சேர்ப்ப
விலங்கிரும் பரப்பி னெறிசுறா நீக்கி
வலம்புரி மூழ்கிய வான்றிமிற் பரதவ
ரொலிதலைப் பணில மார்ப்பக் கல்லெனக்
கலிகெழு கொற்கை யெதிர்கொள விழிதரும்
குவவுமண னெடுங்கோட் டாங்க
ணுவக்காண் டோன்றுமெஞ் சிறுநல் லூரே.

என்பது: *பகற் குறிவந்து நீங்குந் தலைமகற்குத் தோழிசொல்லியது

—சேந்தன் கண்ணனார்.

பி - ம்: 15. ணுவவுக்காண். *பகற் குறிவந்த தலைமகற்குத்.

351. பாலை

வேற்றுநாட் டுறையுள் விருப்புறப் பேணிப்
பெறலருங் கேளிர் பின்வந்து விடுப்பப்
பொருளகப் படுத்த புகன்மலி நெஞ்சமொடு
குறைவினை முடித்த நிறைவி னியக்க
மறிவுறூஉங் கொல்லோ தானே கதிர்தெறக்
கழலிலை யுகுத்த கால்பொரு தாழ்சினை
யழலகைந் தன்ன வங்குழைப் பொதும்பிற்
புழல்வீ யிருப்பைப் புன்காட் டத்த
மறுதர லுள்ளமொடு குறுகத் தோற்றிய

செய்குறி யாழி வைகறோ றெண்ணி
யெழுதுசுவர் நினைந்த வழுதுவார் மழைக்கண்
விலங்குவீ ழரிப்பனி பொலங்குழைத் தெறிப்பத்
திருந்திழை முன்கை யணலசைத் தூன்றி
யிருந்தணை மீது பொருந்துழிக் கிடக்கை
வருந்துதோட் பூசல் களையு மருந்தென
வுள்ளுதொறு படூஉம் பல்லி
புள்ளுத்தொழு துறைவி செவிமுத லானே.

என்பது: பொருண்முற்றி மறுத்தராநின்ற தலைமகன் றன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—பொருந்தி லிளங்கீரனார்.

இப்பாட்டு நிலத்தாற் பாலை.

பி-ம்: 9. மறிதரலுள். 11. நனைந்த. 14. பொருந்துவீக்கிடக்கை.

352. குறிஞ்சி

முடவுமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம்
பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்
பாடிமி ழருவிப் பாறை மருங்கி
னாடுமயின் முன்ன தாகக் கோடியர்
விழவுகொண் மூதூர் விறலி பின்றை
முழவன் போல வகப்படத் தழீஇ
யின்றுணைப் பயிருங் குன்ற நாடன்
குடிநன் குடையன் கூடுநர்ப் பிரியலன்
கெடுநா மொழியல னன்பின னெனநீ
வல்ல கூறி வாய்வதிற் புணர்த்தோய்
நல்லை காணிற் காதலந் தோழீஇ
கடும்பரிப் புரவி நெடுந்தே ரஞ்சி
நல்லிசை நிறுத்த நயவரு பனுவற்
றொல்லிசை நிறீஇய வுரைசால் பாண்மக
னெண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்

புதுவது புனைந்த திறத்தினும்
நாவதுவைவளினு மினியனா லெமக்கே.

என்பது: வரைந்தெய்திய பின்றை மணமனைக்கட்சென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது; வரைவுமலிந்து சொல்லிய தோழிக்குத் தலைமகள் சொல்லியதூஉமாம்.

—*அஞ்சியத்தைமக ணாகையார்.

பி-ம்: 1. முடவுமுதற்பலவின். 4. கோடியிர்: 9. நெடுநா. 10. வல்லிற்கூறி. 11. தோழி. *அஞ்சிலாந்தைமகனார்.

353. பாலை

ஆள்வினைப் பிரிதலு முண்டோ பிரியினுங்
கேளினி வாழிய நெஞ்சே நாளுங்
கனவுக் கழிந்தனைய வாகி நனவி
னாளது செலவு மூப்பினது வரவு
மரிதுபெறு சிறப்பிற் காமத் தியற்கையு
மிந்நிலை யறியா யாயினுஞ் செந்நிலை
யமையா டங்கழை தீண்டிக் கல்லென
ஞெமையிலை யுதிர்த்த வெரிவாய்க் கோடை
நெடுவெண் களரி நீறுமுகந்து சுழலக்
கடுவெயி றிருகிய வேனில் வெங்காட்
டுயங்குநடை மடப்பிணை தழீஇய வயங்குபொறி
யறுகோட் டெழிற்கலை யறுகய நோக்கித்
தெண்ணீர் வேட்ட சிறுமையிற் றழைமறந்
துண்ணீ ரின்மையி னெல்குவன தளர
மரநிழ லற்ற வியவிற் சுரனிறந்
துள்ளுவை யல்லையோ மற்றே யுள்ளிய
விருந்தொழி வறியாப் பெருந்தண் பந்தர்
வருந்தி வருந ரோம்பித் தண்ணெனத்
தாதுதுக ளுதிர்த்த தாழையங் கூந்தல்
வீழித ழலரி மெல்லகஞ் சேர்த்தி

மகிழணி முறுவன் மாண்ட சேக்கை
நம்மொடு நன்மொழி நவிலும்
பொம்ம லோதிப் புனையிழை குணனே.

என்பது: முன்னொருகாலத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைமகன் பொருண்முற்றி வந்திருந்தகாலத்து *மீண்டும் பொருள்கடாவின நெஞ்சிற்குச் சொல்லியது.

—மதுரை அளக்கர்ஞாழலார்மகனார் † மள்ளனார்.

பி - ம்: 3. கழிந்தனையவாகி. 10. வேனிலங்காட். 17. பெருந்தோண் மாதர். *பின்னும்பொருள் வலிக்கப்பட்ட நெஞ்சிற்கு. †அம் மள்ளனார்.

354. முல்லை

மதவலி யானை மறலிய பாசறை
யிடியுமிழ் முரசம் பொருகளத் தியம்ப
வென்றுகொடி யெடுத்தனன் வேந்தனுங் கன்
கறவைப் புல்லினம் புறவுதொ றுகளக் [றொடு
குழல்வாய் வைத்தனர் கோவலர் வல்விரைந்
திளைய ரேகுவனர் பரிய விரியுளைக்
கடுநடைப் புரவி வழிவா யோட
வலவன் வள்புவலி யுறுப்பப் புலவர்
புகழ்குறி கொண்ட பொலந்தா ரகலத்துத்
தண்கமழ் சாந்த நுண்டுக ளணிய
வென்றிகொ ளுவகையொடு புகுதல் வேண்டின்
யாண்டுறை வதுகொ லுனே மாண்ட
போதுறழ் கொண்ட வுண்கட்
டீதி லாட்டி திருநுதற் பசப்பே.

என்பது: வினைமுற்றிய தலைமகற்கு உழையர் சொல்லியது.

—மதுரைத்தமிழ்க்கூத்தன் கடுவன்மள்ளனார்.

பி - ம்: 1. வலியபாசறை. 2. யிடியிமிழ்முரசம். 14. கறவைப் புல்லினம். 10. சுரும்புகுடிகொண்ட.

355. பாலை

மாவும் வண்டளி ரீன்றன குயிலு
மின்றீம் பல்குரற் கொம்பர் நவலு
மூதிலை யொழித்த போதவிழ் பெருஞ்சினை
வல்லோன் றைவரும் வள்ளுயிர்ப் பாலை
நரம்பார்த் தன்ன வண்டின முரலுந்
துணிகயந் துன்னிய தூமண லெக்கர்த்
தாதுகு தண்பொழி லல்கிக் காதலர்
செழுமனை மறக்குஞ் செவ்வி வேனி
றானே வந்தன் றாயி னானா
திலங்குவளை நெகிழ்ந்த வெவ்வங் காட்டிப்
புலந்தனம் வருகஞ் சென்மோ தோழி
யாமே யெமிய மாக நீயே
பொன்னயந் தருளிலை யாகி
யின்னை யாகுத லொத்தன்றா லெனவே.

என்பது: பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—†தங்காற் பொற்கொல்லனார்.

பி - ம்: 10. நெகிழ்த்த. 11. சென்மா. 12. யாமே யெளியமாக.
†தங்கான் முடக்கொற்றனார்; தங்கான்முடக் கோவனார்.

356. மருதம்

மேற்றுறைக் கொளீஇய கழாலிற் கீழ்த்துறை
யுகுவா ரருந்தப் பகுவா யாமை
கம்பு ளியவ னாக விசிபிணித்
தெண்கட் கிணையிற் பிறழு மூர
னிடைநெடுந் தெருவிற் கதுமெனக் கண்டென்
பொற்றொடி முன்கை பற்றின னாக
வன்னா வென்றனெ னவன்கைவிட் டனனே
தொன்னைச் காவாமை நன்னன் பறம்பிற்
சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய

கற்போ னாவினே னாகி மற்றது
செப்பலென் மன்னால் யாய்க்கே நற்றேர்க்
கடும்பகட் டியானைச் சோழர் மருக
னெடுங்கதிர் நெல்லின் வல்லங் கிழவோ
னல்லடி யுள்ளா னாகவு மொல்லார்
கதவ முயறலு முயல்ப வதாஅன்
றொலிபல் கூந்த னம்வயி னருளாது
கொன்றன னாயினுங் கொலைபழு தன்றே
மருவி யாம்பல் கலித்த முன்றுறை
நன்ன னாய்பிரம் பன்ன
மின்னீ ரோதி யென்னைநின் குறிப்பே.

என்பது: பின்னின்ற தலைமகற்குக் குறைநேர்ந்ததோழி தலைமகளைக் குறைநயப்பக் கூறியது.

—பரணர்.

பி-ம்: 8. சாலாமை. 14. நல்லளி; மொன்னார்.

357. பாலை

கொடுமு ளீங்கை சூரலொடு மிடைந்த
வான்முகை யிறும்பின் வயவொடு வதிந்த
வுண்ணாப் பிணவி னுயக்கந் தீரிய
தடமருப் பியானை வலம்படத் தொலைச்சி
வியலறை சிவப்ப வாங்கி முணங்குநிமிர்ந்து
புலவுப்புலி புரண்ட புல்சாய் சிறுநெறி
பயிலிருங் கானத்து வழங்கல் செல்லாது
பெருங்களிற் றினநிரை கைதொடூஉப் பெயருந்
தீஞ்சுளைப் பலவின் றொழுதி யும்பற்
பெருங்கா டிறந்தன ராயினும் யாழநின்
றிருந்திழைப் பணைத்தோள் வருந்த நீடி
யுள்ளா தமைதலோ விலரே நல்குவர
மிகுபெய னிலைஇய தீநீர்ப் பொய்கை
யடைபிறங் கவிழ்ந்த தண்கமழ் நீலங்

காலொடு துயல்வந் தன்னநின்
ஞுயிதழ் மழைக்க ணமர்த்த நோக்கே.

என்பது: பிரிவிடைவேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.

—எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்.

பி - ம்: 8. கைகொளேஉப்பெயருங். 12. நல்குவர்.

358. குறிஞ்சி

நீலத் தன்ன நிறங்கிள ரெருத்திற்
காமர் பீலி யாய்மயிற் றோகை
யின்றீங் குரல துவன்றி மென்சீ
ராடுதகை யெழினலங் கடுப்பக் கூடிக்
கண்ணே ரிதழ தண்ணறுங் குவளைக்
குறுங்தொட ரடைச்சிய நறும்பல் கூழை
நீடுநீர் நெடுஞ்சுனை யாயமொ டாடா
யுயங்கிய மனத்தை யாகிப் புலம்புகொண்
டின்னே யாகிய நின்னிற நோக்கி
யன்னை வினவின ளாயி னன்னோ
வென்னென வுரைக்கோ யானே துன்னிய
பெருவரை யிழிதரு நெடுவெள் ளருவி
யோடை யானை யுயர்மிசை யெடுத்த
வாடுகொடி கடுப்பத் தோன்றுங்
கோடுயர் வெற்ப னுறீஇய நோயே.

என்பது : பகலே சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லியது.

—†மதுரை மருதனிளநாகனார்.

பி-ம்: 10. யென்னை வினவுவளாயி. 11. துன்னிப். †மதுரை மருதங்கண்ணனார்.

359. பாலை

பனிவா ருண்கணும் பசந்த தோளு
நனிபிற ரறியச் சாஅய நாளுங்

கரந்தன முறையு நம்பண் பறியார்
நீடினர் மன்னோ காதல ரெனநீ
யெவன்கை யற்றனை யிகுளை யவரே
வான வரம்பன் வெளியத் தன்னநம்
மாணலந் தம்மொடு கொண்டனர் முறாஅ
தருஞ்சுரக் கவலை யசைஇய கோடியர்
பெருங்கன் மீமிசை யியமெழூந் தாங்கு
வீழ்பிடி கெடுத்த நெடுந்தாள் யானை
சூர்புக லடுக்கத்து மழைமாறு முழங்கும்
பொய்யா நல்லிசை மாவண் புல்லி
கவைக்கதிர் வரகின் யாணர்ப் பைந்தாண்
முதைச்சுவன் முழ்கிய கான்சுடு குரூஉப்புகை
யருவித் துவலையொடு மயங்கும்
பெருவரை யத்த மியங்கி யோரே.

என்பது : பிரிவிடைவேறுபட்ட தலைமகட்குத் தோழிசொல்லியது.

—மாமூலனார்.

பி - ம்: 4. நீடாயினரே. 11. முழக்கும்.

360. நெய்தல்

பல்பூந் தண்பொழிற் பகலுடன் கழிப்பி
யொருகா லூர்திப் பருதியஞ் செல்வன்
குடவயின் மாமலை மறையக் கொடுங்கழித்
தண்சேற் றடைஇய கணைக்கா னெய்த
லுண்டா துண்டு வண்டினந் துறப்ப
வெருவரு கடுந்திற லிருபெருந் தெய்வத்
துருவுட னியைந்த தோற்றம் போல
வந்தி வானமொடு கடலணி கொளாஅ
வந்த மாலை பெயரின் மற்றிவள்
பெரும்புலம் பினளே தெய்ய வதனாற்
பாணி பிழையா மாண்வினைக் கலிமா

துஞ்சூர் யாமத்துத் தெவிட்ட லோம்பி
நெடுந்தே ரகல நீக்கிப் பையெனக்
குன்றிழி களிற்றிற் குவவுமண னீந்தி
யிரவின் வம்மோ வுரவுநீர்ச் சேர்ப்ப
வினமீ னருந்து நாரையொடு பனைமிசை
யன்றில் சேக்கு முன்றிற் பொன்னென
நன்மலர் நறுவீ தாஅம்
புன்னை நறும்பொழிற் செய்தநங் குறியே.

என்பது: பகற்குறிவந்த தலைமகற்குத் தோழி பகற்குறி மறுத்து இரவுக்குறி நேர்ந்தது.

—மதுரைக் கண்ணத்தனார்.

பா-ம்: 12. துஞ்சாயாமத்து. 19. புன்னைய நறும்பொழிற்.

361. பாலை

தூமலர்த் தாமரைப் பூவி னங்கண்
மாயிதழ்க் குவளை மலர்பிணைத் தன்ன
திருமுகத் தலமரும் பெருமதர் மழைக்க
ணணிவளை முன்கை யாயிதழ் மடந்தை
வார்முலை முற்றத்து நூலிடை விலங்கினுங்
கவவுப்புலந் துறையுங் கழிபெருங் காமத்
தின்புறு நுகர்ச்சியிற் சிறந்ததொன் றில்லென
வன்பான் மொழிந்த வென்மொழி கொள்ளாய்
பொருள்புரி வுண்ட மருளி னெஞ்சே
கரியாப் பூவிற் பெரியோ ரார
வழலெழு தித்திய மடித்த யாமை
நிழலுடை நெடுங்கயம் புகல்வேட் டாஅங்
குள்ளுத லோம்புமதி யினிநீ முள்ளெயிற்றுச்
சின்மொழி யரிவை தோளே பன்மலை
வெவ்வறை மருங்கின் வியன்சுர
மெவ்வங் கூர விறந்தனம் யாமே.

என்பது : பொருள்வயிற்பிரிந்து போகாநின்ற தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—எயினந்தைமகனார் இளங்கீரனார்.

இப்பாட்டினுள் 'தித்தியம்' என்பது வேள்விக் குண்டம்.

பி - ம்: 4. ணரிமயிர் முன்கை. 13. குள்ளுத லொழிமதி நீயே.

362. குறிஞ்சி

பாம்புடை விடர பணிநீ ரிட்டுத்துறைத்
தேங்கலந் தொழுக யாறுநிறைந் தனவே
வெண்கோட் டியானை பொருத புண்கூர்ந்து
பைங்கண் வல்லியங் கல்லளைச் செறிய
முருக்கரும் பன்ன வள்ளுகிர் வயப்பிணவு
கடிகொள வழங்கா ராறே யாயிடை
யெல்லிற் றென்னான் வென்வே லேந்தி
நசைதர வந்த நன்ன ராள
னெஞ்சுபழு தாக வறுவியன் பெயரி
னின்றிப் பொழுதும் யான்வா ழலனே
யெவன்கொல் வாழி தோழிநம் மிடைமுலைச்
சுணங்கணி முற்றத் தாரம் போலவுஞ்
சிலம்புநீடு சோலைச் சிதர்தூங்கு நளிர்ப்பி
னிலங்குவெள் ளருவி போலவு
நிலங்கொண் டனவாற் றிங்களங் கதிரே.

என்பது : இரவுக்குறிச்சிறைப்புறமாகத் தோழி சொல்லியது.

—வெள்ளிவீதியார்.

பி - ம்: 1. மணிநீ. 5. முருகரும் பன்ன வல்லுகிர்.

363. பாலை

நிரைசெல லிவுளி விரைவுடன் கடைஇ
யகலிரு விசும்பிற் பகல்செலச் சென்று
மழுகுசுடர் மண்டில மாமலை மறைய
பொழுதுகழி மலரிற் புனையிழை சாஅ

யணையணைந் தினையை யாகல் கணையரைப்
புல்லிலை நெல்லிப் புகரில் பசுங்காய்
கல்லதர் மருங்கிற் கடுவளி யுதிர்ப்பப்
பொலஞ்செய் காசிற் பொற்பத் தாஅ
மத்த நண்ணி யதர்பார்த் திருந்த
கொலைவெங் கொள்கைக் கொடுந்தொழின் மறவ
ராறுசென் மாக்க ளருநிறத் தெறிந்த
வெஃகுறு விழுப்புண் கூர்ந்தோ ரெய்திய
வளைவாய்ப் பருந்தின் வள்ளுகிர்ச் சேவல்
கிளைதரு தெள்விளி கெழுமுடைப் பயிரு
மின்னு வெஞ்சுர மிறந்தோர் முன்னிய
செய்வினை வலத்த ராகி யிவணயந்
தெய்த வந்தனரே தோழி மையெழிற்
றுணையே ரெதிர்மல ருண்கட்
பிணையேர் நோக்கம் பெருங்கவின் கொளவே.

என்பது : பிரிவிடை வேறுபட்ட தலைமகட்குத் தோழிசொல்லியது.

—மதுரைப் பொன்செய்கொல்லன் வெண்ணாகனார்.

பி - ம்: 3. மழுங்குசுடர். 4. சாஅயவீணை. 9. யயர். 12. ரெய்தி. 14. கிளைதரு வெள்விளி கெடுமுடைப் பயிரு. 16. செய்வினைமனத்த.

364. முல்லை

மாதிரம் புதையப் பாஅய்க் கால்வீழ்த்
தேறுடைப் பெருமழை பொழிந்தென வவறோ
றாடுகளப் பறையின் வரிநுணல் கறங்க
வாய்பொன் னவிரிழை தூக்கி யன்ன
நீடிணர்க் கொன்றை கவின்பெறக் காடுடன்
சுடர்புரை தோன்றிப் புதறலைக் கொளாஅ
முல்லை யில்லமொடு மலரக் கல்ல
பகுவாய்ப் பைஞ்சுனை மாவுண மலிரக்
கார்தொடங் கின்றே காலை காதலர்

வெஞ்சின வேந்தன் வியன்பெரும் பாசறை
வென்றி வேட்கையொடு நம்மு முள்ளார்
யாதுசெய் வாங்கொ றோழி நோதகக்
கொலைகுறித் தன்ன மாலை
துணைதரு போழ்தி னீந்தலோ வரிதே.

என்பது: பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

—மதுரை மருதங்கிழார்மகனார் பெருங்கண்ணனார்.

பி - ம்: 5. கவின்பெறக்காட்ட. 12. யாது செய்வர்கொ.

365. பாலை

அகல்வாய் வான மாலிருள் பரப்பப்
பகலாற்றுப் படுத்த பையென் றோற்றமொடு
சினவல் போகிய புன்கண் மாலை
யத்த நடுகல் லாளென வுதைத்த
கான யானைக் கதுவாய் வள்ளுகி
ரிரும்பனை *யிதக்கையி னொடியு மாங்கட்
கடுங்க ணாடவ ரேமுயல் கிடக்கை
வருந ரின்மையிற் களையுநர்க் காணா
வென்றாழ் வெஞ்சுரந் தந்த நீயே
துயர்செய் தாற்றா யாகிப் பெயர்பாங்
குள்ளினை வாழிய நெஞ்சே வென்வேன்
மாவண் கழுவுள் காமூ ராங்கட்
பூதந் தந்த பொரியரை வேங்கைத்
தண்கமழ் புதுமலர் நாறு
மஞ்சி லோதி யாய்மடத் தகையே.

என்பது: தலைமகன் இடைச்சுரத்துநின்று சொல்லியது.

—மதுரை மருதனிளநாகனார்.

---

* இதக்கை - நுங்கின் தலையிலுள்ளதோடு அல்லது பனம் பாளையினடி. இஃது யானையின் கால் நகம்போலும்.

பி - ம்: 7. ரேவியல் கிடக்கை. 11. வாழியெ னெஞ்சே. 12. காழூர். இடைச்சுரத்துச் சொல்லியது.

366. மருதம்

தாழ்சினை மருதந் தகைபெறக் கவினிய
நீர்சூழ் வியன்களம் பொலியப் போர்பழித்துக்
கள்ளார் களமர் பகடுதலை மாற்றிக்
கடுங்காற் றெறியப் போகிய துரும்புடன்
காயற் சிறுதடிக் கண்கெடப் பாய்தலி
னிருநீர்ப் பரப்பிற் பனித்துறைப் பரதவர்
தீம்பொழி வெள்ளுப்புச் சிதைதலிற் சினைஇக்
கழனி யுழவரொடு மாறெதிர்ந்து மயங்கி
யிருஞ்சேற் றள்ள லெறிசெருக் கண்டு
நரைமூ தாளர் கைபிணி விடுத்து
நனைமுதிர் தேற னுளையர்க் கீயும்
பொலம்பூ ணெவ்வி நீழ லன்ன
நலம்பெறு பணைத்தோ ளன்னுத லரிவையொடு
மணங்கமழ் தண்பொழி லல்கி நெருநை
நீதற் பிழைத்தமை யறிந்து
கலுழ்ந்த கண்ண ளெம் மணங்கன் னோளே.

என்பது: பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகன் வாயில்வேண்டிய விடத்துத் தோழி சொல்லியது.

—குடவாயிற் கீரத்தனார்.

இப்பாட்டினுட் "காயற்சிறுதடி" என்பது உப்புப்பாத்தி.

பி - ம்: 3 தலைமா. 6. னீணீர்ப் பரப்பிற். 7. தீம்புளி வெள்ளுப்புச் சிதைத்தலி. 16. மணங்கினோளே.

367. பாலை

இலங்குசுடர் மண்டிலம் புலந்தலைப் பெயர்ந்து
பல்கதிர் மழுங்கிய கல்சே ரமையத்

தலைந்தலை மூதே முண்குரல் விளிப்ப
மனைவளர் நொச்சி யாசேர்பு வதிய
முனையுழை யிருந்த வங்குடிச் சீறூர்க்
கருங்கால் வேங்கைச் செஞ்சுவல் வரகின்
மிகுபத நிறைந்த தொகுகூட் டொருசிறைக்
குவியடி வெருகின் பைங்க ணேற்றை
யூனசைப் பிணவி னுயங்குபசி களைஇயர்
தளிர்புரை கொடிற்றிற் செறிமயி ரெருத்திற்
கதிர்த்த சென்னிக் கவிர்ப்பூ வன்ன
நெற்றிச் சேவ லற்றம் பார்க்கு
புல்லென் மாலையு மினிதுமன் றம்ம
நல்லக வனமுலை யடையப் புல்லுதொ
றுயிர்குழைப் பன்ன சாயற்
செயிர்தீ ரின்றுணைப் புணர்ந்திசி னோர்க்கே.

என்பது : பிரிவிடைவேறுபட்ட தலைமகள் வற்புறுக்குந் தோழிக் குச் சொல்லியது.

—பரணர்.

பி - ம்: 5. முழையுழை யிருந்த. 9. பிணவி னுணங்குபசி.

368. குறிஞ்சி

தொடுதோற் கானவன் சூடுறு வியன்புனங்
கரிபுறங் கழீஇய பெரும்பாட் டீரத்துத்
தோடுவளர் பைந்தினை நீடுகுரல் காக்கு
மொண்டொடி மகளிர்க் கூச லாக
வாடுசினை யொழித்த கோடுணர் கஞலிய
குறும்பொறை யயலது நெடுந்தாள் வேங்கை
மடமயிற் குடுமியிற் றோன்று நாட
னுயர்வரை மருங்கிற் காந்தளஞ் சோலைக்
குரங்கறி வாரா மரம்பயி லிறும்பிற்
கடிசுனைத் தெளிந்த மணிமரு டீநீர்

பிடிபுணர் களிற்றி னெம்மொ டாடிப்
பன்னா ளும்பர்ப் பெயர்ந்து சின்னாள்
கழியா மையே வழிவழிப் பெருகி
யம்பணை விளைந்த தேக்கட் டேறல்
வண்டுபடு கண்ணியர் மகிழுஞ் சீறா
ரெவன்கொல் வாழி தோழி கொங்கர்
மணியரை யாத்து மறுகி னாடு
முள்ளி விழவி னன்ன
வலரா கின்றது பலர்வாய்ப் பட்டே.

என்பது: பகலே சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.

—மதுரை மருதனிளநாகனார்.

பி-ம்: 2-3. டீரத்துக்கோடுவளர். 5-6. கருலிக் குறும்பொறை. 12. பலநா; சிலநாள்; பன்னாளுடிப்.

369. பாலை

கண்டிசின் மகளே கெழீஇ யிமையவனை
யொண்டொடி செறித்த முன்கை யூழ்கொள்பு
மங்கையர் பலபா ராட்டச் செந்தார்க்
கிள்ளையுந் தீம்பா லுண்ணா மயிலியற்
சேயிழை மகளி ராயமு மயரா
தாழியு மலர்பல வணியா கேழ்கொளக்
காழ்புனைந் தியற்றிய வனப்பமை நோன்சுவர்ப்
பாவையும் பலியெனப் பெறாஅ நோய்பொர
விவைகண் டினைவதன் றலையு நினைவிலேன்
கொடியோள் முன்னிய துணரேன் றொடியோ
யின்றுநின் னொலிகுரன் மண்ண லென்றதற்
கெற்புலந் தழிந்தன ளாகித் தற்றகக்
கடலந் தானைக் கைவண் சோழர்
கெடலரு நல்லிசை யுறந்தை யன்ன

நிதியுடை நன்னகர்ப் புதுவது புனைந்து
தமர்மண னயரவு மொல்லாள் சுவர்முத
லோமை நீடிய வுலவை நீளிடை
மணியணி பலகை மாக்காழ் நெடுவேற்
றுணிவுடை யுள்ளமொடு துதைந்த முன்பி
னறியாத் தேஎத் தருஞ்சுர மடுத்த
சிறியோற் கொத்தவென் பெருமடத் தகுவி
சிறப்புஞ் சீரு மின்றிச் சீறூர்
நல்கூர் பெண்டின் புல்வேய் குரம்பை
யோரா யாத்த வொருதூண் மூன்றி
லேதில் வறுமனைச் சிலம்புடன் கழீஇ
மேயினள் கொல்லென நோவல் யானே.

என்பது: மகட்போக்கிய செவிலி சொல்லியது.

—நக்கீரர்.

பி-ம்: 1. மகளை கேழியலெனே; கேழியல்பெனே. 4. கிளியியற். 7. காழ்புணர்ந்தியற்றிய. 12. ளாகிக்கிளர்தார். 24. யோராவார்த்த வொருதாழ்.

370. நெய்தல்

வளைவாய்க் கோதையர் வண்ட றைஇ
யிளையோர் செல்ப வெல்லு மெல்லின்
றகலிலைப் புன்னைப் புகரி னீழற்
பகலே யெம்மொ டாடி யிரவே
காயல் வேய்ந்த தேயா நல்லி
ஞெயொடு வைகுதி யாயி னுந்தை
யருங்கடிப் படுவலு மென்றி மற்றுநீ
செல்ல லென்றலு மாற்றாய் செலினே
வாழலெ னென்றி யாயின் ஞாழல்
வண்டுபடத் ததைந்த கண்ணிய நெய்தற்
றண்ணறும் பைந்தார் துயல்வர வந்திக்
கடல்கெழு செல்வி கரைநின் றாங்கு

நீயே கான லொழிய யானே
வெறிகொள் பாவையிற் பொலிந்தவெ னணிதுறந்
தாடுமகள் போலப் பெயர்த
லாற்றேன் றெய்ய வலர்கவிவ் வூரே.

என்பது: பகலே சிறைப்புறமாகத் தலைமகட்குச்சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.

—அம்மூவனார்.

பி-ம்: 10. கண்ணி.

371. பாலை

அவ்விளிம் புரீஇய விசையமை நோன்சிலைச்
செவ்வாய்ப் பகழிச் செயிர்நோக் காடவர்
கணையிடக் கழிந்ததன் வீழ்துணை யுள்ளிக்
குறுநெடுந் துணைய மறிபுடை யாடப்
புன்கண் கொண்ட திரிமருப் பிரலை
மெய்பத மறுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து
நெய்தலம் படுவிற் சின்னீ ருண்ணு
தேகுறு மாந்தரி னிணைந்துகண் படுக்கும்
பைதற வெம்பிய பாழ்சே ரத்த
மெமிய நீந்து மெம்மினும் பனிவார்ந்
தென்ன வாங்கொ ருமே தெண்ணீ
ராய்சுனை நிகர்மலர் போன்மென நகைஇ
வீதேர் பறவை விழையும்
போதார் கூந்தனங் காதலி கண்ணே.

என்பது: பொருள்வயிற் பிரிந்துபோகாநின்ற தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—எயினந்தைமக னிளங்கீரனார்.

பி-ம்: 7. சிறுநீருண்ணு. 9-10. பாழ்சேரத்தந் தமியநீந்தும்.

372. குறிஞ்சி

அருந்தெறன் மரபிற் கடவுள் காப்பப்
பெருந்தேன் றூங்கு நாடுகா ணனந்தலை

யணங்குடை வரைப்பிற் பாழி யாங்கண்
வேண்முது மாக்கள் வியனகர்க் கரந்த
வருங்கல வெறுக்கையி னரியோள் பண்புநினைந்து
வருந்தின மாதோ வெனினுமஃ தொல்லா
யிரும்பனைத் தொடுத்த பலரா பேசு
லூர்ந்திழி கயிற்றிற் செலவர வருந்தி
நெடுநெறிக் குதிரைக் கூர்வே லஞ்சி
கடுமுனை யலைத்த கொடுவி லாடவ
ராஅடுகொள் பூசலிற் பாடுசிறந் தெறியும்
பெருந்துடி வள்பின் வீங்குபு நெகிழா
மேய்மணி யிழந்த பாம்பி னீநனி
தேம்பினை வாழியெ னெஞ்சே வேந்தர்
கொண்டணி யெயிலிற் காப்புச்சிறந்
நீண்டருங் குரையணம் மணங்கி யோளே.

என்பது: அல்லகுறிப்பட்டுப் போகாநின்ற தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—பரணர்.

பி-ம்: 1. அருந்திறன். 10. கடுமுனை மலைத்த தொடுவி லாடவர்; கடுமுனையலைக்கக் கொடுவிலாடவர். 11. ராகொள். 15. கொண்டணி யெய்விலிற்.

373. பாலை

முனைகவர்ந்து கொண்டெனக் கலங்கிப் பீரெழுந்து
மனைபாழ் பட்ட மரைசேர் மன்றத்துப்
பணைத்தாள் யானை பரூஉப்புற முரிஞ்சிச்
செதுகாழ் சாய்ந்த முதுகாற் பொதியி
லருஞ்சுர நீந்திய வருத்தமொடு கையற்றுப்
பெரும்புன் மாலை புலம்புவந் துறுதர
மீளி யுள்ளஞ் செலவுவலி யுறாப்பத்
தாள்கை பூட்டிய தனிநிலை யிருக்கையொடு
தன்னிலை யுள்ளு நந்நிலை யுணரா

விரும்பல் கூந்தற் சேயிழை மடந்தை
கணையிரு ணடுநா ளணையொடு பொருந்தி
வெய்துற்றுப் புலக்கு நெஞ்சமொ டைதுயிரா
வாயிதழ் மழைக்கண் மல்க நோய்கூர்ந்து
பெருந்தோ ணனைக்குங் கலுழ்ந்துவா ரரிப்பனி
மெல்விர லுகிரிற் றெறியினள் வென்வே
லண்ணல் யானை யடுபோர் வேந்த
ரொருங்ககப் படுத்த முரவுவாய் ஞாயி
லோரெயின் மன்னன் போலத்
துயிறுறந் தனள்கொ லளிய டானே.

என்பது: பிரிந்துபோகாநின்ற தலைமகன் இடைச்சுரத்துத் தன் னெஞ்சிற்குச் சொல்லியது.

—பாண்டியனேனாதி நெடுங்கண்ணனார்.

பி - ம்: 3. பனைத்தாள். பரூஉப்புறமுருஞ்சச். 8. தாழ்கை பூட்டிய.

374. முல்லை

மாக்கடன் முகந்து மாதிரத் திருளி
மலர்தலை யுலகம் புதைய வலனேர்பு
பழங்கண் கொண்ட கொழும்பல் கொண்மூப்
போழ்ந்த போலப் பலவுடன் மின்னித்
தாழ்ந்த போல நணிநணி வந்து
சோர்ந்த போலச் சொரிவன பயிற்றி
யிடியு முழக்கு மின்றிப் பாணர்
வடியுறு நல்யாழ் நரம்பிசைத் தன்ன
வின்குர லழிதுளி தலைஇ நன்பல
பெயல்பெய்து கழிந்த பூநாறு வைகறைச்
செறிமண னிவந்த களர்தோன் றியவிற்
குறுமோட்டு மூதாய் குறுகு றோடி
மணிமண்டு பவளம் போலக் காயா
வணிமிகு செம்ம லொளிப்பன மறையக்
கார்கவின் கொண்ட காமர் காலைச்

* செல்க தேரே நல்வலம் பெறுந
பெருந்தோ ளுணுகிய நுசுப்பிற்
றிருந்திழை யரிவை விருந்தெதிர் கொளவே.

என்பது: பாசறைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச்சொல்லியது.

—இடைக்காடனார்.

பி - ம்: 5. நணியணிவந்து. 15. காமர் மாலை. 18. யிகழ்ந்தெதிர் கொளவே.

375. பாலை

சென்று நீடுந ரல்ல ரவர்வயி
னினைத லானா யென்றிசி னிகுளை
யம்புதொடை யமைதி காண்மார் வம்பலர்
கலனில ராயினுங் கொன்றுபுள் ளூட்டுங்
கல்லா விளையர் கலித்த கவலைக்
கணநரி யினனொடு குழீஇ நிணனருந்து
நெய்த்தோ ராடிய மல்லன் மொசிவிர
லத்த வெருவைச் சேவல் சேர்ந்த
வரைசேர் யாத்த வெண்டிரள் வினைவிற
லெழாஅத் திணிதோட் சோழர் பெருமகன்
விளங்குபுகழ் நிறுத்த விளம்பெருஞ் சென்னி
குடிக்கட னாகலிற் குறைவினை முடிமார்
செம்புறழ் புரிசைப் பாழி நூறி
வம்ப வடுகர் பைந்தலை சவட்டிக்
கொன்ற யானைக் கோட்டிற் றோன்று
மஞ்சுவரு மரபின் வெஞ்சுர மிறந்தோர்
நோயிலர் பெயர்த லறியி
னாழல மன்னோ தோழியென் கண்ணே.

* "செல்க தேரே நல்வலம் பெறுந" என்பது தானுற்ற இன்பத்தினைப் பாகற்குக் கூறியது என்பர் நச். (தொல் பொருள். சூ.146)

என்பது: பிரிவிடை வேறுபட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

†—இடையன் சேந்தங்கோற்றனார்.

பி - ம். 9 - 10 விளைவிற வெழுஉத்திணி. 11. வளம் பெருஞ்.

† இடையன் செங்கொற்றனார்.

376. மருதம்

செல்லன் மகிழ்நநிற் செய்கட னுடையென்மன்
கல்லா யானை கடிபுனல் கற்றென
மலிபுனல் பொருத மருதோங்கு படப்பை
யொலிகதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறைக்
கலிகொள் சுற்றமொடு கரிகால் காணத்
தண்பதங் கொண்டு தவிர்ந்த வின்னிசை
யொண்பொறிப் புனைகழல் சேவடிப் புரளக்
கருங்கச் சியாத்த காண்பி னவ்வயிற்
றிரும்பொலம் பாண்டின் மணியொடு தெளிர்ப்பப்
புனனயந் தாடு மத்தி யணிநயந்து
காவிரி கொண்டொளித் தாங்கு மன்னோ
நும்வயிற் புலத்தல் செல்லே மெம்வயிற்
பசந்தன்று காண்டிசி னுதலே யசும்பி
னந்தூம்பு வள்ளை யழற்கொடி மயக்கி
வண்டோட்டு நெல்லின் வாங்குபீள் விரியத்
துய்த்தலை முடங்கிறாத் தெறிக்கும் பொற்புடைக்
குரங்குளைப் புரவிக் குட்டுவன்
மாந்தை யன்னவென் னலந்தந்து சென்மே.

என்பது: காதற் பரத்தை புலந்து சொல்லியது.

—பரணர்.

377. பாலை

கோடை நீடலின் வாடுபுலத் துக்க
சிறுபுல் லுணவு நெறிபட மறுகி

நுண்பல் லெறும்பு கொண்டளைச் செறித்த
வித்தா வல்சி வீங்குசிலை மறவர்
பல்லூர் புக்குப் பயனிரை கவரக்
கொழுங்குடி போகிய பெரும்பாழ் மன்றத்து
நரைமூ தாள ரதிர்தலை யிறக்கிக்
கவைமனத் திருத்தும் வல்லுவனப் பழிய
வரிநிறச் சிதலை யரித்தலிற் புல்லென்று
பெருநலஞ் சிதைந்த பேஎமுதிர் பொதியி
லின்னா வொருசிறைத் தங்கி யின்னகைச்
சிறுமென் சாயல் பெருநல முள்ளி
வம்பல ராகியுங் கழிப மன்ற
நசைதர வந்தோ ரிரந்தவை
யிசைபடப் பெய்த லாற்று வோரே.

என்பது: பொருள்கடைக்கூட்டியநெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.

—மாறோக்கத்துக் காமக்கணி நப்பாலத்தனார்.

பி - ம்: 1. விற்காடுபுலர்ந்துருகச். 3. லெறும்பினங் கொண்டளைச் செறித்த. 5. பல்லூழ். 12. நலமுன்னி. 13. கழிப்பினறந்தை மன்ற. (மாறோகம்.)

378. குறிஞ்சி

நிதியந் துஞ்சு நிவந்தோங்கு வரைப்பின்
வதுவை மகளிர் கூந்தல் கமழ்கொள
வங்கூ ழாட்டிய வங்குழை வேங்கை
நன்பொ னன்ன நறுந்தா துதிரக்
காமர் பீலி யாய்மயிற் றோகை
வேறுவே றினத்த வரைவாழ் வருடைக்
கோடுமுற் றிளந்தகர்ப் பாடுவிறந் தியல
வாடுகள வயிரி னினிய வாலிப்
பசும்புற மென்சி றொசிய விசும்புகந்

திருங்க ணுடைமைத் தயங்க விருக்கும்
பெருங்க ணுடன் பிரிந்த புலம்பு
முடன்ற வன்னை யமரா நோக்கமும்
வடந்தை தூக்கும் வருபனி யற்சிரச்
சுடர்கெழு மண்டில மழுங்க ஞாயிறு
குடகடல் சேரும் படர்கூர் மாலையு
மனைத்து மடூஉநின்று நலிய வுஞற்றி
யாங்ஙனம் வாழ்தி யென்றி தோழி
நீங்கா வஞ்சினஞ் செய்துநத் துறந்தோ
ருள்ளா ராயினு முளனே யவர்நாட்
டள்ளிலைப் பலவின் கனிகவர் கைய
கல்லா மந்தி கடுவனொ டுகளுங்
கடுந்திற லணங்கி னெடும்பெருங் குன்றத்துப்
பாடின் னருவி சூடி
வான்றோய் சிமையந் தோன்ற லானே.

என்பது: இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழி சொல்லெடுப்பத் தலைமகள் சொல்லியது.

—†காவட்டனார்.

பி - ம்: 8. னினியவாகப். 13. யச்சிர. 16. நலியமீமற். 24. வான்செய் சிமையந். †கரவட்டனார்; காவட்டனார்.

379. பாலை

நின்னயந் துறைவி தொன்னல மழியத்
தெருளா மையிற் றீதொடு கெழீஇ
யருளற நிமிர்ந்த முன்பொடு பொருள்புரிந்
தாள்வினைக் கெதிரிய மீளி நெஞ்சே
நினையினை யாயி னெனவ கேண்மதி
விரிதிரை முந்நீர் மண்டிணி கிடக்கைப்
பரிதியஞ் செல்வம் பொதுமை யின்றி
நனவி னியன்ற தாயினுங் கங்குற்

கனவி னற்றதன் கழிவே யதனான்
விரவுறு பன்மலர் வண்டுசூழ் படைச்சிச்
சுவன்மிசை யசைஇய நிலைதயங் குறுமுடி
யீண்டுபன் னாற்றம் வேண்டுவயி னுவப்பச்
செய்வுறு விளங்கிழைப் பொலிந்த தோள்சேர்
பெய்திய கணைதுயி லேற்றொறுந் திருகி
மெய்புகு வன்ன கைகவர் முயக்கின்
மிகுதிகண் டன்றோ விலனே நீநின்
பல்பொருள் வேட்கையிற் சொல்வரை நீவிச்
செலவுவலி யுறுத்தனை யாயிற் காலொடு
கனையெரி நிகழ்ந்த யிலையி லங்காட்
டிழைப்புறத் தன்ன புள்ளி நீழ
லசைஇய பொழுதிற் பசைஇ வந்திவண்
மறப்பரும் பல்குண நிறத்துவந் துறுதர
வொருதிற நினைத்தல் செல்லாய் திரிபுநின்
றுறுபுலி யுழந்த வடுமருப் பொருத்தற்குப்
பிடியிடு பூசலி னடிபடக் குழிந்த
நிரம்பா நீளிடைத் தூங்கி
யிரங்குவை யல்லையோ வுரங்கெட மெலிந்தே.

என்பது: முன்னொருகாலத்துப் பொருண் முற்றிவந்த தலைமகன் பின்னும் பொருள்கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

பி-ம்: 4. தாள்வினை தருக்கிய. 7. போர்துறை. 12. யீண்டு மணநாற்றம். 19. கனையெரி திகழ்ந்த.

380. நெய்தல்

* தேர்சே ணீக்கித் தமியன் வந்துநும்
மூர்யா தென்ன நணிநணி யொதுங்கி

---

* தோழி தலைமகனை மறுத்தற் கருமைபாராட்டற்கு உதாரண மாகக் கொண்டார் அகப்பொருள் விளக்க உரைக்காரர்(சூ.148)

முன்னாட் போகிய துறைவ னெருநை
யகலிலை நாவ லுண்டுறை யுதிர்த்த
கனிகவின் சிதைய வாங்கிக் கொண்டுதன்
றழை வேரளை வீழ்துணைக் கிடீஉ
மலவற் காட்டி நற்பாற் றிதுவென
நினைந்த நெஞ்சமொடு நெடிதுபெயர்ந் தோனே
யதுக்காண் டோன்றுந் தேரே யின்று
நாமெதிர் கொள்ளா மாயிற் றனது
துணிகுவன் போலா நாணுமிக வுடையன்
வெண்மண னெடுங்கோட்டு மறைகோ
வம்ம தோழி கூறுமதி நீயே.

என்பது: பின்னின்ற தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்குக் குறைநயப்பக் கூறியது.

—மதுரை மருதனிளநாகனார்.

பி-ம்: 1-2. தமியனின் வந்து, நம்மூர் யாதென் றுன்னி நனியொ துங்கி. 2. நீரணி யொதுங்கி. 7. நற்பாற்றம்மென. 9. யுவக் காண். 13. அம்மா வரிவை; அம்மவாழி.

381. பாலை

ஆளி நன்மா னணங்குடை யொருத்தல்
மீளி வேழத்து நெடுந்தகை புலம்ப
வேந்தல் வெண்கோடு வாங்கிக் குருத்தருந்து
மஞ்சுவரத் தகூஉ வாங்கண் மஞ்சுதப
வழல்கான்று திரிதரு மலங்குகதிர் மண்டில
நிழல்சூன் றுண்ட நிரம்பா நீளிடைக்
கற்றுரிக் குடம்பைக் கதநாய் வடுகர்
விற்சினந் தணிந்த வெருவரு கவலைக்
குருதி யாடிய புலவுநா றிருஞ்சிறை
யெருவைச் சேவ லீண்டுகிளைத் தொழுதி
பச்சூன் கொள்ளை சாற்றிப் பறைநிவந்து
சொக்கர் வானின் விசும்பணி கொள்ளு

மருஞ்சுர நீந்திய நம்மினும் பொருந்தார்
முனையரண் கடந்த வினைவ லாளைத்
தேனிமிர் நறுந்தார் வானவ னுடற்றிய
வொன்னாத் தெவ்வர் மன்னெயில் போலப்
பெரும்பாழ் கொண்ட மேனிய ணெடிதுயிர்த்து
வருந்துங்கொ லளிய டானே சுரும்புண
நெடுநீர் பயந்த நிரையிதழ்க் குவளை
யெதிர்மல ரிணைப்போ தன்னதன்
னரிமதர் மழைக்கண் டெண்பனி கொளவே.

என்பது: தலைமகன் இடைச்சுரத்துத் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

—மதுரை இளங்கௌசிகனார்.

பி - ம்: 3. குருகருந்து. 4. மஞ்சுவருதகைய. 9. நாறுஞ் சிறை. 11. பறையறிவந்து. 13. மருஞ்சுர முன்னிய.

382. குறிஞ்சி

பிறருறு விழுமம் பிறரு நோப
தம்முறு விழுமந் தமக்கோ தஞ்சங்
கடம்புகொடி யாத்துக் கண்ணி சூட்டி
வேறுபல் குரல வொருதூக் கின்னியங்
காடுகெழு நெடுவேட் பாடுகொளைக் கேற்ப
வணங்கமர் வியன்களம் பொலியப் பையத்
தூங்குதல் புரிந்தனர் நமரென வாங்கவற்
கறியக் கூறல் வேண்டுந் தோழி
யருவி பாய்ந்த கருவிரன் மந்தி
செழுங்கோட் பலவின் பழம்புணை யாகச்
சாரற் பேரூர் முன்றுறை யிழிதரும்
வறனுற லறியாச் சோலை
விறன்மலை நாடன் சொன்னயந் தோயே.

என்பது: இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லியது.

—கபிலர்.

பி - ம்: 5. பாடுகொளைக்கொப்ப. 6. அணங்கயர்வியன். 9. அருவியாய்ந்த.

383. பாலை

தற்புரந் தெடுந்த வெற்றுறந் துள்ளா
ளூருஞ் சேரியு மோராங் கலரெழக்
காடுங் கானமு மவனொடு துணிந்து
நாடுந் தேயமு நனிபல விறந்த
சிறுவன் கண்ணிக் கேர்தே றுவரென
வாடினை வாழியோ வயலை நாடொறும்
பல்கிளைக் கொடிக்கொம் பலமர மலர்ந்த
வல்குற் றலைக்கூட் டங்குழை யுதவிய
வினையமை வரனீர் விழுத்தொடி தத்தக்
கமஞ்சூற் பெருநிறை தயங்க முகந்துகொண்
டாய்மடக் கண்ண டாய்முக நோக்கிப்
பெய்சிலம் பொலிப்பப் பெயர்வனள் வைகலு
மாரநீ ரூட்டிப் புரப்போர்
யார்மற்றுப் பெறுகுவை யளியை நீயே.

என்பது: மகட்போக்கிய தாய் செல்லியது.

—கயமனார்.

பி - ம்: 1. தற்பயந்; வெற்றுறந்தருளா; 3. காடுங்காவு. 7 - 8. பல்கிளைக் கெடிக்கொம் பலர்ந்த வல்குற், றழையணிக் கூட்டுங் குழைபல வுதவிய. 14. பெறுகுவை யையநீ யெனவே.

384. முல்லை

* இருந்த வேந்த னருந்தொழின் முடித்தெனப்
புரிந்த காதலொடு பெருந்தேர் யானு

---

* இது "பாகன் சிறப்புக் கூறியவாறு" என்றும், "பெருந்தேர் யானு........வாழியோவலவ" என "உள்ளம் போல உற்றுழி உதவிற்றெனத் தலைவன் கூறியவாறு காண்க" என்றும் கூறுவர் நச். (தொல். பொருள். 146, 174.)

மேறிய தறிந்தன் றல்லது வந்தவா று
நனியறிந் தன்றோ விலனே தாஅய்
முயற்பற ழுகளு முல்லையம் புறவிற்
கவைக்கதிர் வரகின் சீறா ராங்கண்
மெல்லிய லரிவை யில்வயி னிறீஇ
யிழிமி னென்றநின் மொழி மருண் டிசினே
வான்வழங் கியற்கை வளிபூட் டினையோ
மானுரு வாகநின் மனம்பூட் டினையோ
வுரைமதி வாழியோ வலவ வெனத்தன்
வரைமருண் மார்பி னளிப்பனன் முயங்கி
மனைக்கொண்டு புக்கன னெடுந்தகை
விருந்தேர் பெற்றன டிருந்திழை யோளே.

என்பது: வினைமுற்றிய தலைமகனது வரவுகண்டு உழையர் சொல்லியது.

—†ஒக்கூர் மாசாத்தியார்.

பி - ம்: †குடவாயிற் கீரத்தனார்.

385. பாலை

தன்னோ ரன்ன வாயமு மயிலிய
லென்னோ ரன்ன தாயருங் காணக்
கைவல் யானைக் கடுந்தேர்ச் சோழர்
காவிரிப் படப்பை யுறந்தை யன்ன
பொன்னுடை நெடுநகர்ப் புரையோ ரயர
நன்மாண் விழவிற் றகர மண்ணி
யாம்பல பணர்ப்பச் சொல்லாள் காம்பொடு
நெல்லி நீடிய கல்லறைக் கவாஅ
னத்த வாலத் தலந்தலை நெடுவீழ்
தித்திக் குறங்கிற் றிருந்த வுரிஞ
வளையுடை முன்கை யளைஇக் கிளைய
பயிலிரும் பிணையற் பசுங்காழ்க் கோவை
யகலமை யல்குல் பற்றிக் கூந்த
லாடுமயிற் பீலியிற் பொங்க நன்றாந்

தானமர் துணைவ னூக்க வூங்கி
யுள்ளாது கழிந்த முள்ளெயிற் றுத் துவர்வாய்ச்
சிறுவன் கண்ணி சிலம்புகழீஇ
யறியாத் தேஎத்த ளாகுதல் கொடிதே.

என்பது: மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

—குடவாயிற் கீரத்தனார்.

பி - ம்: 7. யாம்பால்; செல்லாள்.

386. மருதம்

* பொய்கை நீர்நாய்ப் புலவுநா றிரும்போத்து
வாளை நாளிரை தேரு மூர
நாணினென் பெரும யானே பாணன்
மல்லடு மார்பின் வலியுற வருந்தி
யெதிர்தலைக் கொண்ட வாரியப் பொருந
னிறைத்திரண் முழவுத்தோள் கையகத் தொழிந்த
திறன்வேறு கிடக்கை நோக்கி நற்போர்க்
கணைய னாணி யாங்கு மறையினண்
மெல்ல வந்து நல்ல கூறி
மையீ ரோதி மடவோ யானுநின்
சேரி யேனே யயலி லாட்டியே
னுங்கை யாகுவெ னினக்கெனத் தன்கைத்
தொடிமணி மெல்விர றண்ணெனத் தைவர
நுதலுங் கூந்தலு நீவிப்
பகல்வந்து பெயர்ந்த வாணுதற் கண்டே.

---

* "பரத்தை, தலைவியைப் பேணாது ஒழுகிய ஒழுக்கத்திற்குத் தலைவி நாணிய பொருளின்கண் தலைவற்குத் தோழிகூற்று நிகழும் என்பதற்கு இப்பாட்டினைக் கொண்டு, இதனுள் யான் நினக்குத் தோழியாவேனெனப் பரத்தை நீவிய பேணாவொழுக்கத்திற்குத் தலைவி நாணியதுண்டு தான் நாணினேனென்று தலைவற்குத் தோழி கூறியவாறு காண்க" என்பர் நச். (தொல். பொருள். 150.)

என்பது: தோழி! வாயின்மறுத்தது; தலைமக டகுதிசொல்லிய தூஉமாம்.

—பரணர்.

பி - ம். 2. தரூஉமூர். 6. நிறைத்தாண் முழவுத்தோள்.

387. பாலை

திருந்திழை நெகிழ்ந்து பெருந்தோள் சாஅ
யரிமதர் மழைக்கண் கலுழச் செல்வீர்
வருவீ ராகுத லுரைமின் மன்னோ
வுவருணப் பறைந்த வூன்றலைச் சிறுஅரொ
டவ்வரி கொன்ற கறைசேர் வள்ளுகிர்ப்
பசைவிரற் புலைத்தி நெடிதுபிசைந் தூட்டிய
பூந்துகி லிமைக்கும் பொலன்கா ழல்கு
லவ்வரி சிதைய நோக்கி வெவ்விணை
பயிலரிற் கிடந்த வேட்டுவிளி வெரீஇ
வரிப்புற வீதலின் மணிக்கட் பேடை
நுண்பொறி யணிந்த வெருத்திற் கூர்முட்
செங்காற் சேவற் பயிரு மாங்கண்
வில்லீண் டருஞ்சமந் ததைய நூறி
நல்லிசை நிறுத்த நாணுடை மறவர்
நிரைநிலை நடுகற் பொருந்தி யிமையா
திரைநசைஇக் கிடந்த முதுவாய்ப் பல்லி
சிறிய தெற்றுவ தாயிற் பெரிய
வோடை யானை யுயர்ந்தோ ராயினு
நின்றாங்குப் பெயருங் கானஞ்
சென்றோர் மன்னென விருக்கிற் போர்க்கே.

என்பது: தலைமகளது; குறிப்பறிந்து தோழி தலைமகனைச் செல வழுங்கச் சொல்லியது.

—மதுரை மருதனிளநாகனார்.

பி - ம். 1. திருந்திழை நெகிழ்த்தும். 3. வருவீராகி. 4. புன்றலைச். 8. யெவ்வினைப். 9. பயிலரிற் கலப்பை. 17. தேற்று.

388. குறிஞ்சி

அம்ம வாழி தோழி நம்மலை
யமையறுத் தியற்றிய வெவ்வாய்த் தட்டையி
னறுவிரை யார மறவெறிந் துழுத
வுளைக்குரற் சிறுதினை கவர்தலிற் கிளையமல்
பெருவரை யடுக்கத்துக் குரீஇ யோப்பி
யோங்கிருஞ் சிலம்பி னொள்ளிணர் நறுவீ
வேங்கையங் கவட்டிடை நிவந்த விதணத்துப்
பொன்மரு ணறுந்தா தூதுந் தும்பி
யின்னிசை யோரா விருந்தன மாக
மையீ ரோதி மடநல் லீரே
நொவ்வியற் பகழி பாய்ந்தெனப் புண்கூர்ந்
தெவ்வமொடு வந்த வுயர்மருப் பொருத்தனும்
புனத்துழிப் போக லுறுமோ மற்றெனச்
சினவுக்கொண் ஞமலி செயிர்த்துப்புடை யாடச்
சொல்லிக் கழிந்த வல்விற் காளை
சாந்தா ரகலமுந் தகையு மிகநயந்
தீங்குநா முழக்கு மெவ்வ முணரா
ணன்னர் நெஞ்சமொடு மயங்கி வெறியென
வன்னை தந்த முதுவாய் வேல
னெம்மிறை யணங்கலின் வந்தன் றிந்நோய்
தணிமருந் தறிவ லென்னு மாயின்
வினவி னெவனோ மற்றே கனல்சின
மையல் வேழ மெய்யுளம் போக
வூட்டி யன்ன வூன்புர ளம்பொடு
காட்டுமா னடிவழி யொற்றி
வேட்டஞ் செல்லுமோ நும்மிறை யெனவே.

என்பது: இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது; தோழி தலைமகட்குச் சொல்லியதூஉமாம்.

—ஊட்டியார்

பி - ம். 4. விளைகுரற் சிறுதினை. நொவ்வையிற். 12. தெவ்வுமொடு போந்த. 22. வினவினெவனோ. 25. யொற்ற.

389. பாலை

அறியாய் வாழி தோழி நெறிகுரற்
சாந்தார் கூந்த லுளரிப் போதணிந்து
தேங்கமழ் திருநுதற் றிலகந் தைஇயும்
பல்லித ழெதிர்மலர் கிள்ளி வேறுபட
நல்லிள வனமுலை யல்லியொ டப்பியும்
பெருந்தோட் டொய்யில் வரித்துஞ் சிறுபரட்
டஞ்செஞ் சீறடிப் பஞ்சி யூட்டியு
மெற்புறந் தந்து நிற்பா ராட்டிப்
பல்பூஞ் சேக்கையிற் பகலு நீங்கார்
மனைவயி னிருப்பவர் மன்னே துனைதந்
திரப்போ ரேந்துகை நிறையப் புரப்போர்
புலம்பி லுள்ளமொடு புதுவதந் துவக்கு
மரும்பொருள் வேட்ட மெண்ணிக் கறுத்தோர்
சிறுபுன் கிளவிச் செல்லல் பாழ்பட
நல்லிசை தம்வயி னிறுமார் வல்வேல்
வான வரம்ப னன்னாட் டும்பர்
வேனி னீடிய வெங்கடற் றடைமுத
லாறுசெல் வம்பலர் வேறுபிரிந் தலறக்
கொலைவெம் மையி னிலைபெயர்ந் துறையும்
பெருங்களிறு தொலைச்சிய விருங்கே ழேற்றை
செம்புல மருங்கிற் றன்கால் வாங்கி
வலம்படு வென்றியொடு சிலம்பகஞ் சிலம்பப்
படுமழை யுருமின் முழங்கு
நெடுமர மருங்கின் மலையிறந் தோரே.

என்பது: பிரிவிடை வேறுபட்ட தலைமகள் வற்புறுக்குந் தோழிக்குச் செல்லியது.

—நக்கீரனார்.

பி-ம்: 6. தரித்துஞ்; 8. பாராட்ட 1. மனைவயினிருந்தவர் துணை. 12. புலம்பியவுள்ள; புதுவதுந்துய்க்கும். 13. பெரும்பொருள்.

390 நெய்தல்.

உவர்விளை யுப்பின் கொள்ளை சாற்றி
யதர்படு பூழிய சேட்புலம் படருந்
ததர்கோ லுமணர் போகு நெடுநெறிக்
கணநிரை வாழ்க்கை தானன்று கொல்லோ
வணர்சுரி முச்சி முழுதுமற் புரள
வைதக லல்குல் கவின்பெறப் புனைந்த
பல்குழைத் தொடலை யொல்குவயி னொல்கி
நெல்லு முப்பு நேரே யூரீர்
கொள்ளீ ரோவெனச் சேரிதொறு நுவலு
மவ்வாங் குந்தி யமைத்தோ ளாய்நின்
மெய்வா ழுப்பின் விலையெய் யாமெனச்
சிறிய விலங்கின மாகப் பெரியதன்
னரிவே யுண்க ணமர்த்தன நோக்கி
யாரீ ரோவெம் விலங்கி யீஇரென
வூரன் முறுவலள் பேர்வன ணின்ற
சின்னிரை வால்வளைப் பொலிந்த
பன்மாண் பேதைக் கொழிந்ததெ னெஞ்சே.

என்பது: தலைமகன் பாங்கற்குச் சொல்லியது; நெஞ்சிற்குச் சொல்லியதூஉமாம்.

—அம்மூவனார்.

பி-ம்: 1. உயர்விளை. 2. யதர்படுவழிய. 3. ஞருநெடு. 4. வாழ்க்கைக் கானன்று 9. சேரிதொறியலு. 11. விலையேயாமென. 15. போவனணின்ற. 17. பன்மாண்கோதை.

391. பாலை

பார்வல் வெருகின் கூரெயிற் றன்ன
வரிமென் முகைய நுண்கொடி யதிரல்

மல்ககல் வட்டியர் கொளவிடம் பெறூஅர்
விலைஞ ரொழித்த தலைவேய் கான்மலர்
தேம்பாய் முல்லையொடு ஞாங்கர்ப் போக்கித்
தண்ணறுங் கதுப்பிற் புணர்ந்தோர் புனைந்தவென்
பொதிமாண் முச்சி காண்டொறும் பண்டைப்
பழவணி யுள்ளப் படுமாற் றோழி
யின்றொடு சின்னாள் வரினுஞ் சென்றுநனி
படாஅ வாகுமெங் கண்ணே கடாஅ
வான்மருப் பசைத்தல் செல்லாது யானைதன்
வாய்நிறை கொண்ட வலிதேம்பு தடக்கை
குன்றுபுகு பாம்பிற் றோன்று
மென்றாழ் வைப்பிற் சுரனிறந் தோரே.

என்பது: பிரிவிடை வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—†காவன்முல்லைப் பூதனார்.

பி - ம்: † 3. பல்லகல். 7. பன்முடி. † காவன் முல்லைப்பூதத்தனார்.

392. குறிஞ்சி

தாழ்பெருந் தடக்கை தலைஇக் கானத்து
வீழ்பிடி கெடுத்த வெண்கோட் டியானை
யுண்குளகு மறுத்த வுயக்கத் தன்ன
பண்புடை யாக்கைச் சிதைவுநன் கறீஇப்
பின்னிலை முனியா னாகி நன்றுந்
தாதுசெய் பாவை யன்ன தையன்
மாதர் மெல்லியன் மடநல் லோள்வயிற்
றீதின் றாக நீபுணை புகுகென
வென்னுந் தண்டு மாயின் மற்றவ
னழிதகப் பெயர்த னளியின் றேதே
யொல்லினி வாழி தோழி கல்லெனக்
கணமழை பொழிந்த கான்மடி யிரவிற்

றினைமே யானை யினனிரிந் தோடக்
கல்லுயர் கழுதிற் சேணோ னெறிந்த
வல்வாய்க் கவணின் கடுவெடி யொல்லென
மறப்புலி யுரற வாரணங் கதற
நனவுறு கட்சியி னன்மயி லால
மலையுடன் வெரூஉம் மாக்கல் வெற்பன்
பிரியுந னாகலோ வரிதே யதாஅன்
றரிதல் பண்பிற் பிரியுந னாயின்
வினைதவப் பெயர்ந்த வென்வேல் வேந்தன்
முனைகொ றானையொடு முன்வந் திறுப்பத்
தன்வரம் பாகிய மன்னெயி லிருக்கை
யாற்றா மையிற் பிடித்த வேல்வலித்
தோற்றம் பிழையாத் தொல்புகழ் பெற்ற
விழைதக வோங்கிய கழைதுஞ்சு மருங்கிற்
கானமர் நன்னன் போல
யானா குவனின் னலந்தரு வேனே.

என்பது: பின்னின்ற தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்குக் குறைநயப்பக் கூறியது.

—மோசிகீரனார்.

பி-ம். 1. தலைஇய கான. 6. தேயன். 16. மறப்புலி யுற்றவாரணங். 18. மிலையுடன் வரூஉம். 24. யாற்றருமையிற் பிடித்துவேல். 25. பிழைவர.

393. பாலை

கோடுயர் பிறங்கற் குன்றுபல நீந்தி
வேறுபுலம் படர்ந்த வினைதர லுள்ளத்
தாறுசெல் வம்பலர் காய்பசி தீரிய
விதைச்சுவற் கலித்த வீரிலை நெடுந்தோட்டுக்
கவைக்கதிர் வரகின் காெருகு பொங்கழி
கவட்டடிப் பொருத பல்சினை யுதிர்வை

யகன்கட் பாறைச் செவ்வயிற் றெறீஇ
வரியணி பணைத்தோள் வார்செவித் தன்னையர்
பண்ணை வெண்பழத் தரிசி யேய்ப்பச்
சுழன்மரஞ் சொலித்த சுளகலை வெண்காழ்
தொடிமா ணுலக்கை யூழிற் போக்கி
யுரன்முகங் காட்டிய சுரைநிறை கொள்ளை
யாங்க ணிருஞ்சுனை நீரொடு முகவாக்
களிபடு குழிசிக் கல்லடுப் பேற்றி
யிணர்ததை கடுக்கை யீண்டிய தாதிற்
குடவர் புழுக்கிய பொங்கவிழ்ப் புன்கம்
மதர்வை நல்லான் பாலொடு பகுக்கு
நிரைபல குழீஇய நெடுமொழிப் புல்லி
தேன்றூங் குயர்வரை நன்னாட் டும்பர்
வேங்கட மிறந்தன ராயினு மாண்டவர்
நீடலர் வாழி தோழி தோடுகொ
ளுருகெழு மஞ்ஞை யொலிசீ ரேய்ப்பத்
தகர மண்ணிய தண்ணறு முச்சிப்
புகரில் குவளைப் போதொடு தெரியிதழ்
வேனி லதிரல் வேய்ந்தநின்
னேமுறு புணர்ச்சி யின்றுயின் மறந்தே.

என்பது: பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழிவற்புறுத்தியது

—மாமூலனார்.

பி-ம். 3-4. காய்பசி நீரமுதை. 6. பல்கிளையுதிர்பவை. 7. பாறை வெவ்வயிற். 8. வான்செவித் தன்னையர். 24. தகரிதழ்.

394. முல்லை

களவும் புளித்தன விளவும் பழுநின
சிறுதலைத் துருவின் பழுப்புறு விளைதயி
ரிதைப்புன வரகி னவைப்புமா ணரிசியொடு
கார்வாய்த் தொழிந்த வீர்வாய்ப் புற்றத்

தீயல்பெய் தட்ட வின்புளி வெஞ்சோறு
சேதான் வெண்ணெய் வெம்புறத் துருக
விளைய ரருந்தப் பின்றை நீயு
மிடுமுள் வேலி முடக்காற் பந்தர்ப்
புதுக்கலத் தன்ன செவ்வாய்ச் சிற்றிற்
புனையிருங் கதுப்பினின் மனையோ ளயரப்
பாலுடை யடிசி றொடீஇய வொருநாள்
மாவண் டோன்றல் வந்தனை சென்மோ
காடுறை யிடையன் யாடுதலைப் பெயர்க்கு
மடிவிடு வீளை வெரீஇக் குறுமுயல்
மன்ற விரும்புத லொளிக்கும்
புன்புல வைப்பினெஞ் சிறுநல் லூரே.

என்பது: இரவுக்குறித் தலைமகளை இடத்துய்த்துவந்து தோழி தலைமகனை வரைவுகடாயது.

—நன்பலூர்ச் சிறுமேதாவியார்.

பி - ம். 2. பருப்பூற்றி 4. கார்வாய்ப் பொழிந்த. 11. பாலடையடி; பொருநாண். 13. தலைபெயர்க்கும். 16. சிறுநலனூரே.

395. பாலை

தண்கயம் பயந்த வண்காற் குவளை
மாரி மாமலர் பெயற்கேற் றன்ன
நீரொடு நிறைந்த பேரமர் மழைக்கண்
பனிவா ரெவ்வந் தீர வினிவரி
னன்றுமன் வாழி தோழி தெறுகதி
ரீர நைத்த நீரறு நனந்தலை
யழன்மேய்ந் துண்ட நிழன்மா யியவின்
வறன்மரத் தன்ன கவைமருப் பெழிற்கலை
யறலவிர்ந் தன்னதேர் நசைஇ யோடிப்
புலம்புவழிப் பட்ட வுலமர லுள்ளமொடு
மேய்பிணைப் பயிரு மெலிந்தழி படர்குர
லருஞ்சுரஞ் செல்லுந ராட்செத் தோர்க்குந்

திருந்தரை ஞெமைய பெரும்புனக் குன்றத்
தாடுகழை யிருவெதிர் நரலுங்
கோடுகாய் கடற்ற காடிறந் தோரே.

என்பது: பிரிவிடைத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

—எயினந்தைமகனார் இளங்கீரனார்.

பி-ம்: 2. மாரியாம்பல். 9. யறலிவர். 11. டோய்பிணை.

396. மருதம்

*தொடுத்தென் மகிழ்ந செல்லல் கொடித்தேர்ப்
பொலம்பூ ணன்னன் புன்னாடு கடிந்தென
யாழிசை மறுகிற் பாழி யாங்க
ணஞ்ச லென்ற வாஅ யெயின
னிகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்
தன்னுயிர் கொடுத்தன்ன சொல்லிய தமையாது
தெறலருங் கடவுண் முன்னர்த் தேற்றி
மெல்லிறை முன்கை பற்றிய சொல்லிறந்
தார்வ நெஞ்சந் தலைத்தலை சிறப்பநின்
மார்புதரு கல்லாய் பிறனா யினையே
யினியான் விடுக்குவெ னல்லென் மந்தி
பனிவார் கண்ணள் பலபுலந் துறையக்
கடுந்திற லத்தி யாடணி நசைஇ
நெடுநீர்க் காவிரி கொண்டொளித் தாங்குநின்
மனையோள் வவ்வலு மஞ்சுவல் சினைஇ
யாரிய ரலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்
வஞ்சி யன்னவென் னலந்தந்து செம்மே.

* "இவற்றொடு பிறவும் கண்ணிய காமக் கிழத்தி மேன" என்ற பகுதியுள் 'பிறவும்' என்றதனால் தலைவனைக் காமக்கிழத்தி என்னலந்தா எனத் தொடுத்துக் கூறுவதுங் கொள்க என்று இப்பாட்டினைக் காட்டுவர் நச் (தொல். பொருள். 151.)

என்பது: காதற்பரத்தை தலைமகற்குச் சொல்லியது.

—பரணர்.

பி - ம்: 2. புள்ளுநாடு. 6. கொடுத்தனனே. 14. கொண்டொழித்.
18. பணித்தோன்.

397. பாலை

என்மகள் பெருமடம் யான்பா ராட்டத்
தாய்தன் செம்மல் கண்டுகட னிறுப்ப
முழவுமுகம் புலரா விழவுடை வியனகர்
மணனிடை யாகக் கொள்ளான் கல்பகக்
கணமழை துறந்த கான்மயங் கழுவ
மெளிய வாக வேந்துகொடி பரந்த
பொறிவரி யல்குன் மாஅ யோட்கெனத்
தணிந்த பருவஞ் செல்லான் படர்தரத்
துணிந்தோன் மன்ற துனைவெங் காளை
கடும்பகட் டொருத்த னடுங்கக் குத்திப்
போழ்புண் படுத்த பொரியரை யோமைப்
பெரும்பொளிச் சேயரை நோக்கி யூன்செத்துக்
கருங்கால் யாத்துப் பருந்துவந் திறக்குஞ்
சேணுயர்ந் தோங்கிய வானுயர் நெடுங்கோட்டுக்
கோடை வெவ்வளிக் குலமரும்
புல்லிலை வெதிர நெல்விளை காடே.

என்பது: மகட்போக்கிய செவிலித்தாய் சொலியது.

—கயமனார்.

பி - ம்: 15. வெவ்வளிக் குரல. குலமரூஉம்.

398. குறிஞ்சி

இழைநிலை நெகிழ்ந்த வெவ்வங் கூரப்
படர்மலி வருத்தமொடு பலபுலந் தசைஇ
மென்றோ ணெகிழச் சாஅய்க் கொன்றை
யூழுறு மலரிற் பாழ்பட முற்றிய

பசலை மேனி நோக்கி நுதல்பசந்
தின்னே மாகிய வெம்மிவ ணருளா
னும்மோன் செய்த கொடுமைக் கிம்மென் .
றலமரன் மழைக்கண் டெண்பனி மல்க
நன்றுபுற மாறி யகறல் யாழநின்
குன்றுகெழு நாடற் கென்னெனப் படுமோ
கரைபொரு நீத்த முரையெனக் கழறி
நின்னொடு புலத்த லஞ்சி யவர்மலைப்
பன்மலர் போர்த்து நாணுமிக வொடுங்கி
மறைந்தனை கழியு நிற்றந்து செலுத்தி
நயனறத் துறத்தல் வல்லி யோரே
நொதும லாள ரதுக ணோடா
தழற்சினை வேங்கை நிழற்றவிர்ந் தசைஇ
மாரி புறந்தர நந்தி யாரியர்
பொன்படு நெடுவரை புரையு மெந்தை
பல்பூங் கானத் தல்கி யின்றிவட்
சேர்ந்தனை செலினே சிதைகுவ துண்டோ
குயவரி யிரும்போத்துப் பொருத புண்கூர்ந்
துயங்குபிடி தழீஇய மதனழி யானை
வாங்கமைக் கழையி னரலுமவ
ரோங்குமலை நாட்டின் வருஉ வோயே.

என்பது: காமமிக்க கழிபடர்கிளவியால் வரைவிடத்துக்கண் தலைமகள், தலைமகன் வரையினின்றும்போந்த ஆற்றொடுபுலந்து சொல்லியது.

—இம்மென் கீரனார்.

பி-ம்: 1. இழைநிலை நெகிழ. 7. கொடுமை கம்மென். 9. மாகி. 14. நின்றந். 25. னடு வருஉ.

399. பாலை

சிமையக் குரல சாந்தருந்தி யிருளி
யிமயக் கான நாறுங் கூந்த

னன்னுத லரிவை யின்னுற லாகம்
பருகு வன்ன காத லுள்ளமொடு
திருகுபு முயங்க லின்றி யவணீடார்
கடற்றடை மருங்கிற் கணிச்சியிற் குழித்த
வுடைக்க ணீண்டமை யூற லுண்ட
பாடின் றெண்மணிப் பயங்கெழு பெருநிரை
வாடுபுலம் புக்கெனக் கோடுதுவைத் தகற்றி
யொல்குநிலைக் கடுக்கை யல்குநிழ லசைஇப்
பல்லான் கோவலர் கல்லா தூதுஞ்
சிறுவெதிர்ந் தீங்குழற் புலம்புகொ டெள்விளி
மையில் பளிங்கி னன்ன தோற்ற
பல்கோ ணெல்லிப் பைங்கா யருந்தி
மெல்கிடு மடமரை யோர்க்கு மத்தங்
காய்கதிர் கடுகிய கவினழி பிறங்கல்
வேய்கண் ணுடைந்த சிமைய
வாய்படு மருங்கின மலையிறந் தோரே.

என்பது: தலைமகன்பிரிவின்கண் தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

—எயினந்தைமகனார் இளங்கீரனார்.

பி - ம்: 1. சாஅர்ந்திருளி.

400. நெய்தல்

நகைநன் றம்ம தானே யவனொடு
மனையிறந் தல்கினு மலரென நயந்து
கான லல்கிய நங்கள வகலப்
பல்புரிந் தியற லுற்ற நல்வினை
நூலமை பிறப்பி னீல வுத்திக்
கொய்ம்மயி ரெருத்தம் பிணர்படப் பெருகி
நெய்ம்மிதி முனைஇய கொழுஞ்சோற் றார்கை
நிரலியைந் தொன்றிய செலவிற் செந்தினைக்

குரல்வார்ந் தன்ன குலவுத்தலை நன்னான்கு
வீங்குசுவன் மொசியத் தாங்குநுகந் தழீஇப்
பூம்பொறிப் பல்படை யொலிப்பப் பூட்டி
மதியுடை வலவ னேவலி னிகுதுறைப்
புனல்பாய்ந் தன்ன வாமான் றிண்டேர்க்
கணைகழிந் தன்ன நோன்கால் வண்பரி
பால்கண் டன்ன வூதை வெண்மணற்
கால்கண் டன்ன வழிபடப் போகி
யயிர்ச்சேற் றள்ள லழுவத் தாங்க
ணிருணீ ரிட்டுச்சுர நீந்தித் துறைகெழு
மெல்லம் புலம்பன் வந்த ஞான்றைப்
பூமலி யிருங்கழித் துயல்வரு மடையொடு
நேமி தந்த நெடுநீர் நெய்தல்
விளையா விளங்க ணாறப் பலவுடன்
பொதியவிழ் தண்மலர் கண்டு நன்றும்
புதுவ தாகின் றம்ம பழவிறற்
பாடெழுந் திரங்கு முந்நீர்
நீடிரும் பெண்ணைநம் மழுங்க லூரே.

என்பது: தலைமகன் வரைந்தெய்திய பின்றைத் தோழி தலைமகட்குச் சொல்லியது.

—உலோச்சனார்.

பி-ம்: 5. மரபி. உந்தி. 9. குவவுத்தலைநண்ண. 10. நுகந் தளரா. 23. பொதியவிழ்ந் தலரக் கண்டு.

நெடுந்தொகை ஆகும் அகநானூறு நிறைவேறியது.

ஸ்ரீ:

பாயிரம்

நின்ற நீதி வென்ற நேமிப்
பழுதில் கொள்கை வழுதிய ரவைக்க
ணறிவுவீற் றிருந்த செறிவுடை மனத்து
வான்றோய் நல்லிசைச் சான்றோர் குழீஇ
யருந்தமிழ் மூன்றுந் தெரிந்த காலை
யாய்ந்த கொள்கைத் தீந்தமிழ்ப் பாட்டு
ணெடிய வாகி யடிநிமிர்ந் தொழுகிய
வின்பப் பகுதி யின்பொருட் பாட
னானூ றெடுத்து நூனவில் புலவர்
களித்த மும்மதக் களிற்றி யானைநிரை
மணியொடு மிடைந்த வணிகிளர் பவள
மேவிய நித்திலக் கோவை யென்றாங்
கத்தகு பண்பின் முத்திற மாக
முன்னினர் தொகுத்த நன்னெடுந் தொகைக்குக்
கருத்தெனப் பண்பினோ ருரைத்தவை நாடி
னவ்வகைக் கவைதாஞ் செவ்விய வன்றி
யரியவை யாகிய பொருண்மை நோக்கிக்
கோட்ட மின்றிப் பாட்டொடு பொருந்தத்
தகவொடு சிறந்த வகவ னடையாற்
கருத்தினி தியற்றி யோனே பரித்தேர்
வளவர் காக்கும் வளநாட் டுள்ளு
நாடெனச் சிறந்த பீடுகெழு சிறப்பிற்
கெடலருஞ் செல்வத் திடையள நாட்டுத்
தீதில் கொள்கை மூதூ ருள்ளு
மூரெனச் சிறந்த சீர்கெழு மணக்குடிச்
செம்மை சான்ற தேவன்
றொன்மை சாற்ற நன்மை யோனே.

இத்தொகைக்குக் கருத்து அகவலாற் பாடினுன், இடையளநாட்டு மணக்குடியான் பால்வண்ண தேவனுன வில்லவதரையன்.

நெடுந்தொகை நானூறுங் கருத்தினேடு முடிந்தன. இவைபாடின கவிகள் நூற்றுநாற்பத்தைவர்.

இத்தொகைப்பாட்டிற் கடியளவு சிறுமை பதின் மூன்று; பெருமை முப்பத்தொன்று. தொகுப்பித்தான் பாண்டியனுக்கிரப்பெருவழுதி. தொகுத்தான் மதுரை உப்பூரிகுடிகிழான்மகனுவான் உருத்திரசன்மனென்பான்.

"வண்டுபடத் ததைந்த கண்ணி" என்பது முதலாக "நெடுவேண் மார்பின்" என்பதீருகக் கிடந்த பாட்டு நூற்றிரு பதும் களிற்றியானை நிரை யெனப்படும். இப்பெயர் காரணத்தாற் பெற்றது; இது பொருட்காரணமாகக் கொள்க.

"இத்தொகையிற் பாட்டிற்கடியளவு பதின்மூன்றிற்கொண்டு. முப்பத்தேழளவு முயரப்பெறும்.

"வண்டுபடத் ததைந்த" என்பது முதலாக "நெடுவேண்மார் பின்" என்பதீருகக் கிடந்த நூற்றிருபது பாட்டும் "களிற்றியானை நிரை"; இப்பெயர் காரணப்பெயர்; செய்யுட் காரணமோ பொருட் காரணமோ எனிற் பொருட்காரணமென வுணர்க.

"நாணகையுடைய நெஞ்சே" என்பது முதலாக "நாள்வலை" என்பதீருகக் கிடந்த நூற்றெண்பது பாட்டும் "மணிமிடைபவளம்"; இப்பெயர் உவமையாற்பெற்ற பெயர், செய்யுளும் பொருளுந் தம்முள் ளொவ்வாமையால்.

"வறனுறு" என்பது முதலாக "நகைநன்று" என்பதீருகக் கிடந்தபாட்டுநூறும் "நித்திலக்கோவை"; இவை செய்யுளும் பொருளு மொக்குமாகலின்.

வழக்கத்தாற் பாட்டாராய்ந்து தொகுத்தான் மதுரை யுப்பூரி கிழான் மகனுவான் உருத்திரசருமன்; தொகுப்பித்தான் பாண்டிய னுக்கிரப்பெருவழுதி.

அகநானூறு முடிந்தது" என்றும் பாடம்.

"நாணகையுடைய" என்பது முதலாக "நாள்வலை முகந்த கோள்வலைப் பரதவர்" என்பதீறாகக் கிடந்தபாட்டு நூற்றெண்பதும் மணிமிடைபவளம் எனப்படும். இது வுங்காரணப் பெயர்; என்னை? செய்யுளும் பொருளும் ஒவ்வாமையால்.

"வறனுறுசெய்தி" என்பது முதலாக "நகைநன்றம்ம தானேயவனொடு" என்பதீறாகக் கிடந்த பாட்டுநூறும் நித்திலக் கோவை யெனப்படும்; செய்யுளும் பொருளு மொக்குமாகலான்.

வியமெல்லாம் வெண்டே ரியக்கங் கயமலர்ந்த
தாமரையா றாகத் தகைபெறீஇக் காமர்
நறுமுல்லை நான்காக நாட்டி வெறிமாண்ட
வெட்டு மிரண்டுங் குறிஞ்சியாக் குட்டத்
திவர்திரை பத்தா வியற்பட யாத்தான்
றொகையி னெடியதனைத் தோலாச் செவியான்
வகையி னெடியதனை வைப்பு.

ஒன்றுமூன் றைந்தேழொன் பான்பாலை யோதாது
நின்றவற்றி னான்கு நெறிமுல்லை—யன்றியே
யாறு மருத மணிநெய்த லையிரண்டு
கூறு தவைகுறிஞ்சிக் கூற்று.

பாலை வியமெல்லாம் பத்தாம் பனிநெய்த
னாலு நளிமுல்லை நாடுங்கான்—மேலையோர்
தேறு மிரண்டெட் டிவைகுறிஞ்சி செந்தமிழி
னாறு மருத * மகம்.

ஹரி: ஓம்.

* முவை என்றும் பாடம்.